
# நாயகக் காவியம்



மூதூர். எம்.எம்.ஏ.அனஸ்

Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

# நாயகக் காவியம்

மூதூர். எம். எம். ஏ. அனஸ்



Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org


# நூல் விபரம்


| | | |
|---|---|---|
| ➢ நூலின் பெயர் | : | நாயகக் காவியம் |
| ➢ விடயம் | : | கவிதை (காவியம்) |
| ➢ ஆசிரியர் | : | மூதூர் . எம். எம். ஏ. அனஸ் |
| ➢ அட்டைப் படம் | : | P. விஜே |
| ➢ வெளியீடு | : | மூதூர் கலை இலக்கிய ஒன்றியம் |
| ➢ உரிமை | : | ஆசிரியருக்கு |
| ➢ முதற்பதிப்பு | : | ஜூன் - 2014 |
| ➢ பிரதிகள் | : | 500 |
| ➢ ISBN | : | 978 – 955 – 41569 – 0 – 6 |
| ➢ விலை | : | 250/= |




Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

# சமர்ப்பணம்

அண்ணல் நபி பெருமானின் ஆனபெரும் வரலாற்றை
அருமைமிகு காவியமாய் அழகு தமிழ் மொழியினிலே
நன்முறையில் நான்யாத்து நானிலத்தில் என்பேறாய்
நன்றென்றேவாய்த்திட்ட நெஞ்சம் நிறை என்பெற்றோர்

சதக்குலெவ்வை முகம்மது முகைதீன்
முகம்மது முகைதீன் சபியா உம்மா.

என்போர்க்குத் தந்திட்டேன் ஏற்றமிகு சமர்ப்பணமாய்
என்னிறையே! எனைஈன்றோர் எல்லாப்பிழையும் பொறுத்து
உன்மேலாம் சொர்க்கத்திற் உரியோராய் அவர்களினை
உன்னருளால் ஆக்கிவிடு.



Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

# அணிந்துரை

திருகோணமலை மாவட்டத்தில், அமைந்துள்ள வரலாற்றுப் பெருமைமிக்க மூதூரில், இலக்கிய பாரம்பரியத்தைச் சேர்ந்த மூதூர் எம்.எம்.ஏ.அனஸ் அவர்கள் இதற்கு முன்பு சில இலக்கியப் படைப்புக்களை உருவாக்கியிருந்த போதிலும், அவர் படைத்த இந்நூல், அவரது நூல்களுக்கெல்லாம் மகுடமாகத் திகழும் என்பதில் எவ்வித ஐயமுமில்லை.

உமறுப்புலவர், மு.மேத்தா, வலம்புரிகான், பேராசிரியர்.எம்.ஆர்.எம்.அப்துல் ரகீம் முதலிய கவிஞர்கள் நபிகள் நாயகத்தைகாவிய நாயனாகக் கொண்டு கவிதைகள் படைத்தது போல, மூதூர் எம்.எம்.ஏ.அனஸ் என்பவரும், நாயகக் காவியம் என்ற தலைப்பில், நபிகள் நாயகத்தை சிறப்பித்து ஒரு காவியம் படைத்துள்ளார்.

காவியம் ஒன்றைப் பாடுவது, அதிலும் குறிப்பாக, நபிகள் நாயகத்தைப் பாட்டுடைத் தலைவனாகக் கொண்டு பாடுவது மிகவும் கடினமான ஒரு விடயம் இதனை நூலாசிரியரும் பெருந்தன்மையோடு ஒத்துக் கொள்கின்றார். இக்காப்பியத்தின் 4வது பாடல் இதனை சிறப்பாக எடுத்துக் கூறுகின்றது.

பனித்துளியே ஆகியநான் பெரும்கடலாம் நபியை
பகன்றிடுதல் வேடிக்கைப் பணிதானே அறிவேன்
இனியநபி நாயகத்தை இயம்பிடவே கவியால்
இதயமது நாடியதால் இச்செயலில் துணிந்தேன்

தான் பனித்துளி போன்று சிறியவன் என்றும், நபிகள் நாயகத்தின் வாழ்க்கை பெருங்கடல் என்றும் நூலாசிரியர் கூறுவது, அவரதுஅவையடக்கத்தைக் காட்டுகின்றது.

பாட்டுடைத் தலைவனது வாழ்க்கையை பூரணமாகக் கூறுவது ஒரு காப்பியத்திற்கு இருக்க வேண்டிய முக்கியமான பண்பாகும். நபிகள் நாயகத்தின் பிறப்பு முதல் இறப்பு வரையிலான வாழ்கைப்பகுதியினை இக்காவியம் நன்கு விபரிக்கின்றது. மாநபியின் பிறப்பினை (18வது பாடல்) பின்வருமாறு ஆசிரியர் தருகின்றார்.


Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

"பெருமானார் நபிமுகம்மது புவியிலே பிறந்தார்..."
மாநபியவர்களின் மரணத்தை நூலாசிரியர், இலகுவான தமிழில் (584 வது பாடல்) பின்வருமாறு முன்வைக்கின்றார்.

"....திருநபியும் தம்வாழ்வை தரணியிலே முடித்தார்"

நபிகள் நாயகத்தின் இளமைக்காலத்தையும், திருமண வாழ்க்கையையும், மக்களுக்காக அவர் ஆற்றிய மகத்தான பணிகளையும் நூலாசிரியர், இக்காவியத்திலே சிறப்பாகத் தருகின்றார். நபியவர்களின் திருமணத்தை கூறவந்த கவிஞர், நபிகள் நாயகத்தை திருமணம் செய்ததால் கதீஜா நாயகி மகிழ்ச்சியில் திழைத்ததை (பாடல்82) பின்வருமாறு கூறுகின்றார்.

"....தக்கதொரு மணவாளன் தான்கிடைத்த இன்பில்
தன்மதியாம் கதிஜாவும் திழைத்திட்டார் மகிழ்வில்"

உவமை, உருவகம், உயர்வு நவிற்சி, தற்குறிப்பேற்றம் முதலிய அணிகளால் பொலிவுறுவது காப்பியமாகும் நாயகக் காவியம் என்ற இக்காப்பியத்திலும், பல அணிகள் மலிந்து காணப்படுகின்றன.
எடுத்துக்காட்டாக (23வது பாடல்)

"......பாரிலே சொர்க்கத்தைப் பார்ப்பவர் போல்ஆனார்." என்ற கவிவரி, ஆசிரியர் உவமையைக் கையாளும் ஆளுமையைக் காட்டுகிறது.

காவியங்கள் சொற்சிறப்பையும், வருணணைகளையும், வாழ்க்கையை நெறிப்படுத்தும் பல விழுமியங்களையும் கொண்டிருக்கும். கவிஞரும் இவற்றை இந்நூலிலே உள்ளடக்கி, ஏற்றம் பெறுகின்றார். "நன்மையை நாடுவோருக்கு இறைவன் நல்லதையே நாடுவான்" என்ற நற்கருத்தை பின்வரும் கவிவரிகளில் (பாடல்18) வலியுறுத்துகின்றன.

"....நன்மைதனை நானிலத்தில் நாடிச்செல்கின்றீர்
நாயனவன் உங்களுக்கு நாசமது நாடான்"

காவியம் பாடுவது மிகவும் சிரமமான பணி என்பதில் மாற்றுக்கருத்துக்கு இடமில்லை. இத்தகைய பெரும்பணியை செய்து முடிப்பேன் என்ற ஆசிரியரது வேட்கையையும், முயற்சியையும் பாராட்டுவது அனைவரது கடமையாகும். இந்நூல் இலங்கை இஸ்லாமிய காப்பியங்களுக்குள் முக்கிய இடம் வகிக்கும் என்பதில் எவ்வித ஐயமுமில்லை.

- கலாநிதி கே.எம்.எம்.இக்பால் -

அப்துல் மஜீத் எம்பி வீதி
கிண்ணியா - 4


Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

# முகவுரை

அண்ணல்நபி பெருமானார் (ஸல்) அவர்களின் வாழ்க்கை வரலாறு என்பது ஓர் பல்கலைக்கழகத்தின் ஆய்வுக்கும் அடங்கிப்போக முடியாத அளவுக்குப் பரந்துபட்ட ஓர் அற்புதமான தலைப்பாகும். இத்தலைப்பினிலே காவியம் பாட நான் முனைந்தது. உண்மையிலேயே ஓர்வேடிக்கையான செயலாகத்தான் இருக்கும். ஓர் பனித்துளிபெரும் சமுத்திரத்தைப்பற்றிப் பகர்வதோ சிற்றெறும்பு சிங்கம் பற்றிச் செப்புவதோ!

என்றாலும் என் உளப்பரப்பில் அண்ணல்நபி பெருமானின் அழகுறு வாழ்க்கை வரலாற்றைக் காவியமாய்ப் பாட வேண்டுமென்ற கடும் வாஞ்சை நீண்ட காலமாய்க் கிளர்ந்தெழுந்து கொண்டிருந்தது. பாவேந்தன் பாரதியின் வாழ்க்கை வரலாற்றைக் கவிஞர் வைரமுத்து காவியமாய்ப் பாடிவிட்டு தன் மனைவியிடம் கூறினாராம். "இனி நான் இறப்பதற்கும் தயார்" காரணம் மகத்தான மனிதனின் வாழ்வைக் காவியமாய்ப் பாடிவிட்டேன். அதனால் இனி எழுதுவதற்கு ஏது தேவை என்றாராம் இவ்விடயத்தை நான் படித்த போது தான் எனக்கும் இவ்வுலகின் மகத்தான மாமனிதர் மாநபி (ஸல்) அவர்களைப் பற்றியதான காவியமொன்றை என்கரங்களால் படைக்க வேண்டுமென்ற பேரவா என்னுள் பெருக்கெடுத்தது. அதன் விளைவு தான் நாயகக் காவியம் எனும் எனது இந்நூல்.

எனினும் நாயகம் (ஸல்) அவர்களின் சரிதைபற்றிய காவிய நூல்கள் தமிழுலகிலே பல வெளிவந்திருப்பதையும் நான் அறிவேன். அந்த வகையில் எனது இக்காவிய நூலோ ஓர் நூற்றாண்டு காலமாக எனது மூதூர் பிரதேசத்தில் நிலவிவரும் காவியத்தின் ஓசைநயத்திற்கு ஏற்ப எழுதவேண்டும் என்பதில் கருத்தாக இருந்தேன். புலவர் மூதூர் சாலயரின் கங்கைக் காவியத்தின் ஓசைநயம் போல புலவர் மூதூர் உமர்நெய்னாரின் புகாரிக் காவியத்தின் ஓசை நயம் போல,

"நாதிநதி - நந்தநதி - நாதிநதி - நானா" என்ற மூன்றசை - மூன்றசை - மூன்றசை - ஈரசை என்ற ஓசைநயத்தோடு முழுக்காவியத்தையும் பாடவே முயன்றேன். எல்லாம் வல்ல



Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

அல்லாஹ்வும் இதற்கெனக்கருள் புரிந்தான். சாதாரண மக்களும் புரிந்து கொள்ளக்கூடிய வகையில் சாதாரன சொல்வடிவங்களில் அமைந்த இக்காவியம் பண்டைக்காலம் தொட்டுச் சாதாரன மக்கள் வாய்வழியாகப் பாடிவரும் காவியம் போல இக்காவியமும் திகழும் என்ற திடமான நம்பிக்கை எனக்குண்டு. தமிழில் நபிகள் நாயகத்தின் வாழ்க்கை வரலாற்றை சீறாப்புராணமாக 17ம் நூற்றாண்டின் பிற்பகுதியில் வாழ்ந்த உமறுப்புலவர் ஒரே சீர்வரிசையில் அன்றி. வெவ்வேறு சீர்வரிசைகளில், பல்வேறு தலைப்புக்களில் கடினமான சொற்களைக் கையாண்டு. எமக்குப் படைத்தளித்திருப்பதை நாம் அறிவோம். அதேபோல் கவிஞர் மு.மேத்தா அவர்களின் "நாயகம் ஒரு காவியம்" எனும் நூலும் ஒரே ஓசை நயத்துடனன்றி, புதுக்கவிதை, மரபுக்கவிதை, இசைப்பாடல் ஆகிய வடிவங்களில் பெருமானாரின் வரலாற்றைக் கூறுகின்றது. வலம்புரி ஜானும் புதுக்கவிதை வடிவில் நாயகத்தின் வரலாற்றைக் காவியமாக எழுதியுள்ளார். பேரறிஞர். எம்.ஆர்.எம்.அப்துல் றஹீம் அவர்களும் மரபுக்கவிதை வடிவில் வெவ்வேறு சீர்வரிசைகளில் "நபிகள் நாயகக் காவியம்" எனும் நூலை எழுதித் தமிழ் கூறும் நல்லுலகுக்குத் தந்துள்ளார்.

அந்த வகையில் எனது "நாயகக் காவியம்" எனும் இந்நூலும் தமிழுலகில் நபிகள் நாயகம் பற்றிய ஓர் காவிய நூலாகத் திகழும் என்ற நம்பிக்கை எனக்குண்டு இந்நூலுக்கு அணிந்துரை வழங்கிய கலாநிதி கே.எம்.எம்.இக்பால் அவர்களுக்கும் அட்டைப்படம் வடிவமைத்த திரு.P.விஜே அவர்களுக்கும் இந்நூலை நல்ல முறையில் பதிப்பித்த Ben Vision Printers பதிப்பகத்திற்கும். வெளியீடு செய்த மூதூர் இலக்கிய ஒன்றியத்திற்கும் எனது மனமார்ந்த நன்றிகளைத் தெரிவித்துக் கொள்கின்றேன்.

நன்றி

எம்.எம்.ஏ.அனஸ்
பெரியபாலம்
மூதூர் - 05

தொடர்பு - 0776288299



Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

# நாயகக் காவியம்
## (மக்காக் காண்டம்)

1. விண்ணுலகை மண்ணுலகை விரிந்தபெரும் கடலை
வகைவகையாம் படைப்பினத்தை வனப்புடனே படைத்த
மன்னோனாம் ஓர்இறைக்கே மாபெரிய புகழும்
மாட்சிமையும் உரித்தென்று மொழிகின்றேன் நன்கு

2. இறையோனின் தூதுக்கு இறுதியென்றே ஆகி
இனியமறை குர்ஆனை இப்புவிக்குக் கொணர்ந்த
பெருமானார் நாயகத்தைப் பெரிதுமே உவந்து
போற்றியே துதிக்கின்றேன் புகழ்சலாம் அவர்க்கு

3. காவியங்கள் பாடுவதோ கடும்சிரமம் அன்றோ
காமில்நபி நாயகத்தைக் காவியமாய்ப் பாட
ஆவல்நான் கொண்டதுவோ ஆகாத செயலே
ஆனாலும் ஆசையது அலைபோல வருதே

4. பனித்துளியே ஆகியநான் பெரும்கடலாம் நபியை
பகன்றிடுதல் வேடிக்கைப் பணிதானே அறிவேன்
இனியநபி நாயகத்தை இயம்பிடவே கவியால்
இதயமது நாடியதால் இச்செயலில் துணிந்தேன்

5. சகதிநீர் ஆகியநான் சமுத்திரமாம் நபியைச்
செப்புதற்கு விளைந்ததுவோ சிந்தையிலாச் செயல்தான்
நிகரில்லா வாஞ்சையினால் நவிலுகிறேன் நானும்
நாயனவன் நல்லருளை நம்பியே நன்கு

6. குப்பிவிளக் காகியநான குவலயச்சூ ரியனைக்
குறிப்பிட்டுக் கவிபாடல் கூடாதே எனினும்
செப்புதற்கு எந்தனது சிந்தையே கூறச்
சொல்கின்றேன் கவியாகச் செம்மல்நபி தன்னை


Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

7. புழுதிமண் ஆகியநான் பொற்பதியாம் நபியைப்
பகருவதோ பாரினிலே பைத்தியத்துச் செயலே
தழுவுகிற ஆசையினால் தானேதான் வந்தேன்
தக்கதொரு காவியமாய்த் திகழுமென எண்ணி

8. இறையோனே உந்தனது இறுதிநபி பற்றி
இன்பத்தமிழ் மொழியினிலே இனிதேதான் பாட
சிறியோன்யான் முயலுகிறேன் சிறப்பாக எனக்குச்
சிந்தையிலே தமிழூற்றைச் சுரந்தருளச் செய்வாய்

9. நான்பாடும் காவியத்தில் நேரும்பிழை எல்லாம்
நாயன்நீ பொறுத்தேதான் நன்கருள வேண்டும்
வீண்என்று காவியத்தை வீசிடா திருக்க
விடயமெலாம் சிறந்திங்கே விஞ்சிடவும் வேண்டும்

10. பாலைநிலப் பரப்பான பெருநாடு அரபு
பாரதனில் பேர்பெற்றுப் பரிணமித்து உளதே
சோலைகளும் கனித்தோப்பும் சுனைகளுமே நிறைந்து
சொர்கபதி என்றேதான் சரிதையிலே ஆச்சு

11. வர்த்தகத்தின் விருத்தியினால் வருமானம் விஞ்சி
வசந்தத்தின் அரவணைப்பில் விளங்கியதும் அறிவீர்
சர்வநாட் டினிலுமே செல்வமிகு நாடாய்
சஞ்சரித்து வருகின்ற சிறப்பதுவும் தானே

12. மக்கமா நகரமது முழுஅரபு நாட்டின்
மகிமைமிகு தலைநகராய் மிளிர்கிறதே என்றும்
மக்களெலாம் கூடுகிற மாபெரியோன் இல்லம்
மகிமைமிகு கஃபாவும் மேவுவதும் இங்கு

13. உலகத்தைப் படைத்திட்ட உயரிறையை மறந்து
உருவத்தைக் கல்மண்ணை உயர்ந்தோனாய் மக்கள்
பலமாக நம்பியே பாவத்தில் மூழ்கிப்
பஞ்சமா பாதகத்தின் பாங்கரென ஆனார்


Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

14. முன்னுதித்த நபிமாரின் முறையான போதம்
முற்றாக மறந்தேதான் மக்களெலாம் அன்று
உன்னதமே அறியாமல் உலகினிலே கொடுமை
ஊற்றாகும் தளமென்று உருப்பெற்று நின்றார்

15. பொய்களவு சூதுகொலை போர்மங்கை மற்றும்
பொல்லாத செயலெல்லாம் புரிந்தின்பம் கண்டார்
உய்யும்வழி தெரியாமல் உன்னதமும் அறியா
உலுத்தரென மக்களெல்லாம் உலகினிலே திகழ்ந்தார்

16. அறநெறிகள் அத்தனையும் அகிலத்தில் ஓங்க
அனாச்சா ரநெறிமுறை அழிந்தேதான் போக
இறையோனின் கொடையெனவே இறசூல்நபி நாதர்
இவ்வுலகின் பேறாகப் பிறந்தனரே அங்கு

17. இறையோனின் இனியமறை இஸ்லாத்தின் தூதாய்
இன்னல்களை மாய்த்தழிக்கும் இன்பத்தின் ஊற்றாய்
கறைகொண்ட கொடியோரைக் கொன்றொழிக்கும் வாளாய்
கருணைக்கடல் காமில்நபி காசினியில் பிறந்தார்

18. ஓரிறைவன் வணக்கமது உலகத்தில் ஓங்க
ஒப்பற்ற மனிதஉயிர் உன்னதத்தில் துலங்க
பேரிறையின் பெருங்கொடையாய் பூவுலகும் மகிழ
பெருமானார் நபிமுகம்மது புவியினிலே பிறந்தார்

19. அண்ணலரும் அவதரித்து ஆகியநாள் ஏழில்
அகமுவந்து உறவார்கள் அனைவருமே கூட
உன்னதஅப் துல்முத்தலிப் உயர்பாட்டன் நன்கு
உளமுவந்து முகம்மதெனும் உயர்நாமம் இட்டார்

20. அகிலத்தில் அவதரிக்க ஆறுமா தமுன்பே
அருமைமிகு தந்தையினை அகமதுவும் இழந்தார்
பகர்வதற்கே மாபெரிய பரிதாபம் உற்றார்
படைத்தோனின் செயலென்றிதைப் பகர்வோமே நாமும்


Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

21. பாலகனாம் முகமதுக்குப் பாலூட்டும் தாயாய்
பாக்கியமே கலிமாவெனும் பாவையரும் பெற்றார்
நாலாண்டு காலங்கள் நல்முறையாய் வளர்த்து
நற்சிறுவனை ஆமினா நங்கையிடம் கொடுத்தார்

22. பால்கொடுக்கப் பொறுப்பேற்ற பாலகனின் வரவால்
பெரிதாகத் தம்வாழ்வில் பெருக்கிட்ட வறுமை
இல்லாமல் நீங்கியதை இவ்வன்னை கண்டார்
இறையருளே இப்பாலன் இவ்வீட்டுக் கென்றார்

23. பாலகனைப் பார்த்திட்ட பாசமிகு அன்னை
பாரினிலே சொர்க்கத்தைப் பார்ப்பவர்போல் ஆனார்
காலனே கவர்ந்திட்ட கனவர்தம் உருவைக்
கண்டேதான் மைந்தனிலே களிப்பதனில் திழைத்தார்

24. பெற்றெடுத்த பாலகனைப் பாசமிகு உறவார்
பார்த்திடவே வேண்டுமென பகர்ந்தேதான் அன்னை
பொற்பதியாம் மைந்தருடன் பிரியமுடன் யத்ரிப்
பயணமே வந்திட்டார் பந்தத்தைச் சேர்ந்தார்

25. பாசத்தின் கனவரவர் படுத்துறங்கும் கபுறை
பாலகனாம் மைந்தனுக்குப் பக்குவமாய்க் காட்டி
நேசித்த நெஞ்சத்தின் நினைவினிலே அழுதார்
நிலத்தினிலே தம்விதியை நினைத்துமே நொந்தார்

26. பாலகனை யத்ரீபில் பார்த்திட்ட உறவார்
பரவசமே உற்றங்கே பாசத்தில் திழைத்தார்
கோலமே உருவான பாலகனும் தாயும்
காலமொரு மாதங்கள் கழித்திட்டார் இங்கே

27. தந்தையூர் மக்கநகர் திரும்பிடவே எண்ணி
தாயுடனே பயணத்தைத் தொடங்கினார் சிறுவர்
அந்தோபரி தாபமே அபவாவெனும் இடத்தில்
அன்னையுமே மரணமாய் ஆகியே போனார்


Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

28. ஆறாவது வயதினிலே அருமைமிகு சிறுவர்
அடியெடுத்து வைக்கையிலே அன்னையரின் மரணம்
ஆறாத்துயர் அதிகமதை அளித்ததுவே அவர்க்கு
அத்தனையும் அல்லாஹ்வின் அருஞ்சித்தம் தானே!

29. பயணத்தில் கூடவே பயணித்த அடிமைப்
பெண்உம்மு ஐமன்அப்போ தினிலேதாய் போன்று
உயர்பாலன் முகம்மதுவை ஊர்மக்கா கொணர்ந்து
உரியபடி பாட்டனிடம் பாரமே கொடுத்தார்

30. பேரனது பரிதாபம் பார்த்திட்ட பாட்டன்
பெரிதுமே சோகத்தில் பதறியே போனார்
சீராகப் பேரனிலே சிரத்தைமிகக் காட்டி
சிந்தையிலே நிறைத்தபடி சிறப்பாக வளர்த்தார்

31. வாழ்வினது எல்லையினை வந்திட்ட பாட்டன்
வரமான பேரனது வருங்காலம் எண்ணி
ஆழ்ந்திட்டார் சோகத்தில் ஆர்தனக்குப் பின்னே
அகமதுவைக் காப்பதென்ற ஆனகவ லையால்

32. பெற்றெடுத்த பிள்ளையிலும் பெரிதாகப் பேரனைப்
பிரியமுடன் பாட்டனரும் பார்த்தேதான் வந்தார்
பற்றுதல்கள் அணைத்தையுமே பேரன்மேல் செலுத்தி
பாங்குடனே வளர்த்திட்டார் பக்குவமாய்க் காத்தார்

33. எண்ணமெலாம் பேரனெ எப்போதும் இருந்தார்
என்வாழ்வும் அவருக்கே என்றுரைத்து நின்றார்
மண்ணினிலே மாபேறு முகம்மதுதான் என்றார்
மைந்தர்மகன் எழிலினிலே மூழ்கியே போனார்

34. மரணத்தின் விளிம்பினிலே முடங்கியதை உணர்ந்த
முதியவரும் மகன்மைந்தன் முகம்மதுவைப் பின்னால்
சிறப்பாகக் காப்பதுயார் சிந்தையே கொண்டார்
சீக்கிரமாய் மைந்தர்களைத் திரட்டித்தான் கேட்டார்


Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

35. அருங்குணத்து அன்புமகன் அபுதாலிப் தானே
அகமதுவை வளர்க்கின்ற அரும்பணியை ஏற்றார்
ஒருகுறையும் இல்லாமல் உன்னுயிரை விடவும்
உயர்வாகக் சிறுவனினை ஓம்பென்றார் தந்தை

36. மைந்தன்மகன் முகமதுவை மைந்தன்அபு தாலிப்
மனமுவந்து பொறுப்பேற்ற மகிழ்சியிலே பெரியார்
சந்தோசம் கண்டிட்டார் சாவையுமே நினைத்தார்
சின்னாளின் பின்னாலே சீவியத்தை முடித்தார்

37. தந்தையுடன் உடன்பிறந்த தன்மைமிகு சோதர்
தக்கசூணம் குடிகொண்ட தன்பெரிய தந்தை
பந்தமுறு அபுதாலிப் பாசமிகு மனையில்
பருவத்துச் சிறுவரவர் பாங்குடனே வளர்ந்தார்

38. தம்பிமகன் முகம்மதுமேல் தீராத பாசம்
தினந்தோறும் காட்டியவர் தரமாகக் காத்தார்
இம்மண்ணில் தம்பேறு இம்மகனே என்று
இதயத்தில் எண்ணியவர் இன்பமே உற்றார்

39. பிறருடைய ஆடுகளைப் பேணுதலாய் மேய்த்து
பொருளீட்டிக் கொடுத்திட்டார் பெருவறுமை போக்க
பெரியதந்தை அபுதாலிபும் பெரிதுமே மகிழ்ந்தார்
பெரியோனிறை வகுத்தவழி புரிவோமே இதுவாய்

40. கலைக்கூடம் செல்லாமல் கல்வியுமே கற்கா
காட்டிலே ஆடுகளைக் கவனமாய் மேய்க்கும்
கலையையே கற்றிட்டார் கண்ணியத்தின் சிறுவர்
காசினியில் இறையோனின் கருத்திதுவே புரிவோம்

41. இறையோனே ஆசானாய் இவருக்கு இருக்க
இப்பதியில் வேறொருவர் இவருக்குக் குருவோ!
கறையாகும் என்றிறைவன் கருதியது தானோ!
கற்காத மனிதரெனக் காசினியில் ஆனார்


Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

42. வாட்டுகிற வறுமைதனை விரட்டவே நாடி
வணிகத்தின் நோக்கினிலே வளமிக்க செல்வம்
ஈட்டவே அபுதாலிப் இன்னரும்பதி துறந்து
இனியநல் சிரியாசெல இச்சையாய் நின்றார்

43. தன்னருமை பெரியதந்தை தயார்படும் பயணம்
தனைக்கண்ட தம்பிமகன் தன்னையுமே அங்கு
ஒன்றுமே மறுக்காமல் உடன்கூட்டிச் செல்ல
உருக்கமாய் வேண்டியே ஓம்படவே கேட்டார்

44. நெடுநிலப்பய ணத்தூரம் நீள்மலைகள் உண்டு
நிலம்பாலை வனமுமுண்டு நரர்நடமாட் டமே
கிடையாத இடமுமுண்டு கிளம்பிடவே எண்ணா
கலங்கியே அபுதாலிப் கருத்துரைகள் சொன்னார்

45. பெரியதந்தை பகன்றதனால் பதறிட்ட சிறுவர்
பயணத்தின் கஷ்டமெலாம் பதறாமல் ஏற்பேன்
சிறுவனல நானும்என சஞ்சலமாய்ச் சொன்னார்
சங்கடமே பெரும்தந்தை சடுதியாய் உற்றார்

46. இறுதியாய்ச் சிறுவரையும் இதமாகச் சேர்த்து
இனிமைமிகு அபுதாலிப் இப்பயணத்தைத் தொடர்ந்தார்
சிரியாவின் பயணத்தில் சிறுவராம் முகம்மது
சிந்தைகவர் இடமெல்லாம் சிறப்பாகக் கண்டார்

47. நன்நெறியும் நற்குணமும் நன்றாக நிறைந்து
நானிலத்தில் திகழ்ந்திட்ட நற்சிறுவர் தம்மை
நல்முறையில் அல்அமீன் அஷ்ஸாதிக் என்ற
நனிசிறந்த நாமத்தால் நன்கழைத்தார் மக்கள்

48. எத்தவறும் எத்தீங்கும் எவருக்கும் செய்யா
ஏற்றமிகு சிறுவர்என எல்லோரும் மெச்ச
உத்தமத்துத் தன்மைகளின் உறைவிடமாய் என்றும்
உலகத்தில் உயர்ச்சிதனை உரித்தாக்கிக் கொண்டார்


Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

49. கடைவீதி செல்லுகையில் கனபேரின் பொருளை
கவனமுடன் வாங்கியே கரம்கடுக்கச் சுமந்து
உடையோர்க்குச் கொடுத்ததனை உவகையே கொள்வார்
உலகத்தில் இவர்பண்பு உள்ளோரும் உண்டோ

50. வியாபார நோக்கினிலே வாலிபத்தின் வயதில்
வர்த்தகர்கள் குழுக்களிலே வாஞ்சையாய் இணைந்து
அயராமல் யமன்பஹ்ரைன் ஆனபல நாட்டில்
அலைந்துமே வணிகத்தை அழகாகச் செய்தார்

51. அரபுநா டெங்குமே அகமதுவின் நாமம்
அனைவர்தம் அகத்தினிலும் ஆழமாய்ப் பரவ
பெரும்நாண யத்தின்இருப் பிடமேதான் என்ற
பெயருமே பெற்றிந்தப் பூமியிலே திகழ்ந்தார்

52. நாணயத்தின் நாயகராய் நற்பெயரே பெற்று
நாட்டினிலே திகழ்ந்திட்ட நாயகரின் நாமம்
ஆனபொழு தினிலேதான் அரும்பெரிய வணிக
அரிவையாம் கதிஜாவும் அறிந்திட்டார் ஆங்கே

53. கனத்தபெரும் செல்வத்தில் கதிஜாவும் திழைக்க
கவனமுடன் தம்வணிகம் காப்பதற்கு ஆளும்
தனக்குடனே தேவைஎன தீர்மானம் செய்து
தரம்மிக்க இளவரையே தம்பணிக்கு அழைத்தார்

54. இருதடவை கைம்மைநிலை இன்னலுற்ற கதிஜா
இல்லத்தை அடைந்திட்ட இளவளரைக் கண்டு
பெருமகிழ்வு உற்றவராய் பெருவணிகம் சிரியா
போய்த்தன்செய லர்பணியைப் பார்த்திடவே கேட்டார்

55. ஆய்ந்தபின் அளித்திடுவேன் ஆனபதில் என்று
அப்போதில் இளவழகர் அடக்கமுடன் சொன்னார்
தூய்மைமிகு பெரியதந்தை தனையணுகி அவரும்
துலக்கமுடன் விடயத்தைத் தொடராகச் சொன்னார்


Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

56. நல்லதுவே நாட்டமுடன் நீயுமப்பணி தன்னை
நாடியே செய்திடுவீர் நன்மையே என்றார்
சொல்லியதை ஏற்றபடி செம்மலவர் வந்து
சொல்லிட்டார் விருப்பத்தை சுகந்தமுற்றார் கதிஜா

57. ஏந்திழையாள் கதிஜாவும் ஏற்றமென எண்ணி
ஏற்றமிகு ஜரஷ்ஹபஷா எனுமூர்செலச் சொன்னார்
ஏந்தலரும் அங்குபோய் ஏராளச் செல்வம்
ஏற்றநெறி வழியினிலே எடுத்தெளிலாய் வந்தார்

58. அகமகிழ்ந்த ஆரணங்கு அதிசயமே கூற்று
அடுத்ததாய் சிரியாவுக் ஆனபயணம் இப்போ
உகந்ததென உரைத்தேதான் உரியவழி செய்தார்
உத்தமரும் குழுவுடனே உயர்பயணம் தொடர்ந்தார்

59. சிரியாவின் பயணத்தில் செம்மலின் நடத்தை
சென்றேதான் பார்த்துவர சிறப்பின்மைஸ் ராவை
உரியபடி நன்றெனவே உத்தமியார் கதிஜா
உயர்நோக்கில் அனுப்பியே உள்ளமது உவந்தார்

60. காடுகளும் சோலைகளும் கனித்தோப்பும் நிறைந்து
காட்சிதரு சிரியாவைக் கனநாளின் பின்னே
பாடுடனே அடைந்திட்ட பண்பாளர் அங்கே
பாங்குடனே வணிகத்தில் பெருவெற்றி கண்டார்

61. வெற்றியுடன் வணிகத்தை வாலிபரும் முடித்து
வல்லவனின் க:.பாவெனும் வீடுள்ள ஊரை
பற்றிடவே விரைவாகப் பயணத்தைத் தொடர்ந்தார்
பலநாளில் ஊரினிலே பாதமதும் பதித்தார்

62. ஊர்மீண்ட உடனேயே உத்தமனார் அங்கு
உரியதம் வணிகத்தின் உடைமையாள் கதிஜா
பேர்பெற்ற இல்லத்திற் போயேதான் தமது
பணியதனின் கணக்கெல்லாம் பாங்காகக் கொடுத்தார்


Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

63. பயணத்தில் கூடவே பயணித்து மீண்ட
பண்புநிறை மைஸ்ராவை பாவையரும் அழைத்து
பயணத்துத் தலைவரிடம் பார்த்திட்ட தன்மை
பகன்றிடுவீர் என்றேதான் பேச்சதனைத் தொடுத்தார்

64. கறையில்லாத் தன்மையெலாம் கண்டேனே அவரில்
கண்ணியத்தின் உருவாயும் காட்சியவர் தந்தார்
நிறைதன்மை அத்தனையும் நிறைந்தவரில் நிலைக்க
நீதிகளின் நேர்மைகளின் நல்லுருவென் றிருந்தார்

65. சத்தியத்தின் சான்றென்றே சிறப்புடனே மிளிர்ந்தார்
சனங்களெலாம் மெச்சுகிற சீர்மையிலே திழைத்தார்
உத்தமரே இவரென்று உரைத்திடுதல் நன்று
உலகத்தில் இவர்போல உள்ளவரும் அன்று

66. புண்ணியங்கள் புரிவதனைப் புனிதமெனக் கொண்டார்
பேரறிவு ஞானங்கள் பொதிந்தவராய் உள்ளார்
மண்ணிலே இவர்போல மகிமையுளோர் இல்லை
மதிப்பீடு எந்தனதென மைஸ்ராவும் சொன்னார்

67. இத்தனையும் கேட்டிட்ட இளவரசி கதிஜா
இதயத்தில் நிலைத்ததுவே இளைஞரிவர் நினைவு
உத்தமியாள் உள்ளத்தில் உத்தமரைப் பற்றி
ஓயாத எண்ணஅலை ஓங்கியதே நாளும்

68. வாணிபத்தின் நிமித்தமாய் வாலிபரும் பலமுறை
வந்திடவே வீட்டுக்கு வாஞ்சையுடன் வனிதை
பேணுதலாய்ப் பேசித்தான் பழகிட்டார் நன்கு
பெருவணிகம் பற்றித்தான் பேச்செல்லாம் ஆச்சு

69. கட்டழகு வாலிபரில் காதலுமே ஓங்க
கதிஜாவும் பலபலவாய்க் கற்பனையில் மூழ்கி
கிட்டாரோ அன்னவரும் கணவரென எண்ணி
கனமான சிந்தனையில் கலங்கியே நின்றார்


Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

70. பகலிரவு எல்லாமும் பலபலவாய் எண்ணி
பசியின்றி உணவின்றி படுக்கையுமே இன்றி
நிகரற்ற வாலிபரின் நட்புக்காய் ஏங்கி
நிம்மதியும் இழந்தேதான் நிலைகுலைந்தாள் அவளும்

71. உள்ளத்துக் காதலினை ஒழிக்காது கதிஜா
உடன்பிறந்த தங்கையிடம் உரைத்திட்டார் நாணி
வெள்ளையுளச் சோதரியின் வாஞ்சையினை எண்ணி
விரைவாகத் தங்கையுமே விடைகாண விளைந்தாள்

72. சோதரியாம் கதிஜாவும் சொன்னதனைக் கேட்டு
சுணங்காமல் தங்கையுமே சிறப்பாய்த்தமக் குதவும்
நாதமிகு உரைகொண்ட ந.ஃபீஸா தனையே
நல்எழிலின் வாலிபரை நாடிச்சொல வைத்தாள்

73. இருபத்தைந்து வயதிளவல் இருமுறைகைம் மைநிலை
இன்னலுற்ற கதிஜாக்கு இசைவுதரு வாரா
வரனாக வந்தேதான் வளவாழ்வளிப் பாரா
விதவிதமாய்ச் சிந்தித்தார் வருத்தமாய்ச் சோதரி

74. வாலிபரின் மனையேகி வந்திட்ட விடயம்
வனப்பாக ந.ஃபிஸாவும் விதந்துரைத்தார் நன்கு
காலமெலாம் வாழ்வதுவும் கலைகட்டி நிற்க
கதிஜாவை இல்லாளாய்க் கரமேற்கக் கேட்டாள்

75. அழகுக்கு அழகுடனே அருங்குணங்கள் ஓங்க
ஆனபெரும் செல்வங்கள் அத்தனையும் குவிய
பழகுதற்கு இனிதான பண்புகளில்த் திழைக்கும்
பாவையவள் மகிமைதனைப் பகர்ந்திட்டார் ந.ஃபிஸா

76. உள்ளத்தை யாருக்கும் உரிமைஎனக் கொடுக்கா
உன்னதத்து மங்கையவர் உங்களுக்கே மட்டும்
அள்ளித்தான் உள்ளத்தை அப்படியே கொடுத்தார்
அதிசயமே என்றேதான் அறைந்திட்டார் ந.ஃபிஸா


Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

77. மாபெரிய பேறாகும் மனையாளாய்க் கதிஜா
மண்ணுலகில் ஆகினால் மொழிந்திட்டார் நஃபிஸா
பூபதியே வியக்கின்ற புனிதமிகு இளைஞர்
பதிலுக்காய் அன்னவளும் பார்த்தேதான் நின்றார்

78. செல்வத்தின் செழுமையிலே சிறப்புற்ற மாதை
சொல்லரிய கனவான்கள் சொந்தமென ஏற்க
நல்முறையில் நாடிடுவர் நானேதான் ஏழை
நடந்திடுமா திருமணமும் நவின்றிட்டார் இளைஞர்

79. ஆம்என்று அறைந்திடுவீர் அத்தனையும் பாரப்பேன்
ஆகாது என்காதீர் அகமெல்லாம் உம்மைத்
தாம்மங்கை கொண்டுள்ளார் தருகிறேன் சான்று
தந்திடுவீர் சம்மதமே தான்என்றார் நஃபிஸா

80. பெரியதந்தை அபுதாலிப் பிடம்பேசித் தீர்த்து
பலவாறு ஆய்தபினே பாவைதனை மணக்கப்
பிரியமென வாலிபரும் பகன்றிட்டார் அந்தோ
பரவசத்தில் நஃபிஸாவும் பறந்தேதான் போனார்

81. வாலிபரின் வீட்டாரும் வனிதையரின் தரப்பும்
வாஞ்சையாய்ப் பேசியே வாய்த்தஓர் நாளில்
கோலமுடன் திருமணத்தை களிப்புடனே வைத்தார்
கண்டவர்கள் அதிசயித்துக் கரிசனையாய்ப் பார்த்தார்

82. மக்கநகர் எங்குமே மணக்கோல வாசம்
மக்களது மனங்களிலே மகிழ்ச்சியின் தோற்றம்
தக்கதொரு மணவாளன் தான்கிடைத்த இன்பில்
தன்மதியாம் கதிஜாவும் திளைத்திட்டார் மகிழ்வில்

83. பிரார்த்தனையும் கீர்த்தனையும் பிரியமுடன் வாழ்த்தும்
பெரிதாக ஓங்கிடவே பெரியோரும் உவக்க
சிறப்பாகத் திருமணமும் சிந்தையெலாம் மகிழ
சரித்திரத்தில் நிலைக்கின்ற சான்றாக ஆச்சு


Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

84. ஈருடலும் ஓருயிராய் இணையற்ற அன்பின்
இருப்பிடமாய் இன்னோர்கள் இலங்கியே நின்றார்
ஆருமே வாழ்ந்திடா அருவாழ்வில் திழைத்து
அகிலத்தில் இல்லறத்தின் அர்த்தமென்றே ஆனார்

85. மலருடன்சேர் மணமாக மகத்தான வாழ்வில்
மணமக்கள் மாபெரிய மகிழ்ச்சியிலே திழைத்தார்
பலமான பாசத்தின் பிணைப்பாகத் திகழ்ந்து
பார்ப்பவர்கள் அதிசயிக்க பாரினிலே வாழ்ந்தார்

86. பூவுடனே வாசம்சேர் புனிதமிகு வாழ்வில்
பூரிப்பாய் மணமக்கள் பொலிவுற்றுத் திகழ்ந்தார்
பாவுடனே இசையாகப் பிரியமிகு வாழ்வு
பாரினிலே இவர்களினால் புதுஅர்த்தம் ஆச்சு

87. இல்லறத்து வாழ்வினிலே இன்பத்தின் பெருக்காய்
இல்லாலும் சேய்ஆறை ஈன்றேதான் கொடுத்தார்
நல்லறத்து வாழ்வுக்கு நல்லிலக்கணம் என்றே
நானிலத்தில் இன்னோர்கள் நன்றாகத் திகழ்ந்தார்

88. செல்வத்தின் சீமாட்டி சேர்த்திட்ட செல்வம்
சீராளர் கணவனிடம் சிறப்பென்றே சேர்த்தார்
எல்லாமும் உங்களுக்கே என்றேதான் உரைத்தார்
ஏந்தலரும் ஏற்றதனை எளியோர்க்கு ஈந்தார்

89. வயதெட்டில் அடிமையென வாய்த்திட்ட ஸைய்தை
வள்ளலார்க்கு வாஞ்சையுடன் வரமனைவி ஈந்தார்
உயரியலார் ஏந்தலரும் உவந்தேதான் ஏற்று
ஊர்ஏக அவருக்கு உரிமையினைக் கொடுத்தார்

90. பெற்றெடுத்த தந்தையுடன் பிறந்தவூர் ஏக
பிரியமின்றிச் ஸைய்துமே பெருந்துயரம் உற்றார்
பற்றிட்ட விடுதலையும் பார்க்காது தொடர்ந்தும்
பெருமானார் வீட்டினையே பெரிதாக உவந்தார்


Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

91. அன்றுமுதல் அண்ணல்தம் அன்புமிகு மகனாய்
அரவணைத்து ஸைய்தவரை அருமையாய்க் காத்தார்
உன்னதமே பொதிந்திட்ட உயர்மகனாய் அவரும்
உரியபடி உலகினிலே உயர்நெறியில் நடந்தார்

92. அரேபிய நாட்டினிலே அரியதோர் பஞ்சம்
அரங்கேறி மக்களெலாம் அல்லலுற்ற வேளை
பெரியதந்தை சுமைநீக்கப் பிரியமுடன் அலியை
பெருமகனார் தன்வீட்டில் பக்குவமாய் வளர்த்தார்

93. நற்பணிகள் பலவற்றை நாட்டமுடன் செய்ய
நாயகனார் ஹில்புல்புஸ் நல்லமைப்பில் இணைந்து
பற்பலவாம் அறப்பணிகள் பிரியமுடன் செய்தார்
பாலைவன மக்காவில் பெரும்கீர்த்தி பெற்றார்

94. புவியினிலே இறையோனைப் பணிவதற்காய் முதலில்
புலர்ந்திட்ட ஆலயமாம் புனிதமிகு கஃபா
நவினமுடன் மீண்டுமே நன்றாகக் கட்ட
நாட்டமுடன் மக்கத்தார் நல்முயற்சி செய்தார்

95. சுவனத்துக் கல்என்னும் சிறப்பதனைக் கொண்ட
சரிதைசொல் கஜ்ருலஸ்வத் சங்கைமிகு கல்லை
கவனமுடன் கஃபாவில் கட்டுதற்கு வைக்கும்
கனவான்தான் யாரென்ற கனசண்டை ஆச்சு

96. எழுந்திட்ட பிரட்சனைக்கு ஏற்றதோர் தீர்வை
எழிலாக அபுஉமையா எடுத்துரைத்தார் அங்கு
முழுதாக எல்லோரும் மனநிறைவாய் ஏற்றார்
முற்றாகப் பிரட்சனையும் முடியும்நிலை ஆச்சு

97. மறுநாளின் வைகறையில் மன்னோனைத் தொழுதிட
மகத்தான கஃபாவின் மதிப்பின்பனு சைபா
நெறிவழியால் வந்திடுமுதல் நபரேதான் கல்லை
நிலைகொள்ளத் தீர்வுசொலும் நபராகும் என்றார்


Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

98. எல்லோரும் ஏற்றேதான் எதிர்பார்த்த போதில்
எளில்மிக்க வைகறையின் ஏழிலினது பொழுதில்
அல்அமீன் என்பவரே அவ்வழியே வந்தார்
அனைவருமே மகிழ்ச்சியிலே அகமுவந்து நின்றார்

99. மேலான கல்லதனை மேலேயார் வைத்து
மேலவனின் ஆலயத்தை மகிமையுறச் செய்தல்
கோலங்கள் போட்டுநிற்கும் காத்திரமாம் செயலின்
கடைசியாம் தீர்வுக்கருத் தைமக்கள் கேட்டார்

100. அல்அமினும் தன்துணியை அவ்வேளை தரையில்
அழகுடனே விரித்ததிலே அக்கல்லை வைத்தார்
நல்லபெரும் தலைவர்கள் நால்வரினைத் துணியை
நன்றாக மேல்நோக்கி நகர்த்திடவே சொன்னார்

101. கல்பதிக்கும் இடம்வரவே கண்ணியவான் இவரும்
கல்லதனைத் தம்கரத்தால் காத்திரமாய் எடுத்து
நல்முறையில் வைத்திட்டார் நல்மகிழ்ச்சி பொங்க
நன்றென்றே மக்களெலாம் நன்றாகப் புகழ்ந்தார்

102. இந்நிகழ்வின் பின்னாலே இன்னாரின் உள்ளம்
இதமான மாற்றத்தின் இருப்பிடமாய்த் திகழ
வந்தேதான் வாய்த்தபெரும் வணிகத்தைத் தளர்த்தி
வல்லோனை அறிகின்ற வாஞ்சையிலே திழைத்தார்

103. இப்ராகிம் நபியவரின் இனிதான மார்க்கம்
இவ்வுலகில் யாதென்று இனிதறிய விளைந்தார்
தப்புநெறி அத்தனையும் தவிர்த்தபடி அவரும்
தனியோனின் சிந்தனையைத் தன்உளத்தில் நிறைந்தார்

104. மக்களெலாம் அன்றங்கு மண்கல்லின் சிலையை
மாபெரியோன் இறைவன்என மனதினிலே இருத்தி
தக்கதாம் வணக்கத்தில் தரித்திருக்கக் கண்டு
தீர்க்கதரி சிப்றாகிம் தந்ததல என்றார்


Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

105. மக்கபதி வாழ்ந்திட்ட மாபெரிய வயதின்
முதியோரை அண்மியே முறையாய்இப் ராகிம்
தக்கபெரும் மார்க்கத்தைத் திறம்படவே கேட்டார்
தகுபதில்கள் கிடைக்காமல் தவியாகத் தவித்தார்

106. நான்குபேர் அந்நாளில் நாயனொருவன் என்று
நம்பியே கனி.்.ப்கள் நாமமதும் பெற்று
ஏன்என்று எவருமே ஏரெடுத்தும் பாரா
எளிநிலையில் வாழ்வதனை ஏந்தளரும் அறிந்தார்

107. அன்னோரை அணுகித்தான் அல்அமினும் நன்கு
ஆண்டவனைப் பற்றியதாம் அருந்தெளிவைக் கேட்டார்
இன்பத்தில் திழைத்தவராய் இதயமே உவந்தார்
இப்ராகிம் மார்க்கத்தை இனிதறியத் தவிர்த்தார்

108. பரந்தவெளிப் பாலைகளில் பாறைகளில் எங்கும்
படைத்தோனை அறிகின்ற பேரவாக் கொண்டு
சிரத்தையெலாம் முற்றாகச் செலுத்தியதில்த் தினமும்
சிந்தனையில் மூழ்கிட்டார் சந்தோசம் இழந்தார்

109. கிராமலைக் குகையினிலே கனமான சிந்தையில்
கடுமையாய் மூழ்கிட்டார் காசினியில் நான்யார்?
வராதா விடையதுவும் வந்துதித்ததும் ஏனோ!
விதவிதமாய்ச் சிந்தித்தார் விடைகாணத் தவிர்த்தார்

110. மலைக்குகையில் அன்னவரும் மன்னோனை எண்ணி
மாபெரிய தவத்தினிலே மனமொன்றி இருக்க
கலையாகப் பேரொளியும் கண்முன்னே தோன்ற
காதாலே பேச்சொலியும் கேட்டாரே அங்கு

111. அதிர்ச்சியுடன் அச்சமுமே அவர்க்கங்கே தோன்ற
அவ்விடமே விட்டகன்று அதிஏக்கம் கொண்டார்
அதிவிரைவாய் அவ்வொளியும் அவரையே தொடர
அடைந்திட்டார் ஏக்கமதும் அதிகளவில்த் தானே


Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

112. மற்றொருநாள் அன்னவரும் மலைகிரா இருந்து
மனக்கவலை யுடனேதான் மனைமீழ வருகையில்
உற்றகுரல் முகம்மதென்க உருக்கமாய்ப் பார்த்தார்
உரியவர்கள் எவருமில்லை உள்ளம்குழம் பிட்டார்

113. மீண்டுமே அக்குரலும் மாபெரியோன் அல்லாஹ்
மாநபியே அஸ்ஸலாமு அலைக்கும் என்றே
நன்முறையில் நெருங்கியவர் நற்காதில் மொழிய
நிமிர்மலையும் அதனைத்தான் நன்கெதிர்ஒலி செய்தது

114. அதிர்ச்சியினால் தளர்ச்சியுற்ற அண்ணலரும் ஆங்கே
அதிவிரைவாய்த் தம்முடைய அகத்தினையே அடைந்தார்
கதியில்லாத் தன்நிலைக்காய் கலங்கியே நின்றார்
காண்கின்ற காட்சிகளை கண்ணெதிரே மீட்டார்

115. இல்லத்தில் இந்நிலையில் இனியவரும் தூங்க
இப்போதில் பேருருவம் இங்கேயும் வரவே
நல்லபெரும் கூச்சலிட்டு நாயகரும் எழும்ப
நாயகியாம் கதிஜாவும் நன்கருகே வந்தார்

116. உண்மைநிறை உத்தமரே உங்களுக்கு யாதோ!
உண்மைகளை மறைக்காமல் உரைத்திடுவீர் என்று
கண்ணேநிகர் மனைவியார் கதிஜாவும் கேட்க
கணவரவர் நேர்ந்தபடி கதையாவும் சொன்னார்

117. ஆறுதிங்கள் இவ்வாறு அடைந்திட்ட இன்னல்
அத்தனையும் அழகாக அண்ணலரும் செப்ப
பேறென்றே தான்பெற்ற பாசத்தின் கணவர்
பயமெல்லாம் போக்கிடவே பகன்றிட்டார் கதிஜா

118. உண்மைநெறி பின்பற்றி உலகில்வாழ் கின்றீர்
உதவிதனை ஏழையர்க்கு உவந்தேஅளிக் கின்றீர்
நன்மைதனை நாநிலத்தில் நாடிச்செய் கின்றீர்
நாயனவன் உங்களுக்கு நாசமது நாடான்


Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

119. என்றேதான் ஏந்திளையாள் ஏந்தலரைத் தேற்ற
ஏராளம் கதைகளினை எடுத்தேதான் இயம்பி
நன்முறையில் தைரியத்தை நாயகருக் களித்தார்
நன்றென்றே நாயகரும் நங்கைமொழி கேட்டார்

120. இவ்விதமாய் இல்லாலும் இயம்பியே முடிக்க
இதோஎனைப் பிடிப்பதற்கு இவ்வுருவம் அந்தோ
இவ்வாறு பதறிட்டார் இனிமைமிகு நாதர்
இல்லாலும் உருவமது இல்லையே என்றார்

121. ஏந்தலர்க்கு மட்டும்தான் எளிலுருவம் தெரியும்
எவர்கண்ணும் கண்டுவிட எக்காலும் முடியா
பூந்துனரின் மென்மைமிகு பண்பாளர் கதிஜா
புரியாத புதுமையிலே புதைந்தேதான் போனார்

122. அண்ணலரைத் தன்மடியில் அணைத்திட்ட மங்கை
அவருக்குப் போர்வையென அமைந்திட்டார் அப்போ
நன்முறையில் கேட்டிட்டார் நாயகரே உருவம்
நிற்கிறதா இப்போதும் நவில்வீரே நன்கு

123. இப்போது அவ்வுருவம் இங்கில்லை என்று
இனியவரும் இயம்பிட்டார் இல்லாலும் அப்போ
தப்பாமல் சொல்கின்றேன் தரிசனமே தந்தோர்
தயாளனின் அமரர்தான் திடமாக என்றார்

124. எவ்வாறு தானறிவீர் ஏகன்அம ரர்என
ஏந்தலரும் இயம்பிடவே எழிலரசி கதிஜா
இவ்வுலகில் பெண்கற்பை இனிதேதான் காப்போர்
இவ்வமரர் இதுசைத்தான் இலஎன்றே சொன்னார்

125. பங்கமிகு இப்பாரும் புனிதமே ஆக
பாங்கான வேதமதும் பாதையாய்ப் போக
எங்கனுமே சத்தியங்கள் எழிலுடனே திகழ
ஏகனே உன்தூதை எங்களுக்கு அருள்வாய்


Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

126. இவ்வாறு அல்அமினும் இறைஞ்சியே நின்றார்
இதயத்தில் ஏக்கமது இருப்பென்றே இருக்க
எவ்வாறும் இறைநெறியை இதமாக அறிய
ஏராள முயற்சிகளை எடுத்தேதான் நின்றார்

127. மலைக்குகையில் தியானம் மாதவரும் செய்ய
மலக்குகளின் தலைவரவர் மாஇறையின் தூதை
நிலைத்திடவே இஸ்லாமும் நிலத்தினிலே நன்கு
நேர்த்தியுடன் கொணர்ந்தாரே நாயனவன் பணிப்பில்

128. பேரொளியின் பிளம்பாகப் பெருமானின் முன்னே
பளிச்சிட்ட பேருருவைப் பார்த்தவுடன் அவரும்
யாரோவென அதிர்ந்தேதான் ஆகிட்டார் அங்கே
யாதொன்றும் புரியாமல் யேங்கியுமே போனார்

129. பேருருவும் பட்டெழுத்தில் பளிச்சிட்ட துண்டைப்
பக்குவமாய் விரித்தேதான் பார்த்திடவே காட்டி
கூறியதே ஏந்தலர்க்கு ஓதிடுக என்று
கூறிட்டார் அண்ணலரும் ஓதலறி யேனே

130. சுடருருவும் உடனேயே செம்மலர்உடல் பற்றி
சுக்குகளாய் நொறுங்களவு செப்புகிற வண்ணம்
இடரதுவும் ஏற்படவே இறுகவே நெரிக்கி
இறுக்கத்தைத் தளர்த்திப்பின் இயம்பியதே ஓத

131. அண்ணலரும் இப்போதும் அறியேனே ஓத
அச்சமுடன் செப்பிட்டார் அப்போதில் ஒளிவுரு
நன்றாகப் பற்றிடவே நல்கியவே தனையில்
நாயகரும் அப்போதில் நன்னிலைஇழந் திட்டார்

132. மீண்டுமே ஓதுவென்று மாஒளியுரு இயம்ப
மாதவரும் யான்ஓத முடியானே என்க
மீண்டும்தான் அன்னாரின் மேனிபற்றி நெருக்கிட
மாபெரிய வருத்தத்தில் மூழ்கினார் அவரும்


Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

133. இறுக்கிட்ட ஒளியுருவின் இறுக்கத்தால் இவரும்
இதயத்தில் ஒளியுடனே இதமான தெளிவும்
நிறைவாகப் பெற்றிட்டார் நிலத்தினிலே தாக்கும்
நாசமெலாம் தாங்குகிற நற்திறனும் பெற்றார்

134. இப்போதில் சுடருருவும் இனியோரை நோக்கி
இன்பம்தவழ் புண்ணகையாய் இயம்பியது இனிதே
ஒப்பில்லா இறையோனின் உன்னதத்துப் பெயரால்
ஓதுக என்றதுடன் ஓதியது தொடராய்

135. உயரியதன் கற்பனையால் ஓரிறையும் மனிதனை
உலகினிலே படைத்திட்டான் உயர்ஞானம் அளித்தான்
நியமமாய் எழுதவுமே நல்லவழி செய்தான்
நவின்றவுரு வாசகங்கள் நாயகரில் நிலைத்தது

136. உரைத்திட்ட ஒளியுருவின் உயர்உரைகள் யாவும்
உத்தமனார் உள்ளத்தில் உன்னதமாய்ப் பதிய
நிறைவாக அண்ணலரும் நவின்றிட்டார் அதனை
நெடுநிலத்தில் நாயன்மறை நன்றாய்ஓ திட்டார்

137. ஓதியபின் பார்க்கவே ஒளியுருவம் இல்லை
உத்தமனார் திடுக்குடனே உயர்மலைக்குகை விடுத்து
வேதனையாய் விண்ணையுமே வெறித்தேதான் பார்க்க
வந்தஒளி உருவதுவும் விரையவே கண்டார்

138. அச்சமது அண்ணலரின் அகத்தினையும் பற்ற
ஆனதுதான் தனக்கெதுவோ ஆதொன்றும் அறியா
இச்சகத்து நிலையினிலே இன்னலிலே திழைத்தார்
இவ்விடமே விட்டகன்று இல்லிடத்தை அடைந்தார்

139. இல்லத்துள் நுழைந்தவுடன் இல்லாளை நோக்கி
இதமாய்த்தமைப் போர்த்திடவே இயம்பிட்டார் உடனே
நல்லபடி போர்த்தியே நாயகியும் திகைத்தார்
நாயகரின் நல்லெழிலை நாட்டமுடன் நுகர்ந்தார்


Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

140. மலைக்குகையில் நிகழ்ந்திட்ட மறக்கவொணா நிகழ்வை
மன்னவரும் மறைக்காமல் மங்கையிடம் மொழிந்தார்
நிலையறிய நாடிட்ட நங்கையரும் உடனே
நல்லறிவு மேதையரை நாடிட்டார் தானே

141. வரக்காவெனும் மேதையிடம் விளக்கமாய் யாவும்
விதந்துரைத்தார் கதிஜாவும் விடைபகன்றார் அவரும்
சிறப்புமிகு நபியேதான் சீராளர் முகம்மத்
செப்புறதே வேதமதும் சீராக என்றார்

142. ஒளிச்சுடரின் உருவாக உம்கணவர் முன்னே
உன்னதநா முஸ்அக்பர் உண்மையாய் வந்தார்
துளியளவும் ஐயமில்லை துணைவரோ இறையின்
தூதாவார் என்றேதான் துணிந்துரைத்தார் வரக்கா

143. மகிழ்ச்சியிலே திழைத்திட்ட மனையாளாம் கதிஜா
மனைமீண்டு தூதர்என மலர்ந்திட்ட நல்ல
நிகழ்வேதான் நிகழ்ந்ததெலாம் நீங்கள்இறை தூதர்
நித்தியமாய் உலகிற்கு நல்விடிவே என்றார்

144. இல்லாலும் இயம்பிட்ட இனியமொழி கேட்டு
இதமான கிளர்ச்சியலை இதயத்தில் மேவ
வல்லலுக்கு மீண்டுமே வந்ததுவே நடுக்கம்
வாய்த்தபடி பஞ்சணையில் வகையாகப் படுத்தார்

145. அப்போதில் வானவர்க்கு அரசராம் ஜிப்ரீல்
அங்குற்றுப் போர்வைக்குள் அயர்ந்துறங்கு வோரே
தப்புநெறி மக்களினைத் தக்கநெறிக் கழைப்பீர்
தனிமுதலோன் கட்டளையைத் தெரிவித்துச் சென்றார்

146. வானவரும் வந்துசென்ற வாஞ்சைமிகு நிகழ்வை
வாய்த்திட்ட வனிதைக்கு வகையாகச் சொன்னார்
ஆனஆ றுதல்களெலாம் அவ்வனிதை கூற
ஆனாலும் அண்ணலரின் அகத்தினிலே ஏக்கம்


Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

147. இறைஏவல் வந்தபினே இனியானும் ஏனென
இருந்திடவே இயலாது இறைவழிக்கு மக்களை
முறையாக அழைத்திடினும் மனமொன்றி வரார்
மனமுடைந்து அண்ணலரும் மகிழ்விழந்து நின்றார்

148. இல்லாளாம் கதிஜாவும் இவ்வேளை வீட்டில்
இறையோனும் ஒருவனே இறைதூதர் நீங்கள்
நல்முறையில் வழிப்படுதல் நம்கடனே என்றார்
நாயகரும் நல்மகிழ்வில் நனைந்தே போனார்

149. நாட்கள்பல நகர்ந்தபின் நாயகரும் க.்.பா
நாடியே சென்றிட்ட நாள்ஒன்றில் ஆங்கே
நீடியதாம் வயதினது நல்லறிஞர் வரக்கா
நடந்திட்ட மலைக்குகை நிகழ்வதனைக் கேட்டார்

150. அண்ணலரும் அழகுடனே ஆங்குற்ற நிகழ்வை
அறைந்திட்டார் அனைத்தினையும் அறிவறிஞர் வரக்கா
நன்முறையாய்க் கேட்டபினே நவின்றிட்டார் உமக்கு
நபிப்பட்டம் கிட்டிட்டு நலம்புவிக்கு என்றே

151. மீண்டுமே தொடர்ந்துரைத்தார் மாமேதை அவரும்
மாபெரிய இன்னல்களை மக்கத்தார் புரிவர்
காண்பீரே நிச்சயமாய்க் கண்ணான ஊரும்
கைவிட்டுப் போகின்ற கேடுவரும் என்றார்

152. பின்னொருநாள் ஜிப்ரியிலும் பெருமானை அணுகி
படைத்தோனைத் தொழுகின்ற பாங்கதனைக் காட்டிச்
சென்றிட்டார் செம்மலரும் சிறப்பின்மனை வியுடன்
சஞ்சரித்தார் தொழுகையிலே தினமிருமுறை தானே

153. அண்ணலரும் அருமைமிகு அன்னையரும் தொழுகிற
அதிசயத்தைப் பார்த்திட்ட அலியென்னும் சிறுவர்
நன்முறையில் கேட்டறிந்து நாளுமே நபிவழி
நன்குதொடர் சிறுவர்என நன்கேதான் திகழ்ந்தார்


Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

154. அண்ணலரும் அலியாரும் அன்னைகதி ஜாவும்
அல்லாஹ்வைப் பணிகின்ற அருந்தொழுகை முறையைக்
கண்டிட்ட அபுதாலிப் கடும்விசனம் கொண்டு
காரியமிது என்னவெனக் கடுமையாய்க் கேட்டார்

155. உலகத்தைப் படைத்தாளும் ஓரிறையைத் தொழுதோம்
உன்னதத்து இப்ராகிம் உயர்மார்க்கம் இதுவே
நலமுடனே இம்மார்க்கம் நாளுமே தொடர்வீர்
நபிமணியும் இவ்வாறு நவின்றிட்டார் அவர்ட்கு

156. இவ்விதமாய் இயம்புதற்கு இப்பதியில் நீயார்
இகழ்நகையாய் இயம்பிட்டார் இங்குஅபு தாலிப்
இவ்வுலகைக் காத்தருளும் இறைதூதன் யானே
இயம்பிட்டார் அண்ணலரும் இதமாக அங்கு

157. உம்முடைய வணக்கம்தான் உயரிப்ரா கிமுடை
உன்னதமாம் வணக்கமென உள்ளமெந்தன் அறியல
உம்வழியில் வந்துயான் உம்வணக்கம் செய்யின்
உறவார்எனை நகைத்திடுவர் உரைத்தார்அபு தாலிப்

158. மேலுமே அவருரைத்தார் மண்ணிலே உனக்கு
மாந்தரால் கொடுமைகள் மேவிவர விடேன்
காலமெலாம் உனைக்காப்பேன கவணமாய்ப் பார்ப்பேன்
கவலையைத் தவிர்த்திடுவாய் கண்மகனே என்றார்

159. உன்தோழர் முகம்மதுவும் உயரிறையின் தூதாய்
உரைக்கின்றார் தன்னையுமே ஊரையே குழப்ப
நன்முறையில் இருந்திடுவீர் நம்பிமா யாதீர்
நவின்றார்அபு பக்கரிடம் நாசத்தின் நெஞ்சார்

160. என்னருமைத் தோழராம் ஏற்றமிகு முகம்மத்
எதுஉரைக்கின் உண்மையே எல்லாமும் என்றார்
மண்ணுலகின் இறைதூதர் முகம்மதுவும் ஆவார்
மனமொப்பி முழங்கிட்டார் மறைஇஸ்லாம் ஆனார்


Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

161. அண்ணலரின் அருந்தோழர் அபுபக்கர் அப்போ
அல்லாஹ்வின் மார்க்கமதை அகமுவந்து ஏற்றார்
என்னருமைத் தோழராம் ஏந்தல்முகம் மதுக்கு
என்றுமே துணையாவேன் என்றுரைத்தும் நின்றார்

162. மறைவாக மன்னோனின் மார்க்கத்தை நபியும்
மக்கநகர் மீதினிலே மொழிந்துவரல் கண்டு
அருளாளன் அல்லாஹ்வும் அனைவருமே அறிய
அறைந்திடவே அருள்மார்க்கம் ஆணைதனை யிட்டான்

163. பயிரங்கப் பிரச்சாரம் பண்ணிடவே எண்ணி
பயகாம்பர் நபியவர்கள் பலமாக முயன்றார்
உயிரான தம்காசிம் உடைகுலத்தார் அழைத்து
உணவிட்டு உரைத்தார்கள் உயரிறையின் மார்க்கம்

164. அப்போதில் ஆங்குற்ற அபுஜகிலும் எழுந்து
அருந்திடவே உணவுக்காய் அழைத்திட்டீர் வந்தோம்
இப்போதில் உன்உரையோ இங்கெதற்கு என்று
இயம்பியே நடைபோட்டான் இருந்தோரும் தொடர

165. மற்றொருநாள் இவ்வாறே மாவிருந்து படைத்து
மாநபியும் குடும்பத்தார் மத்தியிலே உரைத்தார்
பொற்பதியும் பூவுலகும் படைத்தோன்தன் தூதாய்
பணியாற்றத் தேர்ந்தென்னைப் பணித்துள்ளான் உதவீர்

166. இறைதூதர் மூஸாவுக் இங்குற்ற காறூன்
இனியதுணை போலவே இப்போது நமது
நிறைகுலத்தில் எவரேனும் நற்றுணையாய் எனக்கு
நின்றிடத்தான் வருவீரோ நவின்றிடுவீர் என்றார்

167. ஒருத்தருமே உதவுதற்கு ஒப்பவில்லை அங்கே
உவப்புடனே அலியாரே உரைத்திட்டார் நானும்
தருகின்றேன் என்னையே தீன்பணிக்கு என்றார்
திரும்பவுமே அண்ணலார் திருவாய்யால் கேட்டார்


Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

168. அப்துல்ம ணாப்கிளையில் ஆர்எனக்கு உதவ
ஆயத்தம் எனக்கேட்டார் ஆருமே இல்லை
அப்போதும் அலியேதான் அர்ப்பனம்நான் என்றார்
அடுத்தோர்கள் எள்ளிநகை ஆடிநின்றார் அங்கு

169. இவ்வாறு மூன்றுமுறை இறைதூதர் கேட்டும்
இயம்பாமல் பதிலேதும் இவ்வுறவார் இருக்க
அவ்வேளை எல்லாமும் அலியேதான் வந்தார்
அண்ணலரும் அகத்தாலே ஆனதெலாம் ஏற்றார்

170. படிக்காத மூடரது பரிகாசம் கேட்டும்
படைத்தோனின் மார்க்கத்துப் பணிகளினைச் செய்தார்
தொடரவே பிரச்சாரம் தந்தஇறை ஆணையை
தாங்கியே நபியவரும் தொடர்ந்தார்கள் பணியை

171. அண்ணல்நபி ஸ.்.பாமலை அடைந்தொருநாள் அங்கு
அதிலூரத்த குரலினிலே அனைவரையும் வேண்டி
நன்முறையாய் நவின்றிட்டார் நல்லுதவி தாரீர்
நாடியே எல்லோரும் நன்கங்கே திரண்டார்

172. எதற்கென்று இங்கேயும் ஏங்கித்தான் அழைத்தீர்
என்றேதான் எல்லோரும் ஏக்கமுடன் வினவ
எதுவிதவோர் பொய்மையும் என்நாவும் உரைக்க
என்றேனும் நீங்களெலாம் ஏதொன்றறி வீரோ!

173. இல்லையென எல்லோரும் இதமாக உரைக்க
இம்மலையின் பின்னாலே இன்னல்நல் படைகள்
அல்லவா உள்ளதென அறைந்திடிலோ நானும்
ஆம்என்று ஏற்பீர்தான் அனைவருமே என்றார்

174. உருவமிலா ஓரிறையே உலகத்தைப் படைத்தோன்
உய்வதற்கு அவனையே உயர்வணக்கம் செய்வீர்
உருவத்தைச் சிலைகளினை ஒருபோதும் வணங்கா
உரைத்திட்டார் நல்முறையில் உம்மிநபி அங்கே


Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

175. அப்போதில் கொடியோனாம் அபுலகப்பு என்போன்
ஆத்திரமே உற்றவனாய் அண்ணலரைத் திட்டி
தப்பாமல் புழுதியினைத் தாவியள்ளி நபியுடல்
தழுவிடவே செய்துதான் தன்கோபம் தீர்த்தான்

176. இக்காலை இன்னரும்பால் இனிதூட்டி வளர்த்த
இனியதாய் கலிமாவும் இச்சையுடன் நபியை
தக்கபடி காண்பதற்கு திருநகராம் மக்கா
தனைவந்து அடைந்திட்டார் திருநபியும் மகிழ்ந்தார்

177. தன்னருந்தாய் கலிமாவைத் தான்கண்ட நபியும்
தாங்கொன்னா மகிழ்வினிலே தானாகிப் போனார்
மண்ணுலகின் மாபேற்றை மகத்துவமாய் அழைத்து
மதிப்புமிகு தன்துனியின் மீதமரச் செய்தார்

178. பெருமானார் திருமறையின் போதனையால் நாளும்
பெருகிவரும் புதுமறையால் பெருங்கோபம் பொங்க
குறைசியரும் கொடுமைகளை குறைவின்றி நித்தம்
கொடுத்தேதான் வந்தார்கள் கருணைநபிக் கிங்கு

179. ஆண்டவனும் தன்தூதாய் அப்துல்லாஹ் மகனை
ஆக்கியே உள்ளானாம் ஆள்வேறு இலையா?
விண்ணவரின் தலைவருமே வானிருந்து வந்து
விதப்புரைகள் இவருக்கு வழங்குகிரா ராமே

180. கற்பனைக்கு எட்டாத கதைகள்கதைக் கின்றார்
கண்காணா விடயத்தைக் கண்டதைப்போல்க் கூறி
பொற்பதிக்கு நாம்செல்ல புனிதமறை அவரும்
புகட்டுவதாய்க் கூறுகிறார் பித்தரவர் தானே

181. அன்றுதொட்டு நாம்வணங்கும் ஆனபெரும் தெய்வம்
அத்தனையும் தூற்றுகிறார் அழிவுடையோர் நாம்மாம்
நன்றாக உரைக்கின்றார் நரகேதான் எமக்காம்
நாளுமே கதைத்தவரும் நமைநகைத்து வாரார்


Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

182. இனிஇவரை இவ்வாறே இப்பதியில் விட்டால்
இழிவேதான் எங்களினை இதமாகப் பற்றும்
கனமுமே இவர்மார்க்கம் காலூன்றா தாக்கக்
காரியத்தில் நாம்இறங்கல் கடமையே என்றார்

183. அண்ணல்நபி அருள்மறையை அருளுமிட மெல்லாம்
அடிதொடர்ந்து சென்றேதான் அடையலரும் நபிகள்
சொன்னதெலாம் பொய்யென்று சொல்லிடுவர் நரர்க்கு
செய்கின்ற இன்னல்களில் சுகந்தமே காண்பர்

184. வசைகளினைக் கவியாக்கி வள்ளல்நபி மீது
வகைவகையாய்ப் பாடுவதில் வாஞ்சைமிகக் கொள்வர்
அசையாத கல்நெஞ்ச அரக்கர்கள் அங்கு
அண்ணலர்க்கு இழைத்திட்ட அல்லலோ அதிகம்

185. தெருஅலையும் சிறுவர்களைத் திரளவே செய்து
தகாத வசைமொழியால் திட்டவுமே வைப்பர்
வருமிடங்கள் தனிலெல்லாம் வசைகளினைப் பாட்டாய்
வாய்களிலே சிந்திவர வகையுமே செய்வர்

186. பண்பாளர் நடக்கின்ற பாதைகளில் முள்ளைப்
பரப்பியே இன்புறுவர் பாதகர்கள் அங்கு
நன்முறையில் முற்களினை நாயகரும் நீக்கி
நடைபயில்வர் நாசகரோ நகைத்துமே நிற்பர்

187. வீதியிலே வள்ளல்நபி விரைந்துவரும் வேளை
வீணாகப் புழுதியினை வீசிடுவர் புல்லர்
நீதியிலா நீசத்தில் நித்தமுமே நிலைத்து
நிலத்தினிலே கொடுமைக்கு நிலைக்களமாய் நிற்பர்

188. அல்அமீன் என்றுரைத்து அணிசெய்தோர் இன்று
ஆகாத பெய்யன்என அண்ணலரைச் செப்பி
கல்லினையும் அவர்மேனி காயங்கள் காண
கடுமையாய் வீசியே களிப்பதுவும் கண்டார்


Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

189. தீங்கினிலே திழைத்திட்ட தீயோனாம் அபுலகப்
தாரமாம் உம்முஜமி தீயோளோ தினமும்
பாங்காக முள்களினைப் பாதைகளில்ப் பரப்பி
பாதகமே நாளாந்தம் பெருமானுக் கிழைத்தார்

190. வந்திட்ட கொடுமைகளை வள்ளல்நபி நாளும்
வாய்த்தவிதி தான்என்று வலிமையுடன் ஏற்று
நந்தவன நல்மணமாய் நாயன்மறை பரப்பி
நானிலத்தில் தம்பணியில் நாட்டமுடன் நின்றார்

191. உம்மிநபி புத்திரிகள் உம்முகுல்தும் ருகையா
உன்னதத்துப் பெண்ணோரை உத்பாஉதை பாவெனும்
இம்மண்ணில் இழிந்தோனாய் இலங்கும்அபு லகபின்
இருபுதல்வர் மணந்தேதான் இல்வாழ்வில் திழைத்தார்

192. வஞ்சகத்து வடிவமென வையத்தில் வந்த
வஞ்சகனாம் அபுலகபும் வள்ளல்புத் திரிகளை
துஞ்சாது தம்மகன்மார் துறந்திடஇல் வாழ்வு
சூழ்ச்சியே செய்திட்டான் துறக்கவுமே செய்தான்

193. பெண்பொருளால் ஆட்சியதால் பெருமானின் உள்ளம்
பற்றியே அவர்போக்கை பதியினிலே மாற்றல்
நன்றென்று எண்ணியே நாசப்பெரியோன் உத்பா
நற்தூதாய் வந்தேதான் நவின்றிட்டான் பலதும்

194. உள்ளத்துக் கிடக்கையிலே உள்ளதுதான் யாது
உரைத்திடுவீர் முகம்மதுவே உரைதொடர்ந்தான் உத்பா
அள்ளவே குறையாத அருஞ்செல்வம் தாறோம்
அழகுமிகு மங்கைகளும் அதிகமே தாறோம்

195. ஆட்சியதி காரமது அறைந்திடினும் தாறோம்
அகமதுவே புதுமார்க்கம் அறைவதனைத் தவிர்ப்பீர்
மாட்சிமையாம் எம்மார்க்கம் மிளிரவே விடுவீர்
மனதிருந்தவை உரைத்திட்டான் மாகொடியோன் உத்பா


Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

196. உத்பாவும் உரைத்திட்ட உள்ளத்து உணர்வை
உளவமைதி கொண்டேதான் உத்தமரும் கேட்டார்
சத்தியத்து இஸ்லாமும் சாற்றும்நெறி கொஞ்சம்
செப்புகிறேன் கேட்பீரெனச் செப்பிட்டார் நபியும்

197. பொன்பொருள் மங்கைமது பேரரசு யாவும்
புனிதமறை இஸ்லாத்தின் பிரச்சாரப் பணியில்
என்னிலே எம்மாற்றம் என்றுமே நல்கா
என்வாழ்வு வளமெல்லாம் ஏகன்இறை என்றார்

198. அண்ணல்நபி பகன்றிட்ட அனைத்தையுமே கேட்டு
அகத்தினிலே உத்பாவும் அச்சமே கொண்டு
ஒன்றும்பின் உரைக்காமல் ஊமைபோல் ஆகி
உரியதம்மோர் இடத்திற்கு ஓடியே சென்றான்

199. தம்தலைவன் வந்ததனைத் தாம்கண்ட இளைஞர்
தலைவர்உத் பாவிடத்தே திரளாகக் கூடி
எம்மோர்கள் அறிவதற்கு என்னதான் பேச்சு
எப்படியென் றியம்பிடுவீர் என்றேதான் கேட்டார்

200. முகம்மதுவின் பேச்சினிலே முழுஉண்மை கண்டேன்
மனதாலும் பொன்பொருளை முகர்கின்றார் இல்லை
இகத்தினிலே அவருக்கே இன்வெற்றி என்பேன்
இவ்வாறு இயம்பியே இன்னோர்விட் டகன்றான்

201. முகம்மதுவின் போக்கதனை மண்ணிலே மாற்ற
முடியுமோர் ஆளாக முதியோர்அபு தாலிப்
உகந்தோரென நன்கேதான் உணர்ந்தகுறை சியர்கள்
உடனடியாய் அவரிடத்தே உருக்கமாய் உரைத்தனர்

202. தம்பிமகன் முகம்மதுவை தாங்குவது தவிர்ப்பீர்
தரணியிலே எம்மார்க்கம் தாக்குவது விடுத்தும்
இம்மண்ணில் புதுமார்க்கம் இயம்புவது விட்டும்
இருந்திடவே முகம்மதுக்கு இயம்பிடவேண் டுமென்றார்



Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

203. இல்லையேல் இப்போதில் இருந்துநீ விலகும்
இவருக்காம் காப்பதனை இல்லாது செய்யும்
நல்லதாம் பாடத்தை நாங்களும்முகம் மதுக்கு
நன்களிப்போம் என்றேதான் நவின்றிட்டுச் சென்றார்

204. மீண்டுமே குறைசியர்கள் முகம்மதுவை அடக்க
முதியோராம் அபுதாலிப் மேல்கோபமும் பொங்கிடத்
தான்வந்தே தரங்கெட்ட தீச்சொற்கள் பேசி
தீர்த்திடுவோம் முகம்மதுயிர் திடமேதான் என்றார்

205. குறைசியர்கள் பகன்றிட்ட கொடும்வார்த்தை கேட்டுக்
கலங்கிட்ட அபுதாலிப் கண்ணிமையாம் மகனை
முறையாக அழைத்துத்தன் மனையினுக்கு வரவே
முதற்படியாய் ஆள்தன்னை முயன்றனுப்பி வைத்தார்

206. தந்தையரின் பணிப்பதுவும் தன்னிடத்தே வரவே
தரிக்காமல் அவர்மனைக்குத் தான்வந்தார் பெருமான்
எந்தையே என்னென்று ஏந்தலரும் வினவ
எல்லாமும் உன்விடயம் என்றவரும் உரைத்தார்

207. என்னருமை மகனாரே! ஏற்றமிகு திருவே!
என்முன்னே குறைசியர்கள் எடுத்துரைத்த விடயம்
வன்முறையால் உன்னுயிரை வாங்கிடவே எண்ணும்
வஞ்சந்தான் என்னிடத்தே விளக்கியதைச் சென்றார்

208. வயதினிலே முதிர்ந்தேதான் வாழ்வினிலே எல்லை
வந்துள்ள எந்தனுக்கு வாஞ்சையுடன் இரங்கு
துயரினிலே யானுமே துலங்காமல் ஆக்கு
துயரெல்லாம் கொட்டிட்டார் துணைத்தந்தை அவரும்

209. தந்தையது வார்த்தைகளும் தந்திடவே சோகம்
தனயரது உள்ளமுமே தந்தைக்காய் ஏங்க
எந்தனது இறைமறையை எக்கனமும் துறவேன்
ஏகனவன் அருளாலே எவ்விடரும் ஜெயிப்பேன்


Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

210. சந்திரனைச் சூரியனைச் சன்மானம் என்று
சாற்றியே வலமிடக்கரம் சஞ்சரிக்கச் செயினும்
எந்தனது இறைபணியை என்றுமே விடேன்
என்றுரைத்து ஏந்தலரும் எடுத்தடியே நடந்தார்

211. அருமைமகன் அடியெடுத்து அகலுவது கண்டு
ஆர்ந்தெழுந்து அபுதாலிப் அவர்பின்னால்ச் சென்று
பெருமைமிகு என்மைந்தா பொழுதெல்லாம் உன்னைப்
பேணியே காப்பேன்பெரி யோன்ஆணை என்றார்

212. காசிம்குலத் தார்களையும் க.்.பாவிற் காயுத
கோலமாய் அழைத்தேகிக் கர்ச்சித்தார் அங்கே
நேசமிகு நபியாரை நாசமே செய்ய
நாடுபவரைக் கொன்றிடுவோம் நாமேதான் என்றார்

213. காசிம்குலத் தோரினது கடுங்கோபம் கண்டு
கொலைஎண்ணக் குறைசிகளும் குழைநடுங்கிப் போனார்
ஆசைக்கன வெல்லாமும் ஆகாத நிலைக்கு
ஆகிடவே அவர்களெலாம் அடங்கியே நின்றார்

214. மக்கநகர் மத்தியிலே மன்னோனின் இல்லம்
மகத்துவமாய் க.்.பாவாய் மிளிர்கிறதே ஆங்கே
பக்கத்து நாட்டிருந்து பல்வர்க்க மாந்தர்
பயணித்து வந்திடுவர் பருவகஜ் மாதம்

215. கஜ்ஜுடைய மாதத்தில் கனத்தசன நடுவில்
கருணையோன் மார்க்கத்தைக் காமில்நபி உரைப்பார்
அச்சமயம் கேட்போரில் அதிகம்பேர் இஸ்லாம்
ஆகமத்தை ஏற்றிடுவர் அதிசயமே ஆங்கே

216. இதைத்தடுக்கும் நோக்கினிலே இழிந்தோராம் குறைசியர்
இவ்வாறு கூடுகிற இறைநாட்டத் தோரிடம்
கதைகள்பல பரப்பிடுவர் கயமையுடன் தானே
காமில்நபி பற்றியுமே கடும்பொய்மை உரைப்பர்



Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

217. கூடுகிற கூட்டத்தின் காதுகளில் நபியைக்
கூடாத வார்த்தைகளால் குறித்துரைப்பர் நாளும்
கேடரே சூனியத்துக் காரரே என்பர்
குறிப்பாகப் பைத்தியத்துப் பேர்வழியாய்ப் பகர்வர்

218. காமில்நபி பேச்சுக்கள் காதடையா வண்ணம்
காதிலே பஞ்சதனைக் கனமாக வைத்தே
பூமியதில் உலாவப் பகன்றிடுவர் தானே
பயனேதும் காணாமல் பதைத்திடுவர் ஈற்றில்

219. அண்ணல்நபி அறைகின்ற அருள்மறையின் போதம்
ஆங்குவரு பயணிகளின் அகமெல்லாம் தாவும்
மண்மீது மன்னோனின் மார்க்கமதும் மலர
மகத்தான பாதைஎன மாறியே போகும்

220. என்னதான் செய்திடினும் ஏந்தலரின் மார்க்கம்
ஏற்றமே பெற்றிங்கு எழிலுறுதல் தன்னைக்
கண்ணுற்ற காபீர்கள் கடுங்கோபம் கொண்டு
காமில் நாதரினைக் கொன்றிடவே முயன்றார்

221. உக்பாவெனும் கொடியோனும் உத்தமநபி கழுத்தில்
ஓர்துணியைப் போட்டேதான் உரமாகச் சுற்ற
தக்கசம யமதில்ஆங் குற்றஅபு பக்கர்
தீயோனின் பிடியிருந்து தப்பிக்கச் செய்தார்

222. இதனாலே இன்னலுற்ற இக்கொடியோன் உக்பா
இனியாராம் அபுபக்கரை இடியாய்த்தாக் கிட்டான்
அதனாலே மயங்கிட்ட அன்னாரை உறவார்
அவர்மனைக்கு எடுத்தேகி அவருயிரைக் காத்தார்

223. மற்றொருநாள் இறைவணக்கம் மாநபியும் புரிய
மாகொடியோன் அபுஜயிலும் மாநபியைக் கண்டு
பற்றுடனே உக்பாவெனும் பாதகனின் மூலம்
பெருமானின் மேல்ஒட்டகை பிறப்புக்கொடி போட்டான்



Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

224. தியானம் திழைத்திட்ட திருநபிக்கு இதுவோ
தெரியாத நிலையினிலே திருமகள்பாத் திமா
வியந்துடனே விரைந்துவந்து விலக்கியதை நபியுடல்
வனப்புறவே வகைசெய்து வேதனையில் வெந்தார்

225. அன்றொருநாள் வீதியிலே அண்ணல்நபி நடக்க
அங்கெதிரே வந்திட்ட அபுஜயில்நபி முகத்தில்
நன்றில்லாக் கறைமுகமே நாசமென உமிழ்ந்தான்
நபிமணியும் பொறுமையினை நன்றென்றே காத்தார்

226. மக்கநகர் மீதினிலே மாநபியைத் தொடர்ந்தோர்
மாபெரிய கொடுமையிலே மாட்டியே நின்றார்
தக்கனருள் என்றுமே தங்களுக்குக் கிட்டும்
தடுத்திடவே யாருக்கும் தகுதியில் என்றார்

227. குணத்தினது குன்றென்றே குவலயத்தில் திகழ்ந்த
கப்பாப்பெனும் மாந்தர்க்கு கொடியோர்கள் செய்த
கனமான கொடுமைகளைக் கதைக்கையிலே கண்ணீர்
கரைபுரண்டு ஓடுவதும் கண்ணாலே காணீர்

228. அனலினிலே அவருடலை அமிழ்த்தியே அரக்கர்
அளித்திட்ட கொடுமையிலும் அல்லாஹ்வே அல்லாஹ்
தனித்தவனே என்றேதான் திடமுடனே கூறி
தரணியிலே அல்லாஹ்வின் திருநேசர் ஆனார்

229. அண்ணல்நபி அன்பர்கள் அம்மாருடன் யாசீர்
அதுபோல சுமையாவும் அரக்கரால் அடைந்த
இன்னல்கள் அனைத்தையும் இறசூல்நபி அறிந்து
இதமாக ஆறுதலும் ஈந்தார்கள் அவர்ட்கு

230. ஒட்டகையின் கால்களிலே ஒன்றாகக் கட்டி
உத்தமனார் யாசீர்க்கு உயர்கொடுமை செய்தார்
வட்டநிலா வடிவான வனிதையார் சுமையா
வஞ்சகனாம் அபுஜயிலின் விசஅம்பால் மாய்ந்தார்


Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

231. எதிரோப்பிய நாட்டினது ஏந்தலராம் பிலால்
எத்தனிப்னு கல.'.ப்பின் ஏராள இன்னலில்
கதியற்றுக் கலங்கிட்டார் கருணையோன் அருளை
கண்ணாலே கண்டிட்டார் கீர்த்தியுமே உற்றார்

232. மக்கநகர் மண்ணதனில் மாநபியைத் தொடர்ந்தோர்
மாகொடுமைக் கிலக்காகி மாய்யும்நிலை யுற்றார்
தக்கதாம் காப்புக்காய் தாகாநபி யிடத்தில்
தாங்களுமே வாள்தன்னைத் தாங்கிடவா என்றார்

233. வாள்தன்னை ஏந்துதற்கு வல்லஇறை இன்னும்
வழங்கிடத்தான் இல்லையே வாய்ப்பதனை எமக்கு
நாள்எல்லாம் பொறுமைதனை நன்குடனே பேணீர்
நாயனருள் நிட்சயமே நம்மோர்க்கு என்றார்

234. பின்ஓர்நாள் நபிமணியை நாடிட்ட தோழர்
பிறஊர்க்குச் சென்றிடிலோ பெருமையாய் வாழும்
உன்னதமாம் நிலையொன்று உருவாகும் என்க
உத்தமரும் உவந்தேதான் உடன்பாடு கண்டார்

235. புண்ணியமே பூத்திலங்கும் பொற்பதியாம் கபஸா
போயேதான் தஞ்சமெனப் புகுவீர்கள் என்றார்
அன்புமிகு அஷ்அமா அந்நாட்டு அரசன்
அகமுவந்து தந்திடுவான் அடைக்கலமே என்றார்

236. அலியவரின் சோதரராம் ஆழ்ந்தறிவு ஜ.'.பர்
அருந்தலைமை தாங்கிடவே அபிஸீனிய நாட்டில்
நலமுடனே வாழ்வதற்கு நபிவழியின் அணியார்
நாடியே பயணித்து நாடதனை அடைந்தார்

237. அடைக்கலமாய் அபிஸினியா அடைந்திட்ட மக்களை
அரக்கர்கள் ஆகாச்செயல் ஆற்றுகிற கொடியோர்
கேடுகளை இந்நாட்டில் கெதியாகச் செய்வர்
கொடுக்காதீர் அபயமெனக் குறைசியரும் சொன்னார்



Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

238. தன்நாட்டில் தஞ்சமெனத் தான்வந்த மக்களை
தரிசித்த அரசனுமே தஞ்சத்தார் நோக்கை
நன்முறையில் செப்பிடவே நவின்றிட்டான் அப்போ
நேர்மைமிகு ஜஃபருமே நோக்கெல்லாம் சொன்னார்

239. சத்தியமே நிறைந்திட்ட சாந்திமிகு மார்க்கம்
சாற்றுகிற கொள்கைகளைச் சாற்றினார் மேலும்
இத்தரையில் குறைசியர்கள் இழைத்திட்ட கொடுமை
இவைகளையும் நன்முறையாய் இயம்பிட்டார் ஜஃபர்

240. அத்தனையும் கேட்டிட்ட அபிஸினிய அரசன்
அடைக்கலமே உங்களுக்கு ஆதரவும் தந்தேன்
எத்தகைய தடையுமில்லை என்நாட்டில் வாழ்வீர்
என்றிட்டான் ஏற்றமென எல்லோரும் மகிழ்ந்தார்

241. அண்ணல்நபி பெருமானும் அர்க்கமுடை வீட்டில்
அருள்மறையின் அர்த்தத்தை அன்பர்க்கு உரைக்க
அண்மியே கம்ஸாவும் அவ்விடத்தே வந்து
அண்ணலிடம் இஸ்லாத்தில் ஆகியதாய்ச் சொன்னார்

242. அரிவாளை ஏந்தியே அகமதுநபி தலையை
அரிந்துவரக் கிளர்ந்திட்ட ஆனபெரும் வீரர்
அரிநிகராம் உமருமே அருள்மறையை ஏற்றார்
அதனாலே குறைசியரும் அதிர்ந்தேதான் போனார்

243. இறையோனே உன்மார்க்கம் இவ்வுலகில் உய்ய
ஈர்உமரில் ஓர்உமரை இஸ்லாத்தில் இணைய
நிறைவாக உன்னருளை நல்கிடுவாய் என்றே
நாதர்நபி இறைஞ்சிட்டார் நாயனிடம் முன்னே

244. சிலநாட்கள் கழிந்தபினே செம்மலர்நபி தனிடம்
சிறந்ததோர் வீரரெனச் சிறப்புற்றுத் திகழ்ந்த
பலமேமிகு உமருமே பகன்றிட்டார் இனியும்
படைத்தோனை அர்க்கம்மனை பணிந்திடுதல் அழகல


Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

245. புனிதமிகு க.்.பாவில் பணிந்திடுதல் நலமே
புறப்படுவோம் அங்கேயே பயம்விடுவோம் என்றார்
இனிதென்றே நபிமணியும் இசைவுமே தந்திட
இறசூலினை உமர்கம்ஸா இருமருங்கும் சூழ்ந்தார்

246. இறையில்லம் நோக்கியதாம் இன்பத்தின் பயணம்
இனிதேதான் தொடர்ந்திடவே இணைந்தார்தோ ழர்கள்
கறைகொண்ட குறைசியர்கள் கலங்கியே போனார்
களிப்பினிலே முஸ்லிம்கள் காலுமே பதித்தார்

247. இத்தகைய செய்தியினை இனிதேசெவி ஏற்று
இங்கிருந்து கபஸாவும் இடம்பெயர்ந்தோர் மகிழ்ந்தார்
புத்தின்பம் பொங்கவே புறப்பட்டு மீண்டும்
புனிதபதி மக்காவை மீண்டார்கள் தானே!

248. அண்ணல்நபி குலத்தோடு ஆனதாம் தொடர்பை
அகற்றியே வாழ்தல்என அனைத்துக்குறை சிகளும்
பண்ணிட்ட தீர்மானம் புனிதக.்.பா விலே
பார்வைக்கு எழுதியே போட்டிட்டார் எத்தர்

249. மூன்றாண்டு காலங்கள் முடங்கியதாம் தொடர்பை
முறையாகத் தாங்கியதே மாநபியின் குடும்பம்
ஊண்உடைகள் மற்றுமுள உலகத்துத் தேவை
உரியபடி கிட்டாது உயரின்னல் உற்றார்

250. இதமாகக் கறையானும் இப்பத்திரம் அரிக்க
இதனாலே விலக்கதுவும் இல்லாமல் போச்சே
சுதந்திரமே கிடைத்திட்ட சந்தோசம் தன்னில்
சுற்றமுடன் நபியாரும் சஞ்சரித்து நின்றார்

251. இதனகத்துப் பின்னாலே இதுவரைக்கும் நபிக்கு
இனியதோர் அரணாக இருந்தஅபு தாலிப்
முதலோனின் கணக்கதனின் முடிவுக்கு ஏற்ப
மரணத்தை அடைந்திட்டார் மாநபியும் வருந்த



Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

252. பெரியதந்தை அபுதாலிப் புவிதுறந்து சரியாய்ப்
புலர்ந்திட்ட மூன்றாம்நாள் பிராட்டி கதிஜா
பிரிந்திட்டார் பதிவாழ்வை பெருமானும் வருந்திப்
பெரியோனாம் இறையினது பொருத்தமென்றே ஏற்றார்

253. பாசத்தின் ஊற்றான பெரியதந்தை யாரும்
பேறென்றே வாய்த்திட்ட பெரும்பாச மனைவியும்
வாசத்தை மண்விட்டு விலத்தியே போக
வருத்தத்தில் வெந்தவராய் வள்ளல்நபி ஆனார்

254. கம்ஸாவும் உமரவரும் கருணையோன் மார்க்கம்
கண்டதன்பின் எவருமே கதியருளும் வேதம்
சம்மதமே என்றேற்கச் சார்ந்துவர வில்லை
சாந்திநபி இதனாலே சஞ்சலமே உற்றார்

255. இறைமார்க்கம் இஸ்லாத்தை இவ்வுலகில் பரப்ப
இனியதளம் எதுவென்றே இதயத்தில் எண்ணி
நிறைவளமே நிறைந்திட்ட நகர்தாயிப் ஏக
நபிமணியும் ஸைதுடனே நடைபயின்றார் நன்கு

256. பத்துநாள் தாயிப்நகர் பெருமானார் தங்கி
புனிதமறைப் போதனையைப் பெரிதாகச் செய்தார்
எத்தர்கள் என்றான எல்லோரும் ஆங்கே
ஏராள இன்னல்களை ஏந்தலர்க்கு அளித்தார்

257. தாயிப்பில் நபியார்க்கு தீங்குகளே சூழ
தாங்கிடவே முடியாமல் தற்காப்புத் தேடி
தாயகமாம் மக்கநகர் தான்நோக்கி மீழ
தீயோரும் கொடுமைகளைத் தொடராகச் செய்தார்

258. கல்லடியே பட்டதனால் குருதியுமே சிந்த
கலைப்புற்று ஆங்கேயே கால்நடக்க முடியா
சொல்லொனா வேதனையில் சோர்வுற்ற நபியை
சுணங்காது ஓடிடெனத் துரத்தியே நின்றார்


Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

259. அண்ணல்நபி நாதர்க்கு அல்லலினைச் செய்த
அரக்கரினை மலைபிடுங்கி அழித்திடவே மீக்கயில்
விண்ணவரும் நபியிடத்தே வினவவே வேண்டாம்
வாரிசிவர் தீன்மார்க்கம் வரக்கூடும் என்றார்

260. தாயிபிலே தப்பியே தாகாநபி நாதர்
தாயகத்தை நோக்கியே தவித்தபடி ஓட
காயத்தின் வேதனையால் கலைப்புமே மேவ
கனித்தோப்பு ஒன்றிலங்கே கலைப்பார அமர்த்தார்

261. இத்தோட்ட ஏவலாள் இவ்வேளை அத்தாஸ்
இறைமறையாம் இஸ்லாத்தை இனிதென்றே ஏற்றார்
சத்தியத்தின் மார்க்கத்தில் சஞ்சரித்த அவரும்
சொர்க்கத்தின் பாதையிதில் சந்தோசம் உற்றார்

262. இன்னதன்பின் இனியநபி இச்சோலை விடுத்து
ஈன்றபதி மக்கநகர் இடந்தனையே மீண்டார்
தன்னிறையின் மேல்சற்றும் தளராநம் பிக்கை
தான்கொண்டு எக்கனமும் திடமாக இருந்தார்

263. தாயிப்பில் நபியார்க்குத் தீங்குகளே நேர்ந்தது
தேன்சுவையாய்க் குறைசியர்க்குத் தெரிந்ததுதான் நன்கு
வாயினிலே வந்தபடி வள்ளல்மேல்ப் பொய்மை
வழங்குவதில் அவர்களுமே வாங்சைமிகக் கொண்டார்

264. இறையில்லம் க..பாவில் இராத்திரி ஓர்நாள்
இறைதூதர் தரித்திருந்து இறைநினைவில் உறங்க
புராக்குடன் ஜிப்ரியிலும் புவியிறங்கி வந்து
புனிதமிகு மி..றாஜெனும் பயணத்திற் கழைத்தார்

265. புராக்கெனும் வாகனத்தில் பூமானை ஏற்றி
பயணத்தை ஜிப்ரியிலும் பாங்காகத் தொடர்ந்தார்
விரைவாக விண்ணிலே வல்லோனின் அர்ஷி
வரைக்கொணர்ந்து வல்லலினை விட்டகன்று சென்றார்


Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

266. அர்ஷினிலே அல்லாஹ்விடம் அண்ணல்நபி கதைத்து
அதிநொடியாய் மீண்டார்கள் அவணிக்குத் தானே!
துர்க்குணத்துக் குறைசியர்க்குத் தூதர்நபி பயணம்
தூசிக்க வாய்ப்பாகத் துலங்கியது நன்கு

267. ஏற்றமிகு கஜ்ஜென்னும் எழில்மாதம் வரவே
ஏகன்அருள் அடைவதற்காய் எண்ணிக்க:. பாவில்
போற்றிடும்நற் தவங்களினைப் புரிவதற்காய் அறுவர்
புரிமதினா இருந்துவந்து புண்ணியமே பெற்றார்

268. இனிதிவர்கள் கஜ்ஜதனை இயற்றிலிட்டு அகபா
இலங்குபெயர் வெளியினிலே இருக்கையிலே ஆங்கு
கனிவாக நபிபெருமான் கதைத்திடவே கேட்டு
கலிமாவை மொழிந்தேதான் குர்ஆன்மறை ஏற்றார்

269. கஷ்ரஜ்கிளை ஆனஇவர் களிப்புடனே தம்மூர்
கனிவர்க்க மிகைமதினா கதியாக மீண்டு
துஷ்டமெலாம் போக்குகிற தூதர்நபி மார்க்கம்
தூய்மையுடன் உரைத்திட்டார் துலங்கங்கே இஸ்லாம்

270. அறுவருடன் அடுத்தாண்டில் அறுவர்கள் சேர்ந்து
அகபாவெளி வந்தங்கே அண்ணல்தமைக் கண்டார்
உறுதியுரை பைஅத்தினை உவப்புடனே உரைத்து
உயர்மறையாம் இஸ்லாத்திற் உரியோராய் ஆனார்

271. மதினநகர் தனில்நன்கு மறைதன்னை உரைக்க
மறையறிந்த ஒருவரினை மாநபியே எமக்குக்
கதிநல்கத் தருகவெனக் கருத்துரைக்க இவர்கள்
கருணைநபி முஸ்அப்பை களிப்புடனிவர்க் ஈந்தார்

272. அகபாவெளிப் பள்ளத்தில் அண்ணலினைக் காண
ஆங்கேயணி திரண்டிருந்த அழகுபதி யத்ரிப்
முகவரியாம் எழுபத்தைந் முக்கியோர் தம்மை
மகிழ்வுடனே சந்திக்க மாநபியும் இசைந்தார்


Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

273. சிறியதந்தை அப்பாசுடன் செம்மலரும் அங்கு
சிந்தையே மகிழ்ந்தவராய்ச் சங்கமமே ஆனார்
அருமைநபி நாயகத்தை அன்னோர்கள் மதினா
அழைத்திடவே வந்ததனை அறிந்திட்டார் அப்பாஸ்

274. என்னருமைச் சோதரரின் எழில்மகனாம் முகம்மது
எழில்கொஞ்சும் யத்ரிபுக்கு ஏகிடவே வேண்டி
நன்முறையில் திரண்டுள்ள நீங்களெலாம் உணர்வீர்
நாயகர்க்கு நாற்புறமும் நாசத்தார் உண்டு

275. அண்ணலர்க்கு விரோதிகள் அவணியிலே அதிகம்
அவர்களினைக் காக்கின்ற ஆற்றல்கள் உமக்கு
நன்முறையில் உண்டாமோ நானுமே அறியேன்
நாசத்தில் நாயகரை நாம்விடவும் மாட்டோம்

276. என்றேதான் அப்பாசும் எடுத்துரைத்தார் அங்கு
எல்லாமும் கேட்டிட்டு யத்திப்அல் பாரா
என்கின்ற நல்லறிஞர் எழுந்தேதான் உரைத்தார்
எவ்விடரும் நேராமல் ஏந்தலரைக் காப்போம்

277. என்றவர்கள் கூறியே ஏந்தலரைப் பார்த்தார்
ஏந்தலரும் அப்போதில் எழில்மறையை விளக்கி
என்றுமே உங்களுயிர் என்றேகாத் தல்போல்
என்னுயிர்க்கு உறுதியுரை எடுத்துரைப்பீர் என்றார்

278. உறுதிமொழி யுடனேஎம் உயிரினையும் நல்க
உவப்புடனே வந்தேதான் உள்ளோமே நாமும்
அறுதியிட்டே நாமின்று அறைகின்றோம் உங்களை
ஆவிதுறந்தும் காப்பதற்கு ஆயத்தம் கொண்டோம்

279. அப்போதில் அபுல்ஹைறத்தம் அண்ணலினை நோக்கி
அவணியிலே உன்னதத்தை அடைந்தபினே நீங்கள்
தப்பாமல் எமைப்பேணத் தந்திடவே வேண்டும்
தக்கதோர் உறுதியெனத் தானறைந்து நின்றார்


Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

280. இச்சொலால் அண்ணலார் இன்முகமே மலர்ந்து
இற்றைநாள் முதலாய்நாம் இருப்போம்ஒரு வராய்
எச்சமய வேளையிலும் ஏற்றமே அளிப்பேன்
என்றுமே கைவிடனே என்றேதான் உரைத்தார்

281. பெருமான்நபி பேசியநற் பொன்னுரையைக் கேட்டு
பெருமகிழ்வு உளத்தினிலே பெருக்கெடுக்க அன்னோர்
சிறப்புமிகு நபிகரத்தில் செய்திடும்பை அத்தால்
செம்மலே நாமடைவது செப்பிடுக என்றார்

282. அப்போதில் அண்ணல்நபி அருள்வாய்யைத் திறந்து
அதனாலே அடைவதுவோ அருஞ்சொர்க்கம் என்றார்
இப்போதில் பேர்உரைத்து இவர்களெலாம் மகிழ்வாய்
இறசூல்நபி கரத்தினிலே இட்டார்கள் பைஅத்

283. மதினத்தார் இந்நிகழ்வு மிளிர்ந்ததனின் பின்னால்
மக்கத்து மண்ணினிலே மாமறையை ஏற்றோர்
பதிமதினா நோக்கியே பயணத்தைத் தொடர்ந்தார்
பக்குவமாய் ஓரிருவர் பயணமெனத் தானே

284. மதினத்துப் பயணமெலாம் மறைவாக நிகழ
மாவீரர் உமர்என்பார் மறைக்காமல் தானும்
மதினாவே செல்கின்றேன் மாய்ந்திடவே விரும்பின்
மறித்திடவே வருவீரென மொழிந்தேதான் சென்றார்

285. மக்கநகர் நிர்வாக மன்றத்தார் இரவில்
மறைவாகக் கூடியே மாநபியைக் கொல்ல
தக்கதாம் வழியாதெனத் தேர்ந்தேதான் ஈற்றில்
திடமாக ஓர்முடிவைத் தானெடுத்தார் அங்கு

286. ஒற்றர்களும் இவ்வேளை உவப்பாய்அங் குற்று
ஓரிறைமறை உரைக்கின்ற உதவாமுகம் மதுவும்
இற்றரைவிடுத் தெக்கணமும் இனிதேகி யத்ரிப்
இடமதனை அடைந்திடுவார் இதுஉண்மை என்றார்


Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

287. வீட்டுக்குக் குறைசிக்குல வீரர்ஒரு வரென
வந்தேதான் கூடியே வள்ளல்நபி வீட்டை
நாட்டமாய் வளைத்திட்டார் நித்திரையும் துறந்து
நிச்சயமாய் முகம்மதுக்கு நாசமின்றே என்றார்

288. வீட்டினுள்ளே ஓர்வுருவம் வடிவாய்முகம் மூடி
வாஞ்சையுடன் உறங்குவதை வஞ்சகரும் கண்டார்
ஆட்டமெலாம் இன்றுடனே அடங்குவதாய் எண்ணி
அகமதுவும் மாய்கின்ற அகமகிழ்வில் திழைத்தார்

289. அண்ணலரின் மாய்வெண்ணி அகமகிழ்வு கொண்டு
அயர்ந்திட்டார் அனைவருமே அதிசயமே அங்கு
நன்முறையில் விடியலுமே நகர்ந்துவரல் கண்டு
நாசத்தார் கொலைக்காக நபிவீட்டுள் புகுந்தார்

290. போர்த்தியே படுத்திருந்த பேரெழிலின் உருவம்
பெரியதோர் ஏமாற்றம் புரிந்ததுவே அவர்க்கு
ஆர்எவரைக் கொல்வதற்கு அணிதிரண்டார் தானோ
அவரில்லா அதிசயமும் ஆத்திரமும் அவர்க்கு

291. உந்தனது தமையனவர் உள்ளயிடம் எங்கே
உரைத்திடவே அலியவரை உறுமியே கேட்டார்
அந்தஇடம் ஆண்டவன்தான் அறிந்திடுவான் பின்னர்
அறிந்திடுவீர் நீங்கள்என அவரும் உரைத்தார்

292. மாண்புடையார் நிறைந்திட்ட மதினாநகர் தனுக்கு
மாநபியும் சென்றிடவே மாபெரியோன் இறையும்
ஈன்றிட்ட ஆணையினால் இறசூல்நபி நாதர்
இலட்சியத்தின் பயணத்தில் இணைந்திடவே முனைந்தார்

293. எழில்மிக்க யத்திரிபு ஏகிடவே இறைவன்
என்னையுமே பணித்துள்ளான் என்படுக்கையில் அலியே
எழிலுடனே படுத்திடுவீர் எக்குறையும் நேரா
என்றுரைத்தார் நபிபெருமான் ஏற்றிட்டார் அலியும்


Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

294. பின்னருமே அலியவரைப் பெருமானார் நோக்கி
பொருள்இவற்றை இவரிவர்க்கு பொருத்தஇரு சாட்சி
நன்முறையில் வைத்தேதான் நல்கிடுவீர் பின்னே
நான்செல்லும் யத்ரிபையே நாடிடுவீர் என்றார்

295. பெரியோன்இறை உமைக்காப்பான் பொறுமையே காப்பீர்
பெருமான்நபி இவ்வாறு பகன்றதன்பின் தனியே
இருப்பிடத்தை விட்டேகி இத்தரைமண் அள்ளி
இல்லம்சூழ் கொடியோர்முகம் இலக்காக எறிந்தார்

296. எம்பெருமான் வீசியமண் எதிரிகள்தம் கண்ணின்
ஏற்றமிகு பார்வைக்கு ஏற்றதடை யாச்சு
எம்மாந்தர் கண்ணுக்கும் ஏந்தலர்தென் படா
ஏற்றதோர் நிலையினிலே ஏகினார் வெளியே

297. அந்தக்கணம் கஃபாவும் அண்ணல்கண் தென்பட
அன்னையூர் துறக்கின்ற ஆறாக்கவ லையிலே
வந்திட்ட வேதனையில் வாடிட்டார் அதிகம்
வடிந்திட்ட கண்ணீரும் வதனத்தில் விழவே!

298. இறையில்லம் கஃபாவே இதயத்திலுன் பிரியம்
இன்றென்னை வாட்டுறதே! இப்போதுனை விட்டுப்
பிரிந்தேதான் செல்கின்றேன் பெரிதின்னலும் மக்கள்
புரிவதனால் எனப்பகர்ந்தே பெருமானார் சென்றார்

299. அபுபக்கர் மனைநோக்கி அண்ணலரும் சென்றே
அவர்மனையைத் தட்டிடவே அக்கணமே வந்து
அபுபக்கரும் தாள்திறக்க அண்ணலரும் வியந்தே
அன்றுசொன பயணம்தான் ஆயத்தம் என்றார்

300. பின்பின்னால் உளவழியே பயணத்தைத் தொடர்ந்து
பெருமலையாம் தௌர்நோக்கி பாதஅடி பெயர்த்தார்
அண்ணல்நபி பாதத்தடம் அழியும்படி தானே
அபுபக்கர் பின்னாலே அடிதொடர்ந்தார் ஆங்கு


Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

301. கருணைநபி பெருமானார் கல்லதனில் மோத
கசிந்திட்ட குருதியினைக் கண்டிட்ட தோழர்
பெருமானைத் தம்புயத்தால் பலமாகத் தாங்கி
பக்குவமாய் மலைச்சிகரம் போயேதான் சேர்ந்தார்

302. அங்கோர்குகை வாயினிலே அண்ணலரை அமர்த்தி
அல்லல்தரும் தேள்களுடன் அரவமுமே வரா
பங்கமிலா நிலையதனைப் பேணியபின் அவரும்
பக்குவமாய்க் குகைக்குள்ளே பெருமானைச் சேர்த்தார்

303. அயர்வுற்ற அண்ணலரும் அபுபக்கர் மடியில்
அயர்ச்சியினால் துயின்றிட்டார் அப்போதில் ஆங்கே
துயரமிகு சம்பவமே துளைவழியே பாம்பும்
துலங்குவதைக்கண்டிட்டார் தூதரரின் தோழர்

304. தம்காலால் துளையடைத்துத் தடுத்திட்டார் பாம்பை
தீண்டியது அரவமுமே தோழர்தம் காலை
தம்வேதனை யாவையுமே தாங்கித்தான் அவரும்
திருநபியின் தூக்கத்தைத் திடமாகக் காத்தார்

305. பெருக்கெடுத்த வேதனையால் பெருகிட்ட கண்ணீர்
பெருமானார் முகத்தினிலே பட்டிட்ட போதில்
பறந்தெங்கோ போயினவே பெருமானின் தூக்கம்
பாங்கரது நிலைகண்டு பரிகாரம் செய்தார்

306. உத்தமநபி தம்முடைய உமிழ்நீரைத் தோழரின்
உரியதாம் காயத்தில் உடனேயே தடவ
அத்தனைவே தனையுமே அகன்றதுவே விரைந்து
ஆறுதலே அடைந்திட்டார் அபுபக்கர் ஆங்கே

307. அண்ணலரைத் தேடினரே அரக்கரெலாம் எங்கும்
அகமதுதான் எங்கேயோ அறியலையா யாரும்
என்றேதான் அறைந்தபடி எத்திக்கும் தேடி
ஏந்தலரைக் காணாமல் ஏங்கியே திகைத்தார்


Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

308. அண்ணலரின் தோழரென அகிலத்தில் மிளிர்ந்த
அபுபக்கர் வீட்டுக்கும் அடையலர்கள் சென்று
உன்தந்தை எங்கேஎன உரைத்திடவே கேட்க
உயர்மகளாள் அஸ்மாவும் உரைத்திட்டார் பதிலை

309. தந்தையோ எங்கேஎனத் தெரியாது எனக்கு
தந்தமகள் பதில்கேட்டு தீயோன்அபு ஜகிலும்
உந்திட்ட கோபத்தால் உரமாக அறைந்தான்
உத்தமியாள் காதணியும் உடைந்தேதான் வீழ

310. பெருமானைக் கொல்கின்ற பெருமுயற்சி யாவும்
பலனின்றிப் போய்விடவே பகைவர்களும் ஈற்றில்
ஒருநூறு ஒட்டகைகள் உயர்பரிசில் அளிப்போம்
உயிராய்நபி யுடன்தோழரை உவந்தளிப்போர்க் கென்றார்

311. நபிமணியைப் பிடிப்பதற்காய்த் நாற்புறமும் தீயர்
நன்றாகத் தேடினரே நற்பதிலும் இன்றி
அபிலாசை ஈடேற அக்கொடியோர் ஈற்றில்
அண்ணலுற்ற தௌர்குகையின் அருகினையே அடைந்தார்

312. விரோதிக ளும்குகைக்கு வருவதற்கு சற்று
விரைவாகச் சிலந்தியொன்று வலைபின்னித் தானே
முறையாக வாசலினை முற்றாக அடைத்து
மாநபியைக் காத்தசெயல் மாவியப்பே மண்ணில்

313. ஆடுகளை மேய்க்கின்ற ஆளொருவர் அங்கே
அண்மித்த போதினிலே அரக்கர்களும் கேட்டார்
ஊடுருவிக் குகைக்குள்ளே உள்ளோரும் உண்டோ!
உரைப்பீரே என்றிட்டார் உரைத்தாரே அவரும்

314. பொருள்கவரும் தீயோர்கள் பொதும்பில்சில வேளை
பதுங்கியே இருந்திடலாம் புகுந்தேதான் பார்ப்பின்
பெரும்ஐயம் நீங்கிடுமே பகன்றிட்டான் அவனும்
பகன்றசொலைக் கேட்டிட்டார் பாங்கரபு பக்கர்


Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

315. இத்தகைய கதைகேட்டு இதயமே கலங்கி
இனியாம்யென் செய்திடுவோம் இருவர்தான் நாமும்
உத்தமராம் தோழரவர் உரைத்திடவே நபியும்
உயரிறையும் எம்மிடத்தே உள்ளானே என்றார்

316. இறையோனும் எம்முடனே இருப்பதனால் இன்னல்
இங்கணுக மாட்டாதென இயம்பியே நபியும்
இறைவனிடம் கரமேந்தி இறைஞ்சிட்டார் அப்போ
இருட்குகையுள் தேடிடவே இக்கொடியோர் வந்தார்

317. சிலந்திவலை குகைவாசலில் சிதையாமல் இருக்க
சிந்தைதான் இல்லையோ சிந்திப்பீர் குகையுள்
நலமென்று பதுங்கிடவே நரர்யார்தான் போயினும்
நாசமே அடைந்திருக்கும் நாம்காண்வலை என்றார்

318. இக்குகையுள் யாருமே இல்லையென எண்ணி
இன்னுயிரைக் குடிப்பதற்காய் ஈங்குற்ற கொடியோர்
பக்கத்தை மாற்றித்தான் பயணத்தைச் செய்தார்
பெருமானைப் பாங்கருடன் பெரியோனும் காத்தான்

319. மூன்றுநாள் முறையாக மாநபியும் தோழரும்
முடங்கியே தௌர்குகையுள் மறைந்தேதான் இருந்தார்
தீண்பண்டம் சேதியெலாம் தோழரபுபக் கர்தம்
தனயனவர் திறணாகத் தினமுமே கொடுத்தார்

320. நாலாம்நாள் இரவினிலே நன்கேஇருள் மேவ
நாதர்நபி தௌர்குகையை நீங்கித்தோ ழருடன்
கோலமிகு நன்நகராய்க் காட்சிதரு மதினா
கால்பதிக்கக் கஸ்வாவில் கடும்பயணம் தொடர்ந்தார்

321. பயணத்தைத் தொடர்ந்திட்ட பயகாம்பர் நபியை
படுகொலையே செய்வதற்கு பாதகன்சு ராக்கா
வியப்பூட்டும் வண்ணமாய் விரைந்தேதான் வந்தான்
வள்ளல்நபி அருகினிலே வந்துமே விட்டான்


Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

322. வந்திட்டான் அருகினிலே வம்பன்சு ராக்கா
வாய்மொழிந்தார் தோழருமே வள்ளல்நபி அப்போ
எந்தவிதச் சலனமுமே எள்ளளவும் இன்றி
ஏகன்மறை மொழிந்தபடி எழில்ப்பயணம் தொடர்ந்தார்

323. அண்ணல்நபி பெருமானை அண்மித்த அரக்கன்
அகமதுவே உமைஇப்போ ஆர்தான்காப் பாரோ!
என்செய்வீர் என்றிட்டான் ஏந்தலரும் இறைவன்
எனைக்காப்பான் என்றேதான் எழிலாக மொழிந்தார்

324. சிலநொடிகள் கடந்தபினே சுரக்காவின் குதிசை
சறுக்கிவிழ மண்ணினிலே சரிந்திட்டான் அவனும்
பலமாக முயன்றவனும் பழையபடி பரியில்
பாய்ந்தேறிப் பெருமானுயிர் பலியெடுக்க முனைந்தான்

325. விரைவாகக் குதிரையினை விரட்டியே ஓட்டி
வள்ளலரைக் கொன்டிடவே வாய்ப்பதனைப் பார்த்த
சுரக்காவின் பரிகாலினை சீக்கிரமே புவியும்
சுணங்காமல் விழுங்கிடவே சரிந்தவனும் வீழ்ந்தான்

326. மீண்டுமே பரிஏறி மாநபிதனைக் கொல்ல
மாபெரிய முயற்சிதனில் மூழ்கிட்ட அவனும்
காண்பதற்கோ அதிசயத்தின் காட்சியாய் ஆனான்
கைகூடாக் காரியத்தால் கலங்கியுமே போனான்

327. அண்ணல்தமைக் கொல்கின்ற அத்தனைமுயற் சிகளும்
ஆனதோர் பயனின்றி ஆகியே போக
எண்ணமும் மாறியே ஏந்தலிடம் அடைக்கலம்
ஏங்கியே சுரக்காவும் எழிலாகக் கேட்டான்

328. அடைக்கலமும் அவனுக்கு அளித்திட்டார் நபிகள்
அகமகிழ்வில் சுரக்காவும் ஆகியே போனான்
கொடுவாளை ஏந்தியே கொலைசெய்ய வந்தோர்
கருணைநபி காவலராய்க் காட்சிதந்தார் தானே!


Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

329. இவ்விடத்தை விட்டேதான் இறைதூதர் நீங்க
இவ்வேளை அஸ்லம்கிளை இலங்கும்புரை தாவும்
அவ்விடத்தே எழுபதுபேர் அணிதிரட்டி வந்தான்
அண்ணலரைக் கொன்றொழித்து அரும்பரிசில் பெறவே

330. ஈற்றினிலே புரைதாவும் இனிதவன்தோ ழர்களும்
இவ்விடத்தே நபிகரத்தில் இஸ்லாத்தில் இணைந்தார்
ஆற்றல்மிகு ஆண்டவனின் அருந்தூதர் தம்மை
ஆராலும் முடியாது அழித்துவிடத் தானே!

331. அதன்பின்னே யத்திரிபை அடைகின்ற பயணம்
அண்ணலரும் தொடர்ந்தார்கள் அச்சமதும் இன்றி
இதமான இச்சேதி இனியபதி யத்ரிப்
இலங்கும்நல் மக்களுக்கு இன்பமென ஆச்சு



Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

## மதினாக் காண்டம்

332. மக்கநகர் துறந்தேதான் மதினத்தை நோக்கி
மாநபியும் வருவதனால் மதினத்தார் மகிழ்ந்து
அக்கரையாய் அணைவருமே அந்நாட்டு எல்லை
ஆகியமலை திரண்டேதான் ஆவலுடன் பார்த்தார்

333. அல்லாஹ்ஹு அக்பரெனும் ஆண்டவனின் நாமம்
அறைந்தபடி அல்லாஹ்வின் அருந்தூதர் அந்தோ
சொல்லித்தான் ஓடினரே சொல்லொனா மகிழ்வில்
செம்மலரை வரவேற்கும் சிந்தையுடன் தானே!

334. மக்காவை விட்டகன்று மாநபியும் ஆங்கே
மகத்தான பயணத்தின் மலர்ந்தெட்டாம் நாளில்
எக்குறையும் இல்லாத ஏராள வளங்கள்
ஏற்றமென அமைந்தகுபா ஏகிட்டார் தானே!

335. அண்ணல்நபி பெருமானும் அழகுபதி குபா
ஆனதனில் பதினான்கு அருந்தினங்கள் தங்கி
மன்னவனாம் இறையோனை மக்களுமே வணங்க
மேலான பள்ளியினை முறையாக அமைத்தார்

336. குபாவில் தங்கிட்ட கோமான்நபி தன்னை
கதியாக யத்திரிபுக் கழைத்திட்டார் மக்கள்
அபயமென யத்திரிபில் ஆகிட்ட கிளையார்
ஆனோர்கள் வந்துதமை அழைத்தேகச் சொன்னார்

337. மதினாவில் வாழ்ந்திட்ட மக்கத்து மாந்தர்
மாநபியைக் கண்டேதான் மதினாவுக் கழைக்க
கதியாக வந்திட்டார் களிப்புடனே குபா
கால்பதிக்க மதினாவில் காமில்நபி துணிந்தார்



Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

338. ஒருநூறு தோழர்கள் ஒன்றாகத் திரள
உம்மிநபி பெருமானும் உன்னதமாம் மதினாப்
பெரும்பயணம் தொடர்ந்தார்கள் பெருமைமிகு வெள்ளிப்
பொழுதினிலே தானேதான் பெருமகிழ்வு பொங்க

339. நண்பகலில் மதினாவை நபியவர்கள் அடைந்தார்
நாள்வெள்ளி அத்தினத்தில் நல்லபடி ஜும்மா
என்றபெரும் தொழுகையினை ஏற்றமுடன் அங்கே
எல்லோரும் தொடர்ந்திடவே ஏந்தலரும் தொழுதார்

340. மதினத்து மக்களெலாம் மனமுவந்து தம்தம்
மனையினுக்கு வந்திடவே மகிழ்வுடனே அழைத்தார்
பதில்யாது உரைப்பதெனப் பெருமானும் எண்ணி
பகர்ந்திட்டார் பதிலொன்று பக்குவமாய் அங்கு

341. என்னுடைய ஒட்டகையும் எவ்விடத்தே தரித்து
எளிலாக நின்றிடுமோ ஏற்றமென யானும்
நன்றாம்என் தரிப்பிடமாய் நாட்டமுடன் ஏற்பேன்
நவின்றநபி பதிலிதனால் நல்மகிழ்வே அங்கு

342. கருணைநபி நாயகத்தின் கஸ்வாவெனும் ஒட்டை
கடந்துவந்த பயணத்தின் கடைசியிலே ஆங்கு
பெருமைமிகு பனுநஜ்ஜார் பெருமுற்றம் தன்னில்
படுத்தேதான் விட்டதுவே பெருமானும் மகிழ

343. உவகையுடன் நபிபெருமான் ஒட்டகைவிட் டிறங்கி
உயரிறைவன் தான்தங்க ஒதுக்கியதிவ் விடமே
சுவனத்து நபிசொனதை சுகிர்த்திட்ட அவ்விட
சொந்தத்து அபுஅய்யூப் சந்தோச முற்றார்

344. மகிழ்ச்சியிலே திழைத்திட்ட மனையாளர் அய்யூப்
மாநபியை மனையுள்ளே மனமுவந்து அழைத்தார்
உகந்தமுறை உபகாரம்உயர்வாகச் செய்தார்
உவப்பாக எழுதிங்கள் உம்மிநபியிங் குற்றார்



Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

345. அண்ணல்நபி வருகையினால் ஆதிப்பெயர் யத்ரிப்
அப்படியே அருகிப்போய் அருமைநபி பெயரால்
உன்னதமாம் மதினதுன்நபி உயர்பேறைப் பெற்று
உலகத்தில் திகழ்கின்ற ஓர்நிலையும் ஆச்சு

346. இறையில்லம் மதினாவில் இனிதேதான் அமைக்க
இச்சையுற்ற நபிபெருமான் இடமொன்றைத் தேர்ந்தார்
இருஅனா தைச்சிறுவர் இடமதுவென் றறிந்து
இதற்கான விலையினையும் ஈந்திடவே செய்தார்

347. தன்தோளில் கல்சுமந்து தனியோனின் இல்லம்
தாபித்து நபிபெருமான் தனிஇன்பம் கண்டார்
மண்ணுலகில் இப்பள்ளி மறையாமல் நிலைக்கும்
மக்களிதில் நிறைவரென மாநபியும் பகன்றார்

348. வளவாழ்வில் மக்காவில் வாழ்ந்திட்ட மாந்தர்
வறுமையிலே மதினாவில் வாடுவது கண்டு
உளமுருகி நபிபெருமான் உரியவழி சேர்ந்தார்
உடன்பிறப்பாய் ஏற்றுதவ ஊர்மதினார்க் குரைத்தார்

349. மகிழ்வுடனே உதவிடவே மக்காவின் பேர்க்கு
மதினத்தார் முன்வரவே மாநபியும் மகிழ்ந்து
உகந்தமுறைப் படிஇன்னார்க் உதவயின்னார் என்று
உரைத்தபடி உவப்பாக உதவிட்டார் மதினார்

350. தம்மனையில் பொருள்தன்னில் தரையதனில் பாதியைத்
தர்மமாய்ப் பகிர்ந்தளித்த தியாகச் செயலால்
இம்மண்ணில் மகிமைமிகு இதிகாசம் படைத்த
இனியபதி மதினத்தார் இறையுவப்பைப் பெற்றார்

351. பிறப்பினது உறவதுவோ புவியினிலே இன்றிப்
பெருமானார் காட்டிட்ட புனிதமறை தன்னால்
சிறந்ததொரு சோதரத்துவ சமூக மொன்று
சரித்திரமே அதிசயிக்க செழித்ததுவே அங்கு


Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

352. பிறருழைப்பில் உண்டேதான் புவிவாழ்தல் விரும்பா
பதிமக்கா மாந்தர்கள் புரிந்திடவே தொழிலும்
பிரியமுடன் கிளர்ந்திட்டார் பலபணிகள் செய்தார்
பலகூலி வணிகமெனப் பலதொழிலும் புரிந்தார்

353. திண்ணைத்தோ ழர்களெனும் தீன்மறையைத் தொடர்ந்தோர்
தங்குதற்காய் நபிபெருமான் திண்ணைதனை ஆங்கே
நன்முறையில் பள்ளியுடன் நிறுவியே கொடுத்தார்
நன்றென்றே தோழர்களும் நல்மகிழ்வு கொண்டார்

354. இறையோனைத் தொழுதலுடன் இறைமறையை ஓதல்
இவைகளையே தம்தொழிலாய் இப்பதியில் கொண்டு
வறுமையிலே வாடிட்ட வாஞ்சைமிகு தோழர்
வயிற்றுணவை வள்ளல்நபி வகைசெய்து கொடுத்தார்

355. மதினத்தில் வாழ்ந்திருந்த மாற்றுமறை யூதர்
மாநபியின் வருகையினால் மகிழ்ச்சியே யுற்று
துதிபாடி வரவேற்றார் தம்வேதம் மதிக்கும்
தூதர்நபி செயல்கண்டு திகைப்பேதான் உற்றார்

356. உடன்படிக்கை செய்தேதான் ஒற்றுமையாய் வாழ
உம்பிநபி உவப்புடனே உரியபடி யூதர்
குடியுடனே ஒப்பந்தம் களிப்புடனே செய்தார்
குதுகலமே ஆங்கேயவர் குடியிருக்கச் செய்தார்

357. இப்ராகிம் நபியவர்கள் இறையில்ஊர் மக்கா
இனிதேதான் அமைத்ததுபோல் இறசூல்நபி பெருமான்
இப்புவியில் மதினாவை இலங்கிடவே அமைத்தார்
இறசூல்நபி ஊர்என்னும் இனியபெயர் நிலைக்க

358. பொற்பதியாய் மதினாவும் பொழிவுற்றுப் புவியில்
புனிதமிகு ஊர்என்று புகழ்பெற்றே யாச்சு
நற்றவங்கள் எல்லாமும் நன்குடனே வளர்ந்து
நன்மைவிளை நற்பதியாய் நானிலத்தே ஆச்சி


Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

359. மதினாவாழ் யூதர்களோ மாநபியால் தம்மறை
மாய்ந்திடுதல் கண்டேதான் மனமுடைந்து போனார்
சதிகள்பல செய்தங்கு சாந்திநபி தன்னை
சீரழிவில் சிக்கிடவே செய்தார்கள் சதிகள்

360. அப்துல்லா இப்னுஉபை ஆனபேர் யூதன்
அண்ணல்நபி நாதர்க்கு அல்லலினை நல்க
எப்போதும் முயன்றிட்டான் ஏந்தலரும் ஆங்கே
ஏராள இன்னல்களை ஏற்றேதான் ஜெயித்தார்

361. பைத்துல்முகத் தஸ்என்னும் பள்ளிதனை நோக்கி
பாங்காகத் தொழுகையினைப் பயகாம்பர் நபிகள்
எத்தினமும் செய்வதனை எதிரிகளாம் யூதர்
ஏளனமும் செய்திடவே ஏங்கிட்டார் ஏந்தல்

362. ஏகன்இறை அல்லாஹ்விடம் ஏந்தல்நபி அப்போ
ஏற்றதொரு கிப்லாவும் ஏதென்றே ஏங்கித்
தாகமுடன் தொழுகையிலே தானிறைஞ்சி நின்றார்
தயாளன் இறையோனும் தந்தானதன் முடிவை

363. நாதர்நபி ளுகரென்னும் நன்பகலின் தொழுகை
நன்கேஇரண் டுரக்காத்து நிறைவேற்றும் போதில்
பூதலத்தின் முதலான பள்ளிக.்.பா வினது
பக்கமாய் நோக்கித்தொழப் பணித்தானே இறைவன்

364. பெருமகிழ்வில் திளைத்திட்ட பெருமானும் உடனே
பரமன்இறை பள்ளிக.்.பா பக்கமாய் உடனே
திரும்பியே தொழுதிட்டார் தோழர்களும் அதுபோல்
தொடர்ந்தார்கள் தொழுகையினைத் தக்கமுறைப் படியே

365. கீர்த்திமிகு க.்.பாவும் கிப்லாவாய் ஆனபின்
கருணைமிகு இறையோனும் கடமையென நோன்பை
நேர்த்தியாய் ஆக்கிட்டான் நபிமணியும் மகிழ்வாய்
நோற்றதுடன் ஈதுல்பித்ர் நற்திருநாள் தந்தார்


Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

366. இறையோனைத் தொழுதற்காய் இனிதழைக்கும் பாங்கை
இதமாய்அப் துல்லாஹ்பின் ஸைத்என்பார் வந்து
முறையாகத் தம்கனவில் மேவிட்ட நிகழ்வை
மாநபிக்குத் தெளிவாக மொழிந்திட்டார் நன்கு

367. கேட்டிட்ட பெருமானும் கடும்மகிழ்வில் மூழ்கி
கருமேனி பிலாலைக் களிப்புடனே அழைத்து
கேட்டிடவே பாங்கோசை கனதூரம் தனுக்கு
கரிசனையாய் உரைத்திடவே கட்டளையும் இட்டார்

368. பாங்கோசை கேட்டவுடன் பாங்கருமர் வந்து
பெருமானர் நபியிடத்தே பகர்ந்திட்டார் தானும்
ஓங்கிட்ட பாங்கொலியை உயர்வாய்இன் றிரவு
ஓர்கனவாய்க் கண்டதனை உளமகிழ்வாய் அங்கு

369. உமர் உரைத்த உரைதன்னால் உள்ளமே மகிழ்ந்த
உன்னதத்து நபிபெருமான் உரைத்தார்கள் உடனே
தமக்கிங்கு நன்நெறியைத் தந்திட்ட இறைக்கே
தான்நன்றி உரித்தாகும் தாரணியில் என்றும்

370. மதமொன்றின் தலைவரென மண்ணிலே மிளிர்ந்த
மாநபியும் இப்போதில் முஸ்லிம்இ ராஜ்சியத்
தலைவரெனும் இடத்தினையும் தனதாக ஏற்றார்
தரமாகத் தம்பணியைத் தரணியிலே புரிந்தார்

371. அகிலத்தில் அமைதிநிலை அரசோட்ச எண்ணி
ஆனமட்டும் அண்ணல்நபி அயராது உழைத்தார்
நிகரில்லா நல்லாட்சி நிலத்தினிலே நிலைக்க
நன்நெறியை நாதர்நபி நானிலத்துக் களித்தார்

372. தீன்மறையைத் தீர்த்தழிக்கத் திடமேதான் கொண்டு
தொலாயிரத் தைம்பத்தொரு தீயோர்கள் திரண்டு
ஆண்டவனாய் அவரேற்ற ஆனசிலை ஹுபலை
அடிபணிந்து தங்களுக்கு அருளிடவும் கேட்டார்


Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

373. குறைசியர்கள் படைதிரட்டி கொடுமைதனைப் புரிய
களிப்புடனே வருவதனைக் காமில்நபி அறிந்து
முறையாக அவர்களினை முறியடிக்க முனைந்தார்
மறையேற்ற தோழர்களின் மனஉறுதி கொண்டே

374. அண்ணல்நபி பெருமானை அகிலத்தில் காக்க
ஆருயிரைத் துறப்பதற்கும் அருந்தோழர் துணிந்தார்
நன்றென்றே போர்க்களமும் நாடித்தான் நின்றார்
நல்லதொரு வீரத்தின் நற்சான்றாய்த் திகழ்ந்தார்

375. முன்னூற்றுப் பதின்மூன்று மறையேற்றோர் தம்மை
மஃமூது நபியவர்கள் முறையாய்பத் ரென்னும்
உன்னதமாம் இடத்தினிலே உரியபடி சேர்த்தார்
உயர்வெற்றி பெறுவதற்கும் உயர்தலைமை கொடுத்தார்

376. உளவறிந்து பகைவர்தமை உரியபடி பொருதும்
உயரியபோர் யுக்திதனை உம்மிநபி செய்தார்
வளமான வெற்றிக்கு வழியென்றே அதுவும்
வள்ளோனின் அருளாலே விளங்கியதே நன்கு

377. பத்ரென்னும் சமவெளியில் படைத்தரப்பு இரண்டும்
பொருதுதற்காய் திரண்டிடவே போருமே மூழ
உத்தமநபி தோழர்தம் உயர்வீரம் முன்னே
ஒடிந்தேதான் மாய்ந்தனரே ஒன்னலர்குறை சியர்கள்

378. சன்மார்க்க மறையின்பெரு சத்துருவே ஆன
சாபத்தின் அபுஜயிலும் சாவுற்றான் பத்ரில்
உன்னதமாம் வெற்றிதனை உவந்தளிந்த இறையை
உள்ளத்தில் இருத்தியே உவகையுற்றார் தீனோர்

379. பத்ரினிலே தோற்றிட்ட பகைவர்தம் கூட்டம்
பழிக்குப்பழி தீர்த்திடவே பெருவாஞ்சை கொண்டார்
இத்தரையில் இஸ்லாத்தை இல்லாதழிப் பதனை
இலட்சியமாய்க் கொள்வதிலே இன்பமே கண்டார்


Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

380. பத்ரென்னும் யுத்தத்தின் பண்ணிரண்டு திங்கள்
பறந்தேதான் சென்றிட்ட பின்னராம் பொழுதில்
உத்தமநபி நன்மறையில் உள்ளோரை மாய்க்க
உஹுத்தென்னும் சமருக்கு ஒன்றானார் பகைவர்

381. மூன்றாயிரம் பேர்திரண்ட மாபெரிய படைக்கு
மூடனபூ சுப்யானும் முறையாகத் தலைமை
பூண்டேதான் சென்றிட்டான் புனிதமறை மாந்தரைப்
பூவுலகில் மாய்த்தேதான் புகழடைய எண்ணி

382. பகைவர்கள் படைதிரண்டு போரிடவே வருதலை
பயகாம்பர் நபியவர்கள் புரிந்தவுடன் தமது
நிகரில்லாத் தோழர்களை நன்றென்றே கூட்டி
நாசத்தார் போருக்காய் நாடிவரல் நவின்றார்

383. ஆயிரமாம் வீரர்களை அண்ணலரும் திரட்டி
அல்லாஹு அக்பரெனும் ஆனபெரும் தக்பீர்
வாயாலே முழங்கியே வான்மறையைக் காக்க
விரைந்தார்கள் உகத்நோக்கி வனப்பாகத் தானே

384. குறைசியர்கள் தோல்வியுற்றுக் கனதூரம் ஓட
கண்டிட்ட கணவாயின் காவலர்கள் கனிமத்
பொருள்தன்னைப் பொறுக்கவே பொறுப்பிடம்விட் டகல
பிடித்தனரே கணவாய்யைப் பகைவர்தம் கூட்டம்

385. கணவாயை விட்டகலக் கூடாது என்ற
கருணைநபி நாயகத்தின் கட்டளையை மீறி
கனிமத்எனும் பொருள்எடுக்கக் கால்பெயர்ந்து சென்ற
காரியத்தால் நேர்ந்திட்ட கடும்இழப்பு இஃதே!

386. கணவாயயைக் குறைசியரும் கைப்பற்றிப் போரை
கடுமையாய்த் தொடர்ந்தார்கள் கலங்கிட்ட முஸ்லிம்
இனப்படைக்குப் புதுத்தெம்பை இறசூல்நபி பெருமான்
இப்போதில் ஊட்டிட்டார் இன்னுரையால்த் தானே



Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

387. அண்ணல்நபி கீழ்வாயின் அருமைப்பல் ஒன்று
அடிபட்டு வீழ்ந்ததுவே அப்போதில் கல்லால்
உன்னதமாம் போர்புரிய உரியதமது படையை
உரத்தேதான் அழைத்தார்கள் உயர்நபியும் அப்போ

388. இப்போரில் அண்ணல்நபி இறந்திட்டார் என்று
இயம்பிட்டார் குறைசியர்கள் இதனாலே அங்கே
தப்பான கருத்தெல்லாம் தாவியது முஸ்லிம்
தரப்பிடத்தே இதனாலே தளம்பினரே தீனோர்

389. அண்ணல்நபி உகத்தினிலே ஆவிதனைத் துறந்த
ஆனபெரும் வதந்தியது அதிவிரைவாய் மதினா
மண்ணதனில் பரவிவிட மக்களெலாம் பதறி
மாய்த்திடவே தம்உயிரை மனமுவந்தே வந்தார்

390. அன்றிரவே மணம்செய்த "அன்சலா" என்பார்
அதிவிரைவாய் உகத்வந்து அதிதீரம் காட்டி
மண்ணறையின் வாழ்வதனை மகிழ்வுடனே ஏற்றார்
மஞ்சத்தின் குளிப்பினையும் முடிக்காத நிலையில்

391. செம்மல்நபி நாயகத்தின் சிறியதந்தை ஆன
சிறப்புமிகு கம்ஸாவும் சிறப்பாய்ப்போர் செய்து
தம்முயிரை உகத்தினிலே தியாகம் செய்தே
தனிமுதலோன் இறையோனின் திருவடியார் ஆனார்

392. தன்னுயிரைத் திருமறைக்குத் தானமெனத் தந்த
தீரராம் கம்ஸாவின் திருவுடலைச் சிதைத்து
தன்வாயில் அவரீரலை தின்றேசப் பிட்டாள்
தீயவளாம் அபுசுப்யான் தாரமாம் ஹிந்தா

393. உகத்தினிலே உயிர்நீத்த உத்தமத்துத் தோழர்
உடலங்கள் எழுபதையும் உம்மிநபி அவர்கள்
அகத்தினிலே வேதனைகள் ஆறாகப் பெருக
அணிந்திருந்த ஆடையுடன் அடக்கமே செய்தார்



Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

394. மதினத்தில் வாழ்ந்திட்ட மாகொடியோர் யூதரும்
மாநபிக்கும் மாமறைக்கும் மாசதிகள் செய்தார்
கதிநல்கும் உடன்பாட்டை கணக்கின்றி விடுத்தார்
கருணைநபி நாயகமும் கடும்சினமே யுற்றார்

395. தீனோர்க்கு எதிராகத் திரண்டேதான் யூதர்
தீரமுடன் போரிடவும் தீர்மானம் செய்தார்
ஆனதனால் அண்ணல்நபி ஆனதொரு காப்பாய்
அவ்யூதர் குடிதன்னை அடக்கிடவே துணிந்தார்

396. இருவாரம் இரும்பரணாய் இவ்யூதர் குடியை
இராப்பகல் முற்றுகையை இதமாகச் செய்தார்
பரிந்தேதான் நபியிடத்தே பகன்றிடவும் யூதர்
புகுந்திடுவீர் சிரியாவில் பகன்றிட்டார் நபியும்

397. மதுவருந்தல் மண்ணினிலே மாபெரிய கேடு
மறுத்திடுவீர் அருந்துதற்கு மதுவினையே என்று
இதமான இறைவசனம் இறங்கியது அப்போ
இதனாலே இஸ்லாத்தார் இன்பத்தில் திழைத்தார்

398. இருப்பினிலே வீடதனில் இருந்திட்ட மதுவை
இதயமது உவந்தேதான் இத்தரையில் ஊற்றிப்
பரவிடவே மதுவெள்ளம் பரவசமே உற்றார்
பெருமானார் நாயகமும் பெருமகிழ்வு அடைந்தார்

399. மதினாவை விட்டகன்ற மாகொடியோர் யூதர்
முஸ்லிம்களை அழித்திடவே முழுமுயற்சி செய்தார்
கதியன்றே கைபர்தனில் கால்பதித்த அவர்கள்
கடும்யுத்தம் புரிவதற்கு கிளர்ந்தேதான் நின்றார்

400. குறைசியரின் உதவியையும் கோரிட்டார் யூதர்
குதுகலமும் அடைந்தேதான் குறைசியரும் இசைந்தார்
பெரும்வாய்ப்புக் கிட்டியதாய் பெரிதுள்ளம் மகிழ்ந்து
போருக்காய்ப் படைதிரட்டிப் பொருதிடவே திரண்டார்


Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

401. பத்தாயிரம் பேர்கொண்ட பெரும்படையார் வந்திடும்
போர்ச்செய்தி அறிந்திட்ட பெருமானார் நபியும்
உத்தமத்துத் தோழர்களை ஒன்றேதான் கூட்டி
உரியவழி யாதுசெய்வோம் உரைத்திடுவீர் என்றார்

402. மதினாவைச் சூழவே மாபெரிய அகழி
முறையாக அமைத்தேதான் முழுவெற்றி காண
புதியதோர் போர்முறையைப் பகர்ந்திட்டார் ஆங்கு
பாங்காகச் சல்மான்எனும் பாங்கருமே அங்கு

403. அண்ணல்நபி பெருமானும் அகழிதனை வெட்டும்
ஆனபோர் முறையினையே அகமகிழ்வாய் ஏற்று
மண்மதினா எல்லையிலே மிளிர்ந்திடவே அகழி
முறையான அமைவிடத்தை மொழிந்தார்கள் நன்கு

404. அகழிதனை வெட்டிவரும் அவ்வேளை ஆங்கே
ஆனபெரும் பாறாங்கல் அகழிக்கிடை யூராய்த்
திகழ்ந்திடவே தோழர்களும் திகைத்திட்டார் நபியோ
தம்கரத்தால் பாறாங்கல் தகர்த்திடவே வந்தார்

405. இறையோனின் பேரருளில் இறசூல்நபி நாதர்
இதயம்நிறை நம்பிக்கை இதமாகக் கொண்டு
முறையாகக் கோடரியால் மலைக்கல்லைப் பிளக்க
மிளிர்ந்தஒளிச் சுடரினிலே மறைநிகழ்வு கண்டார்

406. சிரியாவுடன் பாரசிகம் சிறப்பின்யமன் யாவும்
சிக்கியே எங்களிடம் சிறையாகிப் போகும்
பெருவெற்றி நாம்காண்போம் பெரியோனின் அருளால்
பகன்றிட்டார் பெருமானும் பெருமகிழ்வில் தானே

407. வானவர்கோன் ஜிப்ரியிலும் வந்தங்கே நபிக்கு
வீழ்ந்திடுமே இம்மூன்று வளநாடும் முஸ்லிம்
ஆனவுங்கள் படையிடத்தே அப்படியே என்ற
ஆனந்தச் செய்திதனை அறைந்தேதான் சென்றார்


Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

408. இருபதுநாள் பெருமானார் இரவுபகல் என்று
இணைந்திட்ட மூவாயிரம் இனியதாம் தோழர்
பெரும்துணையால் அகழிதனைப் பாங்காக அமைத்தார்
பகைவர்தம் தாக்குதலின் பெருமரணாய்த் தானே!

409. அபுசுப்யான் தலைமையிலே அணிதிரண்டு ஆங்கே
ஆயிரங்கள் பதினாறு ஆனபெரும் படையாய்
குபுறியத்தார் வந்தவுடன் குறிப்பாய்அக ழிதன்னை
கண்டவுடன் கலங்கிட்டார் கடுமச்சம் கொண்டார்

410. உம்மிநபி பெருமானுடன் ஒப்பந்தம் செய்து
ஒற்றுமையாய் வாழ்ந்துவந்த ஓர்தலைவன் குறைலா
தம்மினமாம் யூதர்களைத் திருட்டுடனே முஸ்லிம்
திறத்தார்க்கு எதிராகத் திருப்பிட்டான் அங்கு

411. குறைசியரின் படையுடனே கருத்தொன்றி யுத்த
களத்திற்கே வந்திட்ட கள்ளமிகு யூதர்
கருத்துமுரன் பாடதனால் குறைசியரை விடுத்து
கடும்போரைத் தவிர்த்திடவே கண்டிட்டார் முடிவு

412. இடிமின்னல் மழையுடனே இயற்கையதன் நிலையும்
இன்னல்தனை குறைசியர்க்கு இழைத்ததுவே ஆங்கே
கடுமச்சம் உற்றேதான் களம்பொருதா நிலையில்
கால்கிளப்பிப் பின்வாங்கிக் கண்டிட்டார் தோல்வி

413. போர்புரிய யூதர்களும் பிரியமற்றுப் போக
போர்க்களமும் விட்டேதான் புறமுதுகு காட்டி
பார்வியக்கக் குறைசியரும் பேரோட்டம் போட்டார்
பெருவெற்றி அகழிப்போர் பெருமான்படைக் காச்சு

414. செய்திட்ட உடன்பாட்டைச் சீக்கிரமே விடுத்து
சத்துருவாம் குறைசியருடன் சேர்ந்தேதான் அகழ்ப்போர்
செய்திடவே வந்திட்ட சதிமிக்க யூதரின்
சரிதைதனை மாய்க்கவே செம்மல்நபி முனைந்தார்



Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

415. அண்ணல்நபி பெருமானார் ஆனதம்படை யுடனே
அவ்யூதர் கோட்டையினை அப்படியே வலைத்து
நன்முறையில் இருபத்தைந் துநாள்முற் றுகையை
நாட்டமுடன் செய்திட்டார் நசிந்திட்டார் யூதர்

416. அண்ணல்நபி பெருமானின் ஆனபெரும் படைக்கு
அடிபணிந்து அடங்கிப்போய் அவ்யூதர் ஈற்றில்
மண்ணினிலே தங்களது மறையறிஞர் சஅதின்
முறைதீர்ப்பின் படியொழுக முழுமனதாய் வந்தார்

417. பெருமானார் நபியவரும் பொருந்தியே முடிவை
பெருவயதின் சஅதினது பகர்தீர்வைக் கேட்டார்
இறைவேதம் தவ்றாத்தை இனிதறிந்த சஅதும்
இதுபற்றி வேதமது இயம்புவகைச் சொன்னார்

418. துரோகம் இழைப்போர்க்குத் தூயமறை தவ்றாத்
துலக்கமாய் மரணத்தின் தண்டனையே என்று
அறைந்தேதான் நிற்பதனால் அதுவேதான் எந்தன்
அகத்தினது தீர்ப்பென்றார் அணைவருமே ஏற்றார்

419. மக்கபதி துறந்தேதான் மதினநகர் வாழ்ந்த
மக்களெலாம் தமைஈன்ற மாண்பூராய்த் திகழும்
மக்கபதி மீள்வதற்கு மாவாஞ்சை கொண்டார்
மலருமிந்த நாளுக்காய் மனதினிலே தவித்தார்

420. அண்ணல்நபி பெருமானும் அக்காலை ஓர்நாள்
அவதரித்த தம்பதியாம் அருமைமிகு மக்கா
நன்முறையில் சென்றேதான் நாயன்மனை க.்.பா
நாடியே தரிசிக்கும் நற்கனவு கண்டார்

421. புனிதமிகு க.்.பாவின் பயணமது செய்து
புரிந்திடலே கஜ்ஜதனின் பெருங்கடமை என்று
இனியறசூல் நபியவர்கள் இதன்பொருளை உணர்ந்து
இறையில்லம் தரிசிக்க இச்சையே கொண்டார்


Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

422. ஆயிரத்தி நானூறு அருந்தோழர் சூழ
அண்ணல்நபி பெருமானார் அடிபெயர்ந்தார் மக்கா
ஆயுதமாய் வணிகத்தில் அரவணைத்துச் செல்லும்
அம்புவில்வாள் மட்டுமென ஆயுதத்துடன் சென்றார்

423. குதைபியா எனுமிடத்தை கோமான்நபி அடைய
கஸ்வாவெனும் ஒட்டகையும் கால்நடக்கா தங்கே
இதமாகத் தரையினிலே தரித்ததனைக் கண்டு
இயம்பிட்டார் நபியவரும் இறைசெயலிது வென்று

424. குதைபியா எனுமிவ்விடம் குடிலமைத்துத் தங்கக்
கோமான்நபி தோழர்க்குக் கட்டளையும் இட்டார்
அதைக்கேட்டுத் தோழர்களும் ஆனந்தம் உற்று
அவ்விடத்தே தங்குதற்கு ஆயத்தமே செய்தார்

425. அண்ணல்நபி பெருமானார் அமைதிதனை நாடி
அருந்தோழர் கிராஸ்தமை அனுப்பிட்டார் தூதாய்
சென்றவர்தம் சிரசதனைச் சிதைத்திடவே குறைசியர்
சீக்கிரமாய் அவர்தம்மைச் சிறைப்பிடித்தார் தீனோர்

426. சிறைப்பட்ட குறைசியரைச் சீக்கிரமாய் விட்டிடச்
செம்மலுமே பணித்திட்டார் சிறப்பமைதி நாடி
குறைசியர்க்கு தூதாகக் குணக்குன்றுஸ் மானை
குறித்ததுணை யுடன்மீண்டும் கோமானனுப் பிட்டார்

427. சமாதானத்தூதாய் சென்றிட்ட உஸ்மான்
சகாவுடன் கைதானார் சங்கதியோ இதுவும்
சமாதா னத்தூதர் சாவாகிப் போனார்
சத்துருக்கள் கொன்றிட்டார் செய்தியென வந்தது

428. வந்திட்ட செய்தியினால் வருந்திட்ட பெருமான்
வம்பர்களை மாய்த்திடவே வாக்குறுதி தன்னை
வந்ததாம் கூட்டத்திடம் வகையாகப் பெற்றார்
வீரமுடன் குறைசியரை வீழ்த்திடவே தானே



Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

429. இப்போதில் உஸ்மானும் இறசூல்நபி இடத்தை
இதமாக நோக்கிவரல் இனிதேதான் கண்டு
தப்பாமோ தம்கண்ணின் தகுபார்வை என்றே
தாகாநபி தோழரெலாம் திகைத்தேதான் நின்றார்

430. குறைசியர்கள் தம்தூதாய் குலத்திலுயர் சுஹைலை
கோமான்நபி இடத்திற்குக் கரிசனையே கொண்டு
முறையாக அனுப்பிட்டார் முடிவதனைக் காண
மாதொனியில் கதைத்திட்டார் மாநபியிடம் அவரும்

431. பெருமானும் சுஹைலும் பெரிதளவில் கதைத்து
பொருந்திட்ட விடயத்தை பெரிதோருடன் பாடாய்
வரைந்திடவே வள்ளல்நபி வீரர்அலி தம்மை
வாஞ்சையுடன் பணித்திடவே விரைந்தெழுத வந்தார்

432. இன்புடனே இன்னதுவும் இறைதூதர் நபிக்கும்
இங்கேவாழ் குறைசியர்க்கும் இடையினிலே நடக்கும்
உன்னதத்து உடன்பாடென ஒழுங்குடனே எழுத
உடன்கோபம் கொண்டுசுஹைல் உரைத்திட்டார் அங்கே

433. முகம்மதுவை நபியென்று மறுத்தோர்கள் நாங்கள்
முற்றாக நபியென்று மொழிகின்ற சொல்லை
அகற்றிடுக என்றேதான் அறைந்திட்டான் அவனும்
அலியாரும் அதைநீக்க அப்படியே மறுத்தார்

434. அண்ணல்நபி அவ்வேளை அச்சொல்லை அகற்ற
அலியவரைப் பணித்திடவே அதற்குமவர் மறுத்தார்
தன்கரத்தால் ஈற்றினிலே தாகாநபி அழித்தார்
தீர்ந்ததுவே பிரச்சனையும் தொடர்ந்ததுவே நிகழ்வு

435. குதைபியா உடன்பாடு குறித்தபடி முடிய
குதுகலமே கோமானும் கொண்டார்கள் தானே!
இதனாலே பின்னாளில் இஸ்லாத்திற் காகும்
இதமான நிலைதன்னை இனியநபி அறிந்தே


Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

436. வெளித்தோற்றப் பார்வைக்கு வரைந்திட்டஒப் பந்தம்
விரோதம் தீனோர்க்கென விளங்கியது போன்று
விளங்கிட்ட போதினிலும் வெற்றியது அதனால்
வந்திடுமே என்றேதான் வள்ளல்நபி புரிந்தார்

437. இறுதியிலே குதைபியா இவ்விடத்தில் நபிகள்
இதமாகச் சிரசுமயிர் இல்லாமல் வழித்தும்
அறுத்துமே பலியிட்டார் அங்ஒட்ட கையையும்
அதுபோன்று தோழர்களும் ஆற்றிட்டார் கிரிகை

438. இருபத்தி மூன்றுதினம் இறசூல்நபி அவர்கள்
இருந்திட்ட குதைபியா இடந்தன்னை விடுத்து
திரும்பிட்டார் மதினபதி தோழருடன் தானே!
தோழர்க்கோ திரும்புவதில் திருப்தியதும் குன்ற

439. இதன்பின்னே நபிபெருமான் இஸ்லாத்தின் தூதை
இவ்வுலக நாடுகளில் இனிதாட்சி செய்யும்
மிதவாத அரசர்களின் மனங்களிலே தாவ
மகத்தான மடல்களினை மகிழ்வாக வரைந்தார்

440. உரோம மன்னரென உயராட்சி செய்த
உன்னதத்துக் கெராக்கிளியஸ் உள்ளத்தில் இஸ்லாம்
சிறப்புடனே பதிந்தவரின் சீர்நாட்டில் ஓங்க
சரித்திரப்புகழ் காகிதத்தைச் செம்மல்நபி வரைந்தார்

441. உயரிஸ்லாம் மார்க்கத்தை உவப்புடனே ஏற்றேன்
உம்மிநபி தூதரிடம் உரைத்தேதான் மடலும்
உயர்வாக உவந்தளித்தான் உரோம மன்னன்
உண்மைநிலை அத்தனையும் உணர்ந்தார்கள் நபிகள்

442. உரோம நாட்டரசனின் உயர்மந்திரி மார்கள்
உயரிஸ்லாம் மார்க்கத்தை உரமாக எதிர்க்க
பெரும்எதிர்ப்பு மேலோங்க பொறுமையுடன் அரசன்
பழையதாம் மார்க்கத்தில் பொதிந்தபடி இருந்தான்



Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

443. இதன்பின்னே குஸ்ருஎனும் ஈரானின் அரசன்
இஸ்லாத்தில் இணைந்திடவே இறசூல்நபி கோரி
இதமாக மடலொன்றை இவன்இடத்தே அனுப்ப
இன்னவனும் சினமுற்று இன்னல்செயத் துணிந்தான்

444. மிஸ்றுவெனும் நாட்டினது முகௌகிசு நாம
மன்னனுக்கும் மாநபிகள் மடலொன்று வரைந்து
இஸ்லாத்தில் இணைந்திடவே இதமாக அழைத்தார்
இன்முகமாய் இம்மடலை இனிதேற்றான் அவனும்

445. பதில்மடலும் வரைந்தேதான் பாவையர்கள் இருவர்
பளிங்குக்கிண் ணமுடனே பாசத்தின் தனது
அதிசிறப்படை யாளமென அனுப்பிட்டான் அரசன்
அண்ணலரும் அதையேற்று அகமகிழ்ந்தார் நன்கு

446. மங்கையர்கள் இருவரிலே மாரியா இப்தியா
மாநபியின் மனைவியென மணமாகிப் போனார்
அங்கான மறுமங்கை அண்ணல்நபி தோழர்
அருங்குணத்து ஹஸானுக் ஆயினார் மனைவி

447. எத்யோப்பிய வேந்தருக்கும் எம்பெருமான் நபிகள்
ஏற்றிடவே இஸ்லாத்தை எளில்மடலும் வரைந்தார்
சத்தியத்தின் மார்க்கத்தில் சங்கமமே ஆகும்.
சேதிதனை நபியவர்க்குச் சேர்ப்பித்தான் அவனும்

448. மதினநகர் துறந்தேதான் மாற்றுஊர் கைபரை
மாகொடிய யூதரெலாம் மறுவூராய்க் கொண்டார்
கதிநல்கும் இஸ்லாத்தை கருவோடு மாய்க்க
கடும்சதிகள் அத்தனையும் கதியாகச் செய்தார்

449. கைபரினை அண்மித்த கொடியோரைத் திரட்டி
கருணைநபி மார்க்கத்தை கருவோடு மாய்க்கும்
சபதமுடன் பெரும்படையைச் சீக்கிரமாய்த் திரட்டும்
செய்தியது செம்மல்நபி செவிகளுக்கும் வரவே


Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

450. அண்ணலரும் படைதிரட்டி அரக்கர்பதி கைபரை
அடைந்தார்கள் கொடுமைதனை அடக்கியே ஜெயிக்க
தன்மருகர் அலியவரைத் தளபதியாய்ப் படைக்கு
தகுநியமம் செய்தேதான் திருவெற்றி கண்டார்

451. புலியான அலியாரின் புரியாத வீரம்
படைதன்னை அணிசெய்து பெருவெற்றி நல்க
நலிவுற்றுக் கைபர்கோட்டை நபிமணியின் காலடி
நன்றாக வீழ்ந்தனவே நாயன்மறை யோங்க

452. கைபரிலே கடும்தோல்வி கண்டிட்ட யூதர்
கடைசியிலே திறைசெலுத்தும் காரியத்தைச் செய்யும்
நிபந்தனைக்கு உடன்பட்டு நின்றார்கள் அங்கு
நபிமணியும் அன்னதனை நன்றென்றே ஏற்றார்

453. கைபரிலே நிகழ்ந்திட்ட கடும்போரில் தமது
கணவர்தனை இழந்திட்ட காரிகையாய் ஆன
சபிய்யாவை யூதஇன சுபிட்சஉற வுக்காய்
சாந்திநபி திருமணமும் செய்தார்கள் ஆங்கே

454. தோல்விதனைக் கண்டிட்ட தீக்குணத்து யூதர்
தரணியிலே நபியுயிரைத் தீர்த்திடவே நினைத்தார்
பால்போன்று வெள்ளையுள பண்பாளர் போன்று
பேசியே நபியவர்க்குப் பாதகம்செய நினைத்தார்

455. ஆட்டிறைச்சி மாமிசத்தில் அரிவையாம் சைனப்
ஆகாத நஞ்சதனை அப்படியே கலந்து
வாட்டியதம் பகைமையினால் வல்லலர்க்குக் கொடுத்து
வயிறாறப் புசிப்பீரென வாஞ்சைபோல் உரைத்தார்

456. நஞ்சுநிறை உணவென்று நபியவரும் அல்லாஹ்
நல்லருளால் உணர்ந்தேதான் நவின்றிட்டார் உணவில்
நஞ்சுண்டே நாசமேன் நாட்டிட்டீர் என்று
நவின்றேதான் கொடியோர்க்கும் நல்மன்னிப் பளித்தார்


Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

457. குறைசியர்கள் குறித்தபடி கோமான்நபி குழுவாய்
க.்.பாவரும் காலமது கனிந்திடவே மக்கள்
நிறைவான மகிழ்ச்சியதன் நிலைக்கலனாய் ஆனார்
நாயன்மனை காண்கின்ற நல்மகிழ்வில் திழைத்தார்

458. ஆண்டேழு வருடங்கள் அகதியென மதினா
அருள்மறையை ஏற்றேதான் அர்ப்பணிப்பாய் வாழ்ந்தோர்
ஈன்றதம்பதி இன்றேகும் இன்பத்தில் திழைத்தார்
இந்நாளைப் பொன்நாளாய் இதயத்தில் கொண்டார்

459. இரண்டாயிரம் தோழருடன் இறசூல்நபி நாதர்
இறையில்லம் க.்.பாவின் இருப்பிடமாம் மக்கச்
சிறப்புநகர் வந்திட்டார் சிந்தனையெலாம் மகிழ
சீராக உம்றாவும் செய்தார்கள் ஆங்கு

460. ஒப்பந்தம் தன்னைநாம் உருவாக்கிய துதப்பே
ஒருபயனும் எமக்கில்லை ஒன்னலர்க்கே நன்மை
இப்படியே அறைந்தோராய் இருந்திட்டார் குறைசியர்
இஸ்லாத்தின் மாந்தர்க்கே இதனாலே நன்மை

461. உம்றாவின் கடமையினை உம்மிநபி முடித்தபின்
உறவார்கள் வேண்டிடவே உத்தமியாள் மைமுனா
தம்மைத்துனி விதவையினைத் திருமணமும் செய்து
திரும்பிட்டார் தோழருடன் திருமதினா தானே!

462. உம்றாவை முடித்தேதான் ஊர்மீளும் போதில்
உயரியதாம் இஸ்லாத்தை உளமாற ஏற்று
தம்மக்கா பதவிட்டு திருமதினா வந்தார்
திடவீரர் காலிதிபுனு வலித்தென்னும் இளைஞர்

463. திருத்தளமாம் க.்.பாவின் திறப்பதனைத் தாங்கும்
தல்காவும் ஈன்றெடுத்த திருவிளைஞர் உதுமான்
அருள்மறையை ஏற்றேதான் அண்ணல்நபி குழுவுடன்
அழகுபதி மதினாவை அடைந்திட்டார் ஆங்கே


Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

464. பெருமானார் நபியவர்கள் பஸ்ராவேந் தனுக்கு
பெரியோன்இறை மறையேற்கும் பொருள்பதிந்த மடலை
திறனாக வரைந்தேதான் தோழரிடம் அனுப்ப
தீயவனோ தோழர்தம் திருவுயிரை மாய்த்தான்

465. ஆத்திரமே அடைந்திட்ட அண்ணல்தோ ழர்கள்
அவ்வரசனைப் பலிதீர்க்க ஆயத்தம் ஆனார்
காத்திரமாய்ப் படைதிரட்டிக் கடும்போரே புரிய
கணக்கில்மூ வாயிரம்பேர் கிளர்ந்தேதான் எழுந்தார்

466. சைதுதனையே தளபதியாய்ச் சாந்திநபி ஆக்கி
சைனியத்தை உடனேதான் செலவைத்தார் ஆங்கு
சைதுமேதான் இறந்திடிலோ சைனியத்தின் தலைமை
செல்லுமே ஜஃபருக்கெனச் செப்பியுமே விட்டார்

467. இப்போரில் ஜஃபருமே இன்னுயிரைத் துறப்பின்
இத்தலைமை செல்லுமே இப்னுரவா வுக்கு
இப்னுரவா வும்இறப்பின் இன்னொருவர் தலைமை
இப்படைக்குத் தந்திடவே இயம்பிட்டார் நபிகள்

468. போர்தர்மம் மீறாமல் புரிந்திடுவீர் யுத்தம்
பகன்றிட்டார் அறிவுரையைப் பெருமானும் படைக்கு
ஓர்இறையின் அருளாலே ஓங்கிடுமே தீன்படை
உரைத்தபடி அனுப்பிட்டார் உம்மிநபி ஆங்கே

469. உரோமப் பேரரசை உலகினிலே வீழ்த்த
உம்மிநபி படைமூத்தா ஊர்ஏகிச் சென்று
திறனாகப் போராடித் தரணியிலே வீரம்
தனைக்காட்டி வெற்றியிலே திளைத்ததுவே நன்கு

470. தீனோரின் படையணிக்கு திறனாகத் தலைமை
தந்திட்ட சைதுஎன்பார் திறனாகப் போராடி
ஆனபெரும் திறமைதனை அமர்க்களத்தில் காட்டி
ஆவியே துறந்தங்கு அடைந்திட்டார் சொர்க்கம்



Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

471. அதன்பின்னே முஸ்லிம்படை அணியதனின் தலைமையை
அண்ணல்நபி சகோதரர் அருமைமிகு ஜ.ஃபர்
இதமாகத் தந்தேதான் இன்னுயிரும் இழந்தார்
இன்பமிகு சொர்க்கத்தின் இருப்பிடமாய் ஆனார்

472. இதன்பின்னே படைதனுக்கு இப்னுரவா என்பார்
இயம்பிடவும் இயலாத இன்னருந்தலை மைதந்தார்
அதன்போது அன்னவரும் ஆவியே துறந்து
அருமைமிகு சொர்க்கத்தின் ஆளாகிப் போனார்

473. ஈற்றினிலே இப்போரில் இஸ்லாத்தின் படைக்கு
இனியபெரும் தலைமையினை இளவலாம் வலீத்
ஏற்றிட்டார் வெற்றியது ஏற்றமென ஆக
எடுத்தார்கள் ஓட்டம்தான் எதிரியெலாம் ஆங்கே

474. காலித்இப் னுவலித்தவர் காட்டிட்ட வீரம்
காரணமாய் மூத்தாவில் கலங்கிட்டார் பகைவர்
பாலில்லாப் பாலகர்போல் பதறியே ஓடி
போரினிலே புறமுதுகின் பாங்கரென ஆனார்

475. ஓர்இலட்சம் யூதர்தமை ஓர்ஆயிரம் தீனோர்
ஓரணியாய் மூத்தாவில் ஓடும்வரை விரட்டிய
போர்முனையின் நிகழ்வதுவோ பேரதிசயம் என்றே
பேர்பெற்றுத் திகழ்வதனைப் புரிவோமே நன்கு

476. இதன்பின்னோ ஒப்பந்தம் இறசூல்நபி உடனே
இனிதேதான் செய்தன்று இன்புற்று வாழ்ந்த
இதமான குஸாக்கிளை இன்னோர்க்கு இன்னல்
இழைத்திடபனு பக்கர்குல இழிந்தோரும் முனைந்தார்

477. குரோதம் மிகைத்திட்ட குறைசியரும் உடனே
கொடுமைமிகு பனுபக்கர் குலத்தார்க்கு உதவ
சிறப்பின்கு ஸாக்கிளையார் சமர்தாங்க முடியாச்
சங்கடமே வரக்க.ஃபா சந்நிதிதஞ் சமுற்றார்


Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

478. இறையில்லம் என்பதனை இதயத்தில் கொள்ளா
இழிந்தோர்கள் குஸாக்களை இறையில்லிலும் கொன்றார்
கறைகொண்ட வரலாற்றின் கர்த்தாவும் ஆகி
காசினியில் தம்அழிவின் காரணரும் ஆனார்

479. தாமடைந்த இன்னலினைத் தாகாநபி தனுக்குத்
தகுமுறையில் குஸாக்களும் தீர்வுக்காய்க் கூறி
தாமதமே இன்றியதைத் தந்திடத்தான் கேட்டார்
தீர்வதனைக் கண்டிடவே தான்துணிந்தார் நபியும்

480. எந்தனது நட்பின்கிளை என்றானோர் தமக்கு
ஏந்தானோ கொடுமைகளை ஏராளம் இழைத்தீர்
அந்தமிலா இறையின்இல் அதனினிலும் அவரினை
அநீதி யாய்க்கொன்றீர் அறிந்தேனே யானும்

481. ஆதலினால் அவர்களுக்கு அழித்திடுவீர் இழப்பு
ஆனஎமது ஒப்பந்தம் அப்படியே காப்பீர்
பாதகமென் றாலெம்ஒப் பந்தத்தை விடுவீர்
பெருமான்நபி குறைசியர்க்கு பெருந்தூதே விட்டார்

482. பெருமான்நபி தூததனைப் பொருட்டெதுவும் பண்ணா
பாதகர்கள் பகன்றிட்டார் பகரமாய் இழப்புத்
தருவதற்கு யாமில்லை தீட்டியஉடன் பாடும்
துறந்தோமே என்றுரைத்து தூசித்தார் தூதை

483. திரும்பிட்ட தூதுவரும் தீயோரின் பதிலை
தாகாநபி அவர்கட்குத் தந்திடவே நபியும்
வருவாரே அபுசுபியான் விரைவாக இங்கு
வாழ்ந்திடவே ஒப்பந்தம் வேண்டிடுவார் என்றார்

484. குறைசியரின் வேண்டுதலைக் குதுகலமாய் ஏற்று
கொடியோனாம் அபுசுபியான் காமில்நபி யுடனே
முறையாக ஒப்பந்தம் மேவிடவே கதைக்க
மதினநகர் வந்திட்டான் மானமெலாம் இழந்தே


Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

485. மதினநகர் வந்தஅவன் மகள்உம்மு கபிபா
மனைசென்றான் மகளாரும் மதிக்காது விடவே
கதியின்றி அபுசுபியான் கலங்கியே வருந்திக்
காமில்நபி பெருமானைக் னண்டிடவே வந்தான்

486. அண்ணல்நபி பெருமானும் அபுசுபியான் இடத்தே
அவாவின் றிருந்தார்கள் ஆனவுரை நிகழ்த்த
என்னதான் செய்வதென ஏங்கியே அவனும்
ஏந்தலரின் தோழர்களை ஏகியே சென்றான்

487. அண்ணலரின் அருந்தோழர் அபுபக்கர் தம்மை
அணுகியே அபுசுபியான் அறைந்திட்டான் தனக்கு
பண்ணிடுக சிபாரிசு பெருமானுடன் கதைக்க
பதிலதுவோ முடியாது பகன்றாரபு பக்கர்

488. பின்னர்அபு சுபியானும் பெருவீரர் உமரை
பேருதவி தமக்கிப்போ புரிந்திடவே கோர
உன்னையே கொன்றிடுவேன் ஓர்வாய்ப்புக் கிட்டின்
உண்மையே இதுவென்று உரைத்திட்டுச் சென்றார்

489. அலியாரை அணுகியுமே ஆனபலன் கானா
அனுதாப நிலையினிலே அபுசுபியான் நன்கு
நலிவுற்று வருந்தியே நகர்தனதாம் மக்கா
நாடியே திரும்பிட்டான் நலலொன்றும் இன்றி

490. மக்காவை மீண்டிட்ட மாமுதியோன் சுபியான்
மதினாவில் நிகழ்ந்ததனை மறைக்காது சொன்னான்
அக்கரையாய்க் கேட்டிட்ட அனைவருமே அவனை
அவமதித்து இழிந்துரைத்து அகன்றேதான் சென்றார்

491. இறையில்லம் அமைந்திட்ட இனியபதி மக்கா
இரத்தமது சிந்தாமல் இஸ்லாத்தின் படையில்
முறையாகச் சிக்கிடவே மாநபியும் நினைத்து
முனைப்பாக அதற்கான முயற்சிதனைச் செய்தார்



Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

492. புனிதமிகு றமழானின் பத்தாம்நாள் நபிகள்
புண்ணியத்தின் தோழருடன் புறப்பட்டார் மக்கா
அணியணியாய் படையினுக்கு ஆட்களுமே சேர
அண்ணல்படை பெரும்படையாய் ஆகியேதே அங்கு

493. "அல்குகைது" என்னுமிடம் அண்ணலரும் அணுகி
ஆங்கேயே நன்பகலின் ஆனதொழு கையினை
நல்முறையில் நிறைவேற்றி நன்றேநீர் அருந்தி
நோன்பதனைத் திறந்திட்டார் நண்பர்களும் திறந்தார்

494. உத்தமநபி யுடனங்கு உடன்பாடு காண
உலுத்தனபு சுப்யானுடன் அப்துல்லா பின்உபை
சத்தியவி ரோதிகளிவர் சந்திக்க வரவே
சிறப்புடனே மன்னித்தார் சாந்திநபி இவர்களை

495. மன்னித்த மாநபியால் மகிழ்ச்சியிலே திழைத்த
மாகொடியோன் அபுசுபியான் மாநபியைப் புகழ்ந்து
பண்ணிசைத்துப் பெருமகிழ்வில் பூரித்துப் போனான்
பெருமானும் அவன்பாட்டின் பொருள்தன்னை நயந்தார்

496. படையணியும் பத்தாயிரம் பேர் என்றே கூடி
பாங்குடனே ராபி.்.எனும் பேரிடத்தை நபியும்
அடைந்திடவே ஆங்கே அப்பாசும் வந்தார்
அவரேகடை சிமுகாஜிர் ஆகிட்டார் அதனால்

497. மர்ரத்துல் ஸஹ்ரான் எனும்மலையிடத்தை அடைய
மேவிட்ட இரவதனால் மாநபியும் அங்கே
நிர்வாகச் சீரமைப்பாய் நவின்றிட்டார் தனித்தனி
நெருப்படுப்பு மூட்டியே நற்சமையல் செய்ய

498. பத்தாயிரம் நெருப்படுப்பைப் பார்த்திட்ட மக்காப்
பேர்வழிகள் இப்பெரும்படை பார்த்தேதான் பயந்தார்
இத்தரையில் என்செய்வோம் இனியாமும் என்று
இதயமே உடைந்தவராய் இத்தரைமீ தானார்


Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

499. போருக்கே போகாமல் பெருந்தஞ்சம் ஆனோர்
பெறுவாரோ அபயம்எனப் பெருமானின் இடத்தில்
தாருங்கள் பதிலென்று தந்தைசுப்யான் கேட்க
தந்திட்டார் நபியாரும் தகுவிடைகள் இதோ

500. தனியோனின் க..பாவில் தஞ்சமே ஆனோர்
தர்மமதைத் தாங்கிவாள் தன்னைஎந் திடார்
இனிதேதான் பெற்றிடுவர் இங்கபயம் என்று
இறசூல்நபி உரைத்திட்டார் இனியபதில் அங்கு

501. அப்பாசும் அவ்வேளை அண்ணலிடம் பரிந்து
அபுசுப்யான் தன்னையுமே அணிசெய்யக் கோர
இப்படியே அபுசுப்யான் இல்லத்திலும் தஞ்சம்
இருந்திடுவோர்க் கும்அபயம் இங்குண்டு என்றார்

502. மக்காவை வந்தடைந்த மாற்றமிகு சுப்யான்
மக்கள்முன் நின்றபடி மாநபியும் அறைந்த
தக்கதொரு காப்பாகத் தன்வீட்டில் வருவோர்
தஞ்சமே பெற்றிடுவர் திருநபிகூற் றென்றார்

503. மாபெரிய படையொன்று மாநபிதலை மையிலே
மக்கமா நகருக்கு மேவிவரு கிறதே!
ஆபத்து எமக்குண்டு அதைத்தடுக்க முடியா
அறைந்திட்டான் அபுசுப்யான் ஆங்குற்றோர் நடுங்க

504. அறைந்திட்ட கூற்றெல்லாம் அபுசுப்யான் மனைவி
அப்படியே கேட்டேதான் அறிவிழந்து கனவர்
முறையாகப் பிதற்றுகிறார் மாய்த்திடுவீர் இவரை
மாபாவி பேய்போன்று முழங்கிட்டாள் அங்கு

505. புனிதமிகு றமழானில் புலர்ந்துதான் வந்த
பதினொன்றின் ஈர்மடங்கின் பேர்வெள்ளி தன்னில்
இனிதேதான் படைநடத்தி இரத்தமே சிந்தா
இறையில்ல மக்கநகரை இறசூல்நபி அடைந்தார்


Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

506. இதன்பின்னே இறசூல்நபி இனிதேக.'. பாவின்
இதமான முற்றத்தை இன்பமுடன் அணுகி
அதனைக்கஸ் வாவிலேல அமர்ந்தபடி எழுமுறை
அழகேவலம் வந்தார்கள் அகமெல்லாம் உவக்க

507. இப்றாகிம் நபிதொழுத இனியதலம் நபியும்
இனிதமர்ந்து இறையில்லாம் இதன்திறப்பைப் பெற்றிட
அப்போதில் பிலாலை அண்ணலரும் அணுப்ப
அதைக்கொடுக்க உதுமான்தாய் அப்படியே மறுத்தாள்

508. திறப்பதனைப் பெற்றிடவே திருநபியின் தோழர்
திறனாராம் அபுபக்கர் திடஉளமாம் உமர்
விரைந்தங்கு வந்திடவே வனிதையவள் திறப்பை
வாஞ்சையுடன் வழங்கியே வசந்தமும் உற்றாள்

509. இறையில்லம் தனைத்திறந்து இறசூல்நபி நாதர்
இன்பமுடன் உள்நுழைந்து இடமெல்லாம் நோக்க
புறாவுருச் சிலையொன்று புலர்ந்திடவே கண்டு
பற்றியதைப் போட்டுடைத்து புறமேதான் எறிந்தார்

510. இறைஇல்லம் தனில்இருந்த இறையெனும்சிலை களையும்
இறைதூதர் நபியவர்கள் இவ்வாறுடைத் தெறிந்தார்
கறைகொண்ட சித்திரத்தைக் கழுவியற்றி விட்டார்
கருணையிறை ஒருவன்எனக் காட்டிட்டார் அங்கு

511. இறையைத்தொழும் இனிதிடமாய் இலங்கக்க.'. பாவை
இறசூல்நபி இனிதமைத்து இப்போபி லாலை
முறையாக அழைத்திடுவீர் மக்களினைத் தொழவென
மொழிந்திடவே அன்னவரும் மொழிந்தாரே பாங்கு

512. பாங்கதனைக் கேட்டஇரு பாதகத்துப் பேர்கள்
பங்கமுடன் இருந்தேதான் பகன்றிட்டார் அங்கு
ஈங்குயாம் இதுபற்றி இயம்பிடவே மாட்டோம்
இறசூல்நபி அறிந்திடுவார் இயம்புமெம்மொழி என்றார்


Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

513. இக்காலை இறசூல்நபி இவ்விடத்தே வந்தார்
இருதீயர் கதைத்ததனை இயம்பிட்டார் நன்கு
அக்கறையாய் அவ்வேளை அபிசுபியான் இஸ்லாம்
ஆகிடவே அண்ணலரும் அகமகிழ்வு கொண்டார்

514. தொழுகையினைப் பெருமானார் தோழர்களும் தொடர
தொழுதுவிட்டு அமைதியது தழுவிடவே இருந்தார்
அழகுமருகர் அலியவரும் அண்ணலிடம் வந்து
ஆண்டவனின் இல்லத்தின் அருந்திறப்பைக் கேட்டார்

515. அண்ணலரும் அதைமறுத்து அதுகாத்து வந்த
அறவாளர் உதுமானிடம் அத்திறப்பைக் கொடுத்தார்
உன்னதமாம் இப்பொறுப்பை உம்குடியே வைத்து
ஒழுங்காகச் செய்திடவே உபதேசம் செய்தார்

516. தண்ணீரை யாத்திரிகர் தமக்கெல்லாம் வழங்கும்
தக்கபெரும் பொறுப்பதனை தன்சிறிய தந்தை
உன்னதத்து அப்பாசுக் குவந்தளித்த நபிகள்
உயர்வான இப்பணிக்காய் உபதேசம் புரிந்தார்

517. பின்னர்நபி ஓரிறையைப் பின்பற்ற வந்த
பண்பாளர் இல்லமதில் பூண்டுள்ள சிலைகளை
ஒன்றுமிலா அளவினிலே உடைத்தேதான் எறிய
ஊர்முழக்கம் செய்திடவே ஒருவரினைப் பணித்தார்

518. அண்ணல்நபி அருந்தோழர் அபுபக்கர் ஆங்கே
அபுகுஹ.்.பா எனும்தமது அருந்தந்தை தன்னை
உன்னதமாம் நபியிடத்தே உடன்தாங்கி வந்தார்
உயர்கலிமா உரைத்தவரும் உயரிஸ்லாம் ஆனார்

519. பெருமானும் ஈற்றினிலே பிரியமாய்த் தமது
பார்வையிலே குறைசியரைப் பாங்குடனே கூட்டி
இறைமறையாம் இஸ்லாத்தின் இனிமைதனை எல்லாம்
இதமாக எடுத்தேதான் இயம்பிட்டார் அங்கே


Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

520. அண்ணல்நபி உரைதன்னை அகமுருகிக் கேட்ட
அக்குறைசிக் குலத்தாரும் அண்ணலரின் உறவும்
கண்ணீரைச் சிந்தித்தான் கருணைதனைக் காட்டி
கதியருள வேண்டுமெனக் கெஞ்சினரே நபியை

521. குறைசியரின் அழுகைஒலி கனமாக ஓங்க
கோமானும் அவர்களினைக் கண்னெடுத்துப் பார்த்தார்
நிறையவே கொடுமைகளை நித்தமுமே செய்த
நீசர்களும் நிறைந்ததிலே நிற்பதையும் கண்டார்

522. குற்றத்தைக் காட்டிநான் கொடுத்திடவோ தண்டணை
கொஞ்சமும்நான் விரும்பவில்லை கருணையே தந்தேன்
குற்றமெலாம் பொறுத்தேன்நான் கொடுத்தேன்மன் னிப்பு
கோமானும் உரைத்திடவே களிப்பேதான் அங்கு

523. மகிழ்வினிலே திழைத்திட்ட மக்களெலாம் உடனே
மாநபியைப் புகழ்ந்தேதான் மறையேற்கத் திரண்டார்
அகத்தினிலே நற்றெளிவும் அடைந்தவராய் ஆகி
அருள்மறையின் காவலராய் ஆகியே போனார்

524. இதன்பின்னே ஸ∴பாமலை இன்னரிய குன்றில்
இறசூல்நபி வந்தமர்ந்து இருந்திட்ட வேளை
இதமாக மக்களெலாம் இவ்விடத்தை நாடி
இந்நபியின் கரத்தினிலே இஸ்லாத்தில் இணைந்தார்

525. உகத்என்னும் யுத்தத்தில் உயிரையே இழந்த
உன்னதத்து கம்ஸாவின் உடலதனை நன்கு
தகத்தீரலை எடுத்தேதான் தின்றுதுப்பிய பெண்ணவள்
தீயோளாம் கிந்தாவும் திருநபிமுன் வந்தாள்

526. கருணைநபி கொடியோளாம் ஹிந்தாவையும் பொறுத்து
கருணையே காட்டிட்டார் காசினியில் வியப்பே
திருமறையை அவளேற்றுத் திருந்திட்டாள் அங்கு
திருநபியின் பெருந்தன்மை திகைப்பேதான


Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

527. தன்னுடைய பிர்அவ்ன்எனத் திருநபியும் உரைத்த
தீயோனாம் அபுஜஹ்லின் தனயரிக்ரி மாவை
மன்னித்தே மாநபியும் மறைதனிலே இணைத்தார்
மண்ணுலகும் மாவியப்பில் மூழ்கியதே இதனால்

528. தனக்குவஹி வருவதாய்ச் தாரணியில் சாற்றிய
தீயோனாம் அப்துல்லாஹ் சஅதாம்மையும் மாநபி
குணத்தோடு மன்னித்த குவலயத்துச் செயலும்
குறிப்பாகக் காட்டியதே கருணைதனை நபியின்

529. தன்மகளாரர் சைனப்பினது தன்னாவி போக
தன்ஈட்டி யால்தீண்டிய தீயோன்குவை ரிதினையும்
மன்னித்த மாநபியின் மாசெயலை மண்ணும்
மன்னிப்பின் மாசான்றாய் முழங்கிடுமே என்றும்

530. பதினைந்து தினங்களது பயகாம்பர் நபியும்
பதிமக்கா தங்கியங்கே புரிந்திட்ட புரட்சி
கதிநல்கும் இஸ்லாத்தின் காலடியில் புவியில்
கனநாடு மண்டியிடக் காரணமாய் ஆச்சு

531. மக்கநகர் மாநபியின் மலரடியில் வீழ
மதினாவில் இனிமேலும் மாநபிக்கு வாழ
அக்கறையே இராதென அறைந்தனரே மதினர்
அச்சேதி அண்ணலரின் அகமதுவும் அறிய

532. உள்ளமது வேதனையால் உந்திடவே நபியும்
ஒன்றாக மதினத்து ஊரவர்தமை அழைத்து
எள்ளளவும் சந்தேகம் எண்ணாதீர் யானும்
எம்அகபா உடன்பாட்டை என்றுமே காப்பேன்

533. உங்கள்பதி மதினாதான் உயிர்வாழும் எனது
உயர்பதியும் ஆகிடுமே உயிர்துறப்பின் எனது
அங்கமது அடங்குவதும் அப்பதியே ஆகும்
அறைந்தநபி கூற்றதனால் அகமகிழ்ந்தார் மதினர்


Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

534. ஏந்தல்நபி இதன்பின்னே ஏகிடவே மதினா
ஏற்றபல ஆயத்தம் எளிலுடனே செய்தார்
அந்தக்கணம் ஹுனைன்பதி அரக்கர்கள் போரிட
அவர்தலைவன் மாலிக்குடன் அவ்த்தாஸ்தளம் வந்தார்

535. பள்ளத்தாக் கொன்றின்வழி பெருமானார் படையும்
பாங்காகச் செல்லுகையில் பேரதிர்ச்சி ஆங்கே!
கள்ளமதாய் மலையிருந்து கணைதொடுத்தார் பகைவர்
கடுந்தாக்குதல் தாங்காமல் கலங்கினார் தீனோர்

536. களம்விட்டே ஓடிட்டார் கனபேர்நபி படையில்
காமில்நபி மீண்டுமே காத்திரமாய் அழைத்தார்
களவெற்றி ஈற்றினிலே கண்டிட்ட தீனோர்
கனிமத்துப் பொருட்களுமே கனதொகையாய்ப் பெற்றார்

537. போரில்தோற் றஹவாஸின் புகழிடமாய் ஆன
பொழில்நகராம் தாயிப்பினை பெருமானார் படையும்
பூராகச் சுற்றித்தான் பூண்டதுவே முற்றுகை
பகலிரவாய் இருபத்தோர் பெருந்தினங்கள் தானே!

538. இருபத்தோர் நாள்முற்றுகை இனியபயன் இன்றி
இருந்ததனால் நபிபெருமான் இப்போஜ ரானா
பெருநகரை நோக்கியே பயணமது பண்ணும்
பாங்கான முடிவெடுத்துப் பயணத்தைத் தொடர்ந்தார்

539. இவ்வேளை அண்ணலரை இனிதேதான் வளர்த்த
இன்னருந்தாய் ஹலிமாவின் இனியமகள் கைமா
அவ்விடத்தே வந்திடவே அகமகிழ்ந்து நபியும்
அரியபசும் போர்வைதனை அணிவித்தே மகிழ்ந்தார்

540. போரினிலே கிடைத்திட்ட பொருளினையும் ஆங்கே
பாங்கர்க்குப் பிரியமுடன் பங்கிட்டுப் பின்னர்
பூரிப்பாய்த் தம்மதினா புனிதபதி தன்னில்
பூமான்நபி பாங்கருடன் பாதமே பதித்தார்


Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

541. இஸ்லாத்தின் வளர்ச்சியது இமயமென ஆக
இதனாலே ரோம்நாட்டின் இராஜ்சியம் அழிந்து
அஸ்த்தமன மாகுமென அஞ்சிட்ட மன்னன்
அண்ணல்நபி மார்க்கத்தை அழித்திடவே முனைந்தான்

542. குப்பாதின் தலைமையிலே கனத்தபடை திரட்டி
குவலயத்தில் இஸ்லாத்தைக் குழியினிலே புதைக்கும்
தப்பான கணக்கதனைத் தானெடுத்தான் அப்போ
தலைவனாம் ரோமதனின் தலையில்லா மூடன்

543. படையெடுத்து ரோமர்கள் போருக்கு வந்திடும்
பேரதிர்ச்சிச் செய்தியது பெருமானின் காதை
அடைந்திடவே அன்னவரும் அருமைமிகு தோழரை
அழைத்தேதான் பள்ளியிலே ஆலோசனை செய்தார்

544. எதிரிகளும் தாக்கமுனே எதிர்த்துநாம் தாக்கி
எதிரிகளை வீழ்த்திடுதல் ஏற்றமே என்ற
கதிமிக்க கருத்துரையைக் காத்திரமாய் மொழிந்து
கண்டிடவே போர்வெற்றிக் கருத்துடனே நின்றார்

545. போருக்காம் செலவுகளைப் போக்கிடவே நபியும்
பாங்கர்களைப் பொருளுதவி பண்ணிடவே கேட்டார்
தாராள நோக்குடனே தந்திட்டார் தோழர்
தாகாநபி யவர்களுமே திழைத்திட்டார் மகிழ்வில்

546. பத்தாயிரம் திர்கமுடன் பாங்கான ஆயிரம்
பேர்ஒட்டகை உஸ்மானும் பேருதவி செய்தார்
சத்தியராம் அவ்ப்இப்னு அப்துல்ரஹ் மானும்
சீராய்நா லாயிரம்பொற் காசதனை அளித்தார்

547. தம்சொத்தில் பாதியினைத் தந்திட்டார் உமரும்
தானமாய்ச் சொத்தெல்லாம் தந்தாரபு பக்கர்
உம்குடும்பத் தேவைக்கு உள்ளதெது என்றே
உத்தமரும் கேட்கஇறை உடன்தூதரும் என்றார்



Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

548. பெண்களுமே போர்நிதிக்காய் போட்டிருந்த நகையை
பெரிதுவந்து கழற்றியே போட்டிட்டார் ஆங்கே
நன்றாக நிதியதுவும் நிறைந்திடவே நபியும்
நாயகனிடம் நல்லருளை நரர்இவர்க்காய்க் கேட்டார்

549. நபிபடையில் நாப்பதா யிரம்போர்கள் இணைந்து
நாசகரை மாய்க்கும்போர் நாட்டத்தில் திழைத்தார்
குபிரியத்தை மாய்க்கின்ற குறியுடனே தபுக்கை
குறித்தபடி நோக்கியே கோமானும் சென்றார்

550. சிரியாவின் எல்லையிலே செழுமையாய் இருந்த
சிறப்புமிகு தபூக்கை சென்றடைந்த தீனோர்
பொறுமையாய்த் தினங்களுமே பத்தங்கே தரித்தார்
போருக்காய் ரோமர்படை புலரவே இல்லை

551. போர்புரிய ரோமர்கள் புறப்பட்டு வருவது
பொய்யான சேதியெனப் புரிந்தார்கள் நபியும்
ஓர்தூதைப் பின்அருகுள உயரரசனுக் கணுப்பிட
உடன்வந்து உவகையுடன் ஒப்பந்தம் செய்தான்

552. பெருவெற்றிக் களிப்பினிலே பெருமானும் மூழ்கி
பதிமதினா மீண்டிடவே பயணத்தைத் தொடர்ந்தார்
பெருந்திரளாய் மக்களுமே பாதைவழி கூடி
பெருமகிழ்வாய் வரவேற்றார் பெருமானை ஆங்கு

553. தாயிப்நகர் மக்களுமே தீன்மறையை உவந்து
தம்தூதைத் திருநபிக்குத் தகுமுறையாய் அனுப்ப
தூயோனின் தூதரவர் தோழர்முகை ராவை
தாயிப்நகர் அனுப்பியங்கு தன்மறையை வளர்த்தார்

554. அகிலத்தில் பற்பலவாய் ஆனபெரும் குழுவின்
அருந்தலைவர் பலருக்கு அண்ணல்நபி பெருமான்
உகந்தமுறை மடல்வரைந்து உயரிஸ்லாம் ஏற்க
உயரழைப்பு விடுவதிலே உவகையே கொண்டார்


Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

555. பற்பலவாம் குழுக்களெலாம் பெருமானார் அழைப்பை
பாங்குடனே ஏற்றேதான் பாரில்இஸ் லாத்தைப்
பற்றிட்டார் இஸ்லாமும் பெருமளவில் பரவ
பெருமானார் நபியவரும் பெருமகிழ்வில் திளைத்தார்

556. புனிதமிகு கஜ்ஜதனைப் புரிந்திடவே நபியும்
பிரியமே கொண்டவராய் பதிமக்கா செல்ல
இனிதேதான் ஆயத்தம் இயற்றிடுதல் கண்டு
இதில்இணைய மக்களெலாம் இச்சைமிகக் கொண்டார்

557. ஒருஇலட்சத் திருபத்து நான்காயிரம் பேர்கள்
ஒன்றுதிரண் டிறுதிகஜ்ஜை உயர்வுறநிறை வேற்ற
பெருவாஞ்சை கொண்டேதான் பெருமானார் நபியும்
பயணத்தை வெள்ளியன்று பாங்குடனே தொடர்ந்தார்

558. அன்றிரவவர் துல்குலை.'.பா என்றழைக்கும் இடத்தில்
அயர்ந்தேதான் விடியலிலே அரும்வெண்மை ஆடை
என்றான இஹ்ராம்எனும் எழிலுடுப்பை அணிந்து
எளிலுடனே பயணத்தை எல்லோரும் தொடர்ந்தார்

559. பத்தாம்நாள் ஞாயிறுதினம் பாங்குடனே மக்கா
பதியடைந்த பெருமானார் பூரிப்பே உற்றார்
இத்தரையில் உன்னதமாம் இறையில்லம் தன்னை
இறசூல்நபி கண்டவுடன் இறைஞ்சிட்டார் இறையை

560. இறையேயுன் க.'.பாவெனும் இறையில்லம் என்றும்
இவ்வுலகில் மாண்புடனே இலங்கிடவே நீயும்
முறையாக உன்னருளை மேவிடுவாய் என்றே
மாநபியின் இறைஞ்சுதலும் மேவியதே ஆங்கு

561. உன்னதநபி கஸ்வாவெனும் ஒட்டகையில் அமர்ந்து
உயரிறையின் இல்லமாம் உன்னதக.'. பாவை
நன்முறையில் ஏழுமுறை நாடிவலம் வந்தார்
நேர்த்தியாய் கஜ்கடமை நிகழ்வுகளைச் செய்தார்


Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

562. தம்வாழ்வின் இறுதியினைத் தெரிந்திட்ட நபிகள்
தீனோரே உங்களையான் தரிசிக்கும் வாய்ப்பு
இம்மண்ணில் கிட்டிடுமோ இதுஒன்றும் அறியேன்
இங்குயான் செப்புவதை இங்கிலார்க் குரைப்பீர்

563. இவ்வாறு நபியவர்கள் இறுதிஹஜ்ஜில் தனது
இதமான உரைதொடங்கி இறைமறையும் இயம்பும்
எவ்வளவோ விடயத்தை எடுத்திங்கே உரைத்தார்
ஏற்றமிகு தோழரெலாம் ஏக்கமுடன் கேட்டார்

564. தன்னுரையின் இறுதியிலே தாகாநபி அவர்கள்
திரண்டிருந்த மக்களிடம் தீன்மறையை நானும்
நன்முறையில் நவின்றேனா நாயனவன் வினவின்
நீங்கள்எது சொல்வீரென நாட்டமுடன் கேட்டார்

565. நல்முறையில் நவின்றீரென நிச்சயமாய் உரைப்போம்
நாயகமே எனமக்கள் நவின்றிட்டார் அப்போ
வல்லோனே நீஇதற்கு வாய்த்தசாட் சியென
வள்ளல்நபி நாயகமும் விளம்பிட்டார் ஆங்கு

566. இறைமறையின் வசனமதும் இறங்கியது அப்போ
இன்றேதினம் உம்இஸ்லாம் இனியமறை தன்னை
முறையாக யாமுமே முற்றாக்கி வைத்தோம்
மறைவசனம் இதனாலே மாநபியும் மகிழ்ந்தார்

567. இறையும்நல் மாராயம் இயம்பியதால் தீனோர்
இன்பத்தில் திழைத்திட்டார் இன்னருந்தோ ழராம்
நிறைஞான அபுபக்கர் நபிமரணம் உணர்ந்து
நீடியதுயர் கொண்டேதான் நிலைகுழைந்து நின்றார்

568. புனிதமறை பூரணமாய் புவியான பின்னே
புனிதநபி பெருமானார் புவியிருக்கும் தேவை
இனிஇங்கே இராதென இனிதுணர்ந்து தானே
இன்னருந்தோ ழரபுபக்கர் இன்னலது கொண்டார்


Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

569. மூன்றுநாள் தங்கியபின் மினாவில் இருந்து
மாநபிகள் பெருமானார் மக்கநகர் மீண்டார்
ஆண்டவனின் இல்லமாம் அருங்க.'.பா சென்று
அதைஏழு முறைசுற்றி அகமகிழ்வும் கொண்டார்

570. இதன்பின்னே இறசூல்நபி இனியபதி மதினா
இனிதேகும் பயணத்தை இன்பமுடன் தொடர்ந்தார்
இதன்வழியில் கதீரெனும் இடத்தினிலே நபியும்
இன்னருமைத் தோழர்பால் இயம்பிட்டார் ஈதோ

571. உங்களைப்போல் ஓர்மனிதன் உலகினிலே நானும்
உயரிறைவன் விரைவில்எனை உலகிருந்து அழைப்பான்
உங்களுக்குத் திருமறையே உயரியவழி காட்டி
உரியபடி ஒழுகிடுவீர் உலகினிலே என்றார்

572. மதினநகர் மீண்டிட்ட மாநபியும் ஆங்கே
மன்னோனின் வழிபாட்டில் மிகையாகத் திழைத்தார்
பதிதுறந்து தான்செல்லும் பொழுதினையும் எண்ணி
பயணத்தின் ஏற்பாட்டில் பூரணமாய் நின்றார்

573. சுரத்துடனே தலைவலியும் செம்மலரை வாட்ட
சோர்வுற்று மைமூனா சீவியமனை தன்னை
விரைந்தார்கள் வள்ளல்நபி வருத்தமதும் ஆங்கே
விலகாமல் கூடித்தான் வாட்டியதே அதிகம்

574. அண்ணலரின் நலம்பேண அன்னையர்கள் ஆங்கே
அணிதிரண்ட போதினிலே அண்ணலரும் நயமாய்
என்மனைவி எவர்வீட்டில் ஏற்றமென யானும்
என்இவ்வே ளையிருக்க என்றேதான் கேட்டார்

575. இல்லாள்கள் எல்லோரும் இவ்வேளை ஆய்ஷா
இல்லமென இயம்பிடவே இறசூல்நபி பெருமான்
இல்லம் ஆய்ஷாஇடம் இனிதேக அலியும்
இவருடன்பஸ்ல் இனிதுகரம் ஈந்துமே சேர்த்தார்


Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

576. எம்பெருமான் இதன்பின்னே எழுகிணற்றுத் தண்ணீர்
எடுத்துவரச் செய்தேதான் ஏற்றமெனக் குளித்து
தம்உடலின் தூய்மையுடன் தயாளன் பள்ளி
தான்சென்று தொழுதுபதே சமும்தானே செய்தார்

577. சிரியநாட் டெல்லைக்கு சீரியஉ ஸாமா
சிறப்புறுநற் தலைமையிலே செலவைப்பீர் படையென
உரைத்திட்டார் நபியும்தன் உயரின்அந் திமத்தில்
உபதேசமும் நிறையவே உரைத்தாரிவ் வேளை

578. பத்துநாள் பிணியினிலே பாதிப்பே உற்ற
பயகாம்பர் நபியவர்கள் பதினொன்றாம் நாளில்
நித்தியஇறை யின்இல்லம் நாடிச்செல முயன்றும்
நிலத்தினிலே மயங்கிவிழும் நிலைக்கேதான் ஆனார்

579. அண்ணலரும் இப்போதில் அபுபக்கரைத் தொழுகை
அழகுறச்செயப் பணித்திடவே அவருமே அண்ணல்
நின்றுதொழு வித்தஇடம் நிம்மதிகுழைந் தோராய்
நிறைவேதான் செய்திட்டார் நாயன்கட மைதனை

580. பதினேழு முறைகள்தான் பாங்கரபூ பக்கர்
பெருங்கடமை தொழுகையினைப் பாங்காய்நடத் திட்டார்
அதனிடையே தொழுகைக்காய் அண்ணல்நபி மும்முறை
ஆங்காக அபுபக்கர் அகன்றிடமும் விட்டார்

581. சிரியநாட் டினுக்கேதான் சிறப்புறுபடை தன்னை
செலுத்தியே செல்வதற்காய் சிறியதாம் வயதின்
உரமிக்க தளபதியாம் உஸாமா வந்து
உத்தமநபி இடத்தினிலே உயர்விடையைப் பெற்றார்

582. அண்ணல்தம் மேனியது ஆனபெரும் சுரத்தில்
ஆகிடவே அண்ணலரும் அறைந்திட்டார் அப்போ
மன்னன்இறை நபிமாரை மாபெரும்சோ தனையில்
மண்ணினிலே ஆக்கிடுவான் மரபிதுவே என்றார்



Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

583. அன்னயவர் ஆயிஷா அண்ணலர்க்கு உடல்நலம்
அளித்திடவே நாயகனை அழுதிறைஞ்சல் கண்டு
அண்ணலரும் அதைத்தடுத்து அணைத்தெந்தன் பாவம்
அல்லாஹ்வே பொறுத்தென்னை அணைத்திடுவாய் என்றார்

584. திங்கள்ரபி யுள்அவ்வல் திகழ்பிறைபண் னிரண்டில்
திருநபியும் தம்வாழ்வைத் தாரணியில் முடித்தார்
பங்கமிலா முறையினிலே புனிதமறை தந்து
பாரதனை விட்டுமே பிரிந்துதான் சென்றார்

585. அருட்கொடையாய் அகிலத்திற் கானநபி இன்று
அகிலத்தை விட்டகன்று ஆகிட்டார் மரணம்
திருமறையைத் தந்திட்ட தாகாநபி இன்று
தரணிதனை விட்டகன்று தழுவினார் மண்ணறை

586. உலகத்தின் உயிர்ப்பென்றே உதித்தநபி இன்று
உலகத்தை விட்டகல உயிர்துறந்து போனார்
நலமெல்லாம் நானிலமும் நன்கடையச் செய்த
நாதர்நபி மரணத்தால் நானிலத்தைத் துறந்தார்

587. அண்ணல்மர ணித்தாரென ஆள்யாரும் சொல்லின்
அன்னவரை என்வாளால் அரிந்திடுவேன் என்று
உன்னதத்து உமரவரும் உரைத்தேதான் நின்றார்
உண்மைநிலை உணராத உயர்பக்தி நிலையால்

588. அண்ணலரும் அகிலத்தில் ஆனதொரு மனிதர்
அல்லாஹ்வின் நபிமார்கள் அனைவருமே உலகில்
மண்ணறையே சென்றுள்ளார் மரணத்தின் பிடியால்
மரணமே அடைந்துள்ளார் மாநபியும் இன்று

589. நன்முறையில் அபுபக்கர் நவின்றிட்டார் அதனால்
நல்விளக்கம் பெற்றேதான் நன்னிலைக்கு உமரும்
மண்மீதில் மீண்டிட்டார் மரணத்தை ஏற்றார்
மண்ணுலக நியதியென மனதினிலே தேர்ந்தார்


Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

590. பெருமானார் புவிவிட்டுப் பிரிந்தேதான் சென்ற
பொழுதினிலே மதினத்தார் பொதுப்படையாய்க் கூடி
தரமான கலிபாவைத் தங்களுக்குள் தேர்ந்திடும்
திடமுடிவை எடுத்தேதான் திரண்டிட்டார் ஆங்கு

591. அபுபக்கர் வீரருமர் அபுஉபைதா என்போர்
அதிர்ச்சிமிகு சேதியிதை அறிந்தங்கு சென்றார்
உபதேசம் அபுபக்கரும் உருக்கமாய்ச் செய்தே
உயர்கலிபா குறைசியரில் ஒருவர்க்கே என்றார்

592. உடனிருந்த உமர்அபுஉபை தாஇருவரில் ஒருவரை
உம்கலிபா என்றேற்க உரைத்தாரபு பக்கர்
உடனுமரோ அபுபக்கர் உயர்பொருத்தம் என்று
உரைத்தபடி அவர்கரத்தில் உயர்பைஅத் செய்தார்

593. உடனிருந்த எல்லோரும் உரியபடி அப்போ
உன்னதத்தபு பக்கர்கரம் உயர்பைஅத் செய்தார்
முடிவாக அபுபக்கர் முதற்கலிபா ஆனார்
முதலுரையில் அவ்வவையை மனமுருகச் செய்தார்

594. பெருமானார் நபிமுகம்மத் புனிதஉடல் தன்னை
பக்குவமாய் அலிஅப்பாஸ் அவர்புதல்வர் ஆன
சிறப்புமிகு பலுல்குதம்உ ஸாமாபின் சைத்துடன்
சிறந்தபணி யாள்ஷுக்ரான் சிறப்பாய்க்குளிப் பாட்டினர்

595. அன்னை ஆய்ஷாவின் அருமைமனை தன்னில்
அண்ணலரை அடக்கம்செய அகழியெனும் கபுரை
நன்முறையில் வெட்டியதில் நல்லடக்கம் தன்னை
நாயன்மறை மாந்தரெலாம் நக்முறையில் செய்தார்

596. ஏந்தல்நபி பெருமானின் ஏற்றமிகு உடலை
எடுத்துக்கபு ரில்வைக்கும் எழிலாம்செயல் தன்னை
ஏந்தல்மரு கர்அலியுடன் அப்துல்ரஹ் மான்பலுல்
எழில்கொண்ட உஸாமா என்போர்கள் செய்தார்


Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

597. பாடிட்ட காவியத்தில் பிறழ்வுகளைக் காணின்
பகன்றிடுவீர் பெரியோரே! பிழைநீக்கி யாலும்
நாடிமறு பதிப்பினிலே நன்னூலாய்த் தரவே
நல்லுதவி என்றிதனை நவில்வீரே எனக்கு

598. நாயகத்தின் வரலாற்றை நவில்கின்ற இந்நூல்
நானிலத்தே நீடித்து நல்முறையில் வாழி!
தூயவர்கள் உள்ளமெலாம் துலங்கியே வாழி!
தூயதொரு காவியமாய்த் தாரணியில் வாழி!

599. நாயகத்துக் காவியமாம் நந்நூலை என்றும்
நாடியே படிப்போர்கள் நானிலத்தே வாழி!
நேயமெலாம் நபிபெருமான் நாயகத்தின் மேலே
நாளுமே கொண்டிடுவோர் நன்றாக வாழி!

600. அல்லாஹ்வின் அருள்என்றும் அகிலத்தில் வாழி!
அவன்தூதர் நபிபுகழும் அழியாது வாழி!
வல்லோனின் கிருபையதும் வளமுடனே வாழி!
வரமென்றே காவியமீது வையத்தில் வாழி!

601. இறைமறையும் இவ்வுலகில் இனிதேதான் வாழி!
இறசூல்நபி நாமமதும் இலங்கியே வாழி!
குறையில்லாக் காவியமாய்க் குவலயத்தில் இந்நூல்
கூடியதாம் புகழுடனே வாழியவே வாழி!


Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org



பனித்துளியே ஆகியநான் பெருங்கடலாம் நபியைப்
பகன்றிடுதல் வேடிக்கைப் பணிதானே அறிவேன்
இனிய நபி நாயகத்தை இயம்பிடவே கவியால்
இதயமது நாடியதால் இச்செயலில் துணிந்தேன்.

புழுதிமண் ஆகியநான் பொற்பதியாம் நபியைப்
பகருவதோ பாரினிலே பைத்தியத்துச் செயலே
தழுவுகிற ஆசையினால் தானேதான் வந்தேன்
தக்கதொரு காவியமாய்த் திகழுமென எண்ணி

குப்பிவிளக் காகியநான் குவலயச்சூ ரியனைக்
குறிப்பிட்டுக் கவிபாடல் கூடாதே எனினும்
செப்புதற்கு எந்தனது சிந்தையே கூறச்
சொல்கின்றேன் கவியாகச் செம்மல்நபி தன்னை

சகதிநீர் ஆகியநான் சமுத்திரமாம் நபியைச்
செப்புதற்கு விளைந்ததுவோ சிந்தையிலாச் செயல்தான்
நிகரில்லா வாஞ்சையினால் நவிலுகிறேன் நானும்
நாயனவன் நல்லருளை நம்பியே நன்கு.

மூதூர்.எம்.எம்.ஏ.அனஸ்

ISBN 978-955-41569-0-6
9 789554 156906 >

Ben Vision Printers
0778802526

Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org